

கல்கி
1966
KALKI ஜனவரி 2
35



புது டயரா? அல்லது புதுப்பித்த டயரா?

வேற்றுமை காண்பது கடினம்

உங்களுடைய கார் டயர்களை ரீடிரெட செய்து, எவ்வளவு காலம் உபயோகிக்க
லாபமோ, அவ்வளவு காலம் உபயோகிக்கவே விரும்புவீர்கள். செலவு மிச்சம் ஒரு
புறம்; தோற்றத்திலும் கவர்ச்சியாக இருக்கும் டிவிஎஸ் ரீடிரெட். ஏனென்றால்,
பயிற்சி பெற்ற நபர்கள் டிவிஎஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றுகிறார்கள் அவர்கள்
உழைப்பு, உங்கள் சேவைக்கு.

டிவிஎஸ் — ரீடிரெடிங் செய்வதில்
இந்தியாவிலேயே மிகப்பெரிய ஸ்தாபனம்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்

TVS

(டிவிஎஸ் ஸ்தாபனம்) பங்களூர். கோயமுத்தூர். சென்னை புதுக்கோட்டை
செகந்திராபாத் திருநெல்வேலி

JWT/TVS/SL/2935

கல்கி

பொருளடக்கம்


விகவாவசு மார்கழி 18 ● ஜனவரி 2

★

பொறுமை இழப்பது கூட ஒருவித ஹிம்சைதான்; அது மட்டுமன்றி உண்மையான ஜனநாயகப் பண்பு வளர்வதற்கு இடையூறு விளைவிப்பதுமாகும்.

— காந்தி மகான்

★


இந்தியா பாகிஸ்தான்
இணைப்புப் பாலம்
ஜான்ஸன்-கோஸிஜின்
கம்பெனி நிர்மாணம்
நாசகாரிகள்
உற்பத்திசாலை
டி.என்.டி.
PK

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 25 ● இதழ் 23



புத்தாண்டு யோசனை

ராஜாஜி

ரங்கூனிலிருந்து 'ஹிர்து'ப் பத்திரிகையின் நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்: ''தாஷ்கெண்ட் பேச்சுக்கள் பயனுள்ளவையாக அமையும் என்றும், இந்தியா — பாகிஸ்தான் உபகண்டத்தில் அமைதியை உண்டாக்க உதவும் என்றும் லால்பஹாதுர் அவர்களும் பர்மா தலைவர் ஜெனரல் நெ வின் அவர்களும் நம்புகிறார்கள்.'' 'நம்புவது' என்பது இங்கு வெறும் விருப்பத்தை மட்டும் குறிப்பிடாமல், வாஸ்தவமாகவே எதிர்பார்க்கும் ஒரு விளைவையும் விசுவாச உணர்ச்சியையும் விருப்பத்தோடு சேர்த்துக் குறிக்கும் எனக் கருதுகிறேன்.

தாஷ்கெண்ட் சந்திப்பு நெருங்க நெருங்க, இச்சந்திப்பின் விளைவில் ருஷியாவின் நம்பிக்கை ஓங்கிக் கொண்டே வருகிறது என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிருபர் கூறுகிறார். இது மிகவும் மகிழ்ச்சியூட்டும் விஷயம். இப்படிப்பட்ட செய்திகளுக்கு ஆதாரம் என்ன என்பதை யெல்லாம் இப்போது நாம் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இதுபோன்ற செய்திகள் ஏதோ ஒரு குறிப்பிட்ட மனச்சார்பை உண்டாக்குவதற்காக எழுந்தவை என்றே வைத்துக் கொண்டாலும் சரி, அவை எனக்குப் புதிய ஊக்கம் அளிக்கின்றன. எனவே, என் 'கனவை' நான் திரும்பக் கூறுகிறேன். இந்தக் கனவு நம் காலத்திலேயே நனவானால் எவ்வளவோ நன்மையாக இருக்கும். பாகிஸ்தானும் இந்தியாவும் தெற்காசியாவில் ஜனநாயகத்துக்காக இணைந்து ஒத்துழைக்கும் இருநாடுகளாக விளங்க வேண்டும்; இவற்றிடையே வர்த்தகத் தடைகளோ, போக்குவரத்துத் தடைகளோ இன்றி ஒவ்வொன்றும் மற்றதன் உற்பத்தியை இட்டு நிரப்ப வேண்டும்; இருநாட்டின் மக்களும் இந்தியா — பாகிஸ்தான் இரண்டின் மேன்மைக்காகவும் ஊக்கமுடன் உழைக்க வேண்டும்; தடைகளோ, வரிகளோ, சுங்கங்களோ இவ்விரு நாடுகளையும் பிரித்து வைக்கக் கூடாது — இதுவே என் கனவு. ஒரு தேசம் உற்பத்தி செய்வதையே மற்ற தேசம் அநாவசியமாக உற்பத்தி செய்யாதவாறும், ஒவ்வொரு தேசமும் இந்த உபகண்டம் முழுவதற்குமாக அநுகூல நிலையில் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களை அந்த ஒரு தேசம் மட்டுமே உற்பத்தி செய்யுமாறும், இருநாட்டு உற்பத்திக்கிடையே மோதல்களும் விரயமும் இல்லாதவாறும் பாகிஸ்தான் — இந்தியா இரண்டுக்குமாக ஒரு பொது இட்டக் கமிஷன் வழி கூற வேண்டும்; சுங்க வரிகள் ஏதேனும் அவசியமாயிருப்பின் அவற்றை இரு நாட்டின் சர்க்கார் இலாக்காக்களும் பரஸ்பர ஆலோசனையின் மீது நிர்ணயித்து, வர்த்தகத் தடையில்லாத சூழ்நிலை துஷ்பிரயோகமாகாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும் — இவ்வாறு டிசம்பர் 5ந் தேதி கல்கி இதழில் யோசனை கூறியிருந்தேன். இதையே பிரதமர் அவர்கள் தாஷ்கெண்டுக்குப் புறப்படுவதற்கு முன்தினமாகிய புத்தாண்டு நாளன்று இவ்வருட யோசனையாக மீண்டும் கூறுகிறேன். காச்மீரப் பிரச்னை மட்டும் பிரதமரின் மனத்தை நிரப்பாமல், நிச்சயமாக நன்மை பயக்கக் கூடிய யோசனைகள் அவர் உள்ளத்தில் இப்போது வியாபிக்குமாக!

மிகவும் உணர்ச்சி வாய்ந்த சில தேசியவாதிகள் நமது உள்நாட்டு விவகாரங்களில் அந்நியர் தலையிடுவதை ஆட்சேபிக்கிறார்கள். ருஷியா எந்த யோசனையையும் தெரிவிக்கக் கூடாதென்றும், தாஷ்கெண்ட் சந்திப்பில் கலந்துகொள்ளக்கூடாதென்றும் அவர்கள் கருதுகிறார்கள். நல்லது; அவ்வாறாயின் இச்சந்திப்பு ஏன் தாஷ்கெண்டில் நடைபெற வேண்டும்? லால்பஹாதுர் அவர்களும்

ஜெனரல் அயூப்கானும் அடிதடிச் சண்டையில் இறங்கி விடாமல் பார்த்துக் கொள்வதற்காகவா கோ·ஜின் தாஷ்கெண்டுக்கு வர வேண்டும்? ஒழுங்கு நிலையை ஏற்படுத்தவும், சந்திப்பு நிகழும் அறையை அழகுபடுத்தி வைக்கவும்தான் ருஷியத் தலைவர் உதவலாமா? அவர் யோசனை கூறி சம்பாஷணைக்கு உதவக்கூடாதா? ருஷியத் தலைவர் சம்பாஷணையில் பங்கு கொள்ளக் கூடாது என்பது அபத்தம்; இந்தியா—பாகிஸ்தான் ஆகிய இருநாட்டின் அரசியலறிஞர்களுடைய கருத்துக்கும் இது முரணானது. சோவியத் ருஷியா ஆக்க ரீதியில் உதவ முடியும்; உதவவும் வேண்டும். இது குறுக்கீடு அல்ல; அவசியமாகத் தேவைப்படும் சகாயமே ஆகும். இருநாடுகளுக்கிடையே பெரும் பாலம் அமைத்தாக வேண்டியுள்ளது. இச்சமயத்தில் 'அந்நியர் தலையீடு' குறித்து உணர்ச்சிவசப்படுவது யுக்தமல்ல.

அந்நிய அரசுகள் — முக்கியமாக அமெரிக்கா, ருஷியா ஆகிய வல்லரசுகள் — நமது உபகண்டத்தில் சமாதானமும், முன்னேற்றமும் ஏற்படுவதில் அக்கறை கொள்வதை நாம் வரவேற்க வேண்டும். நம்மிரு நாடுகளிடையே நிலவும் சந்தேகச் சூழ்நிலையைத் தீர்க்க அவர்களது தலையீடே உதவி புரிய முடியும். அதே சமயத்தில் அமெரிக்கா — ருஷியா ஆகிய இருநாடுகளும் உலக விவகாரங்களில் பரஸ்பரம் நெருங்கிச் செயலாற்றவும் இது வழி வகுக்கக்கூடும்.

சபாஷ் சுப்பிரமணியம்! சபாஷ் அமெரிக்கா!

சபாஷ் போட்டு ரஸிக்கும் சங்கீத சீஸனில், செவிக்குணவு கிடைக்கும் போதிலேயே வயிற்றுக்கும் ஈயப்படும் என்கிற நல்ல செதியும் கிடைத்துள்ளது. இதற்குக் காரணமான அமெரிக்காவுக்கும், நமது மத்திய உணவு மந்திரிக்கும் சபாஷ் போடுகிறோம்.

அமெரிக்கா இதுகாறும் செய்து வந்துள்ள உதவிக்காக நாம் நன்றி பாராட்ட மறுப்பது நாட்டுப் பண்புக்கே விரோதமானது எனில், இந்த உதவிக்கு உள் நோக்கங்கள் கற்பிப்பது அதனிலும் இழிவாகும். துரதிர்ஷ்ட வசமாக நாட்டில் இத்தகைய சூழ்நிலையைச் சிலர் உருவாக்கி வருகிறார்கள். இத்துறையில் காங்கிரஸ் அக்கிராஸனர் அவர்களும் 'கைங்கரியம்' புரிந்து வருகிறார். இந்தப் போக்குக்குத் நேர்மாக எதிர் நீச்சல் போட்டுள்ள ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம் அவர்கள் 'வெறும் சித்தாந்தத்துக்காக நம் மக்கள் பட்டினி கிடக்க விடமாட்டேன்' என்று கூறி அமெரிக்கா சென்று, நல்லெண்ணமும் பெருத்த உணவு தானிய உதவியும் பெற்றுத் தந்திருப்பது பாராட்டத் தக்கது.

காங்கிரஸ் அக்கிராஸனரும் இப்போது தமது ஸ்தாயியை இறக்கிக்கொண்டிருக்கிறார்; 'வெளி உதவியையே சார்ந்திருந்தால் சுயபலத்தில் நிற்கிற ஆர்வம் போய்விடும் என்பதால்தான் உணவு இறக்குமதியை எதிர்த்தேன்' என்று அவர் பேசியிருக்கிறார். சுயமாகத் தேவையில் பூர்த்திபெற வேண்டுமென்ற இலட்சியத்தை யாருமே மறக்கவில்லை; மறந்து விடுவதற்குமில்லை. சுதந்திரக் கட்சி தன்னிறைவுக்காகத்தான் ஆதியிலிருந்தே பல யோசனைகளைக் கூறி அந்நியக் கடன்களை ஆட்சேபித்து வந்தது. ஆனால் ஆபத்துக் காலத்தில் மக்களின் முக்கியமான ஒரு பிரச்னையில், பழைய தவறுகளை மறந்து வெறும் சித்தாந்தத்தைக் கோஷிப்பதால் பயன் கிட்டாது.

இந்தியா உணவில் தன்னிறைவு பெற வேண்டுமென்பதில் அமெரிக்காவுக்கும் அக்கறை உண்டு. தங்கள் உதவி காரணமாக இந்தியாவுக்கு உணவு உற்பத்தியில் ஊக்கம் குன்றிவிடக் கூடாது என்று அமெரிக்க அரசாங்கம் அடிக்கடி கூறியிருக்கிறது. 'இந்தியா உணவு உற்பத்தியைப் பெருக்காமல் சோம்பியிருக்கிறது என்பதற்காக அமெரிக்க மக்கள் இந்தியாவின் பொருட்டு அதிகமாக உழைத்து அதிக உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பது எப்படி நியாயம்?' என்று கூட அமெரிக்கச் சட்டசபையாளர்கள் கேட்டிருக்கிறார்கள். எனவே அமெரிக்கா நம்மை ஆசை காட்டிக் கண்ணியில் இழுப்பதாகக் காங்கிரஸ் அக்ராஸனர் கவலைப்படுவதற்கு அவசியமில்லை.

இந்தியா விவசாயத்தில் தன்னிறைவு பெற வேண்டும் என வற்புறுத்திய போதிலும் நமது அவசரத் தேவையை உணர்ந்து, சம்பிரதாயக் கட்டுப்பாடுகளை யெல்லாம் இளக்கி, உடனடியாகப் பதினைந்து லட்சம் டன் தானியமும், அடுத்த ஆண்டுக்குள் ஒன்றரைக் கோடி டன் தானியமும் அனுப்ப முன்வந்துள்ள அமெரிக்காவை நன்றியுடன் பாராட்ட வேண்டியது நமது கடமை. நன்றி மறப்பது நன்றன்று என்பதையும், நன்றி மறந்தார்க்கு உய்வே இல்லை என்பதையும் வேதமாகக் கொண்டவர்கள் நாம்.

உணவுப் பற்றாக்குறையை நீக்குவதில் தைரியமாகச் செயலாற்றிய உணவு மந்திரி, சுயதேவைப் பூர்த்திக்கும் இதே போல் துணிச்சலுடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்புகிறோம். தாம் சென்னை ராஜ்யத்தில் ராஜாஜி மந்திரி சபையில் உணவு மந்திரியாக இருந்தபோது ரேஷனை ரத்துச் செய்து அமோக பலன் பெற்றதை அவர் மறந்துவிடக் கூடாது. இப்போதும் உணவுக் கட்டுப்பாடு நீக்கத்துக்கு அவர் வழி வகுக்க வேண்டும். இது விநியோகம் குறித்த விஷயம். இதற்கும் அடிப்படை உணவு உற்பத்தி. இன்றையப் பறிமுதல் சட்டங்கள் அமுலாகும் வரையில் பருவக் காற்றுக்கள் சாதகமாயிருப்பினும், உணவு உற்பத்தி பெருகுவது அசாத்தியம். இதை உணருகிற திறம் அரசாங்கத்துக்கு இருக்குமா என்பது சந்தேகமே!

ராஜாஜியின் கருத்துக்கள்

ஐயா,

கிராமக் கர்ணத்துடன் ஒரு டெபுடி தாசில்தார் உடன் வந்து கிராம மக்கள் அனைவரும் தங்கப்பத்திரம்வாங்கவேண்டும் எனக் கூறி வருகிறார். ஒவ்வொரு டெபுடி தாசில்தாரும் கிராமங்களுக்குச் சென்று குறிப்பிட்ட அளவு தங்கம் சேகரிக்க வேண்டுமென்றும், ஒவ்வொரு விவசாயியும் 20 கிராம் தங்கம் கொடுக்க வேண்டுமென்றும் மேலிடத்து உத்தரவு வந்திருப்பதாக அவர் கூறியிருக்கிறார்.

அவர்கள் ஒரு வீட்டுக்குச் சென்றிருந்த போது வீட்டுத் தலைவர் ஊரில் இல்லை. அவரது மனைவி மட்டுமே இருந்தார். அவ்வீட்டினர் 20 கிராம் தங்கம் கொடுக்க வேண்டுமென்பது சர்க்கார் உத்தரவுஎன்று டெபுடி தாசில்தார் கூறினார். அந்த அம்மாள் நில அபிவிருத்திக்காகத் தமது நகையையெல்லாம் விற்றுவிட்டதாகவும் கைவசம் தங்கம் ஏதும் இல்லை என்றும் கூறினார். அவ்வாறாயின் அக்குடும்பத்தினர் ரொக்கமாக இருநூறு ரூபாய் கொடுக்க வேண்டும் என்றும், அதைக் கொண்டு தங்கம் வாங்கப்பட்டு, அவர்கள் பேரில் அத்தங்கம் பத்திரத்தில் முதலீடு செய்யப்படுமென்றும் டெபுடி தாசில்தார் கூறினார். எழுத்தறிவில்லாத அந்த அம்மாள் என்னிடம் வந்து கூறியதன் மீது நான் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

குப்பனூர்
(சேலம் மாவட்டம்) கே. ராமசுவாமி

டிசம்பர் 23ந் தேதி 'ஹிந்து'வில் மேலே கண்டுள்ள கடிதம் பிரசுரமாகி யிருக்கிறது. பாதுகாப்புக்காகச் சிறிதளவு தங்கம் சேகரித்துக் கிராம மக்களைக் கோபமுறச் செய்வது நல்லதா, அல்லது பெண்களின் உடம்பில் சிறிதளவு தங்க நகைகளை இருக்க அநுமதித்து மக்களின் கோபத்தைப் பெருமவிருப்பது நல்லதா என்பதே கேள்வி.

★

பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் துஷ்பிரயோகமாவதாக ஸுப்ரீம் கோர்ட்டும், பம்பாய் ஹைகோர்ட்டும் வலுவாகக் கண்டித்திருக்கின்றன. இதன் பின், பத்திரிகைகளும் இவ்விஷயமாகத் தைரியத்துடன் எழுதியுள்ளன. இக்காலத்தில் சிறிது தயக்கத்துடனேயே செயலாற்றி வரும் பத்திரிகைகள் வேகம் பெறுவதற்கு நீதி மன்றங்களின் உதவி தேவைப்படுவதாகத் தோன்றுகிறது.

★

கம்யூனிஸ சீனத்தின் விஸ்தரிப்பை எதிர்க்கும் நாடுகள், இது முக்கியமாகத் தங்கள் சுயபலத்தைச் சார்ந்தே செய்ய வேண்டிய காரியமெனக் கருதுகின்றன. இவ்வாறு எண்ணுவது இயற்கையே. தேசங்கள் இவ்வாறு சுயமரியாதையைக் காத்துக் கொள்வது நல்லதே எனினும், பிரத்யட்ச நிலைமையை உணர்ந்து தங்கள் பலத்தை மிகையாக எண்ணாமல் அடக்கத்துடன் செயலாற்றுவதும் அவசியம். 'ஹிந்து'ப் பத்திரிகை பின்வருமாறு கூறுகிறது:

> 'சமாதான சக வாழ்வில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை ஒளிவு மறைவின்றிக் காட்டி வரும் சீனம் போன்ற ஒரு ராணுவ வல்லரசைத் தடுக்க வேண்டிய நாடுகள் அந்நிய உதவி இல்லாமல் இதைச் செய்யுமளவுக்குப் பலம் பொருந்தியிருக்கவில்லை. இதை அவை உணர வேண்டும். எனவே, அவை அமெரிக்காவிட மிருந்தும், நம்மோடு பொது நோக்கம் கொண்டு சீன விஸ்தரிப்பைக் கட்டுப்படுத்தும் வசதி பொருந்திய மற்ற நாடுகளிடமிருந்தும் சக்தி பெற வேண்டும்.'

'மற்ற நாடுகள்' என்பது முக்கியமாக பிரிட்டனையும் ஜப்பானையும் குறிக்கும் என்பதை விளக்கத் தேவையில்லை.

மாவீரர் மறைந்தார்



முன்னாள் இந்திய ராணுவ தளபதியாகிய ஜெனரல் கே. எஸ். திம்மையா அவர்களின் திடீர் மறைவால் நம்மிடையிருந்த ஒரு மாபெரும் வீரரை இழந்து விட்டோம். இரண்டாவது உலக மகா யுத்தத்திலும், பதினெட்டாண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் காச்மீரத்தில் ஆக்கிரமிப்பு நடத்தியபோதும் போர்த் திறனில் தாம் பெற்றிருந்த பேராற்றலைக் காட்டியவர் அவர். அதன் பின் சமாதானப் பணிகளிலும் தமது திறம் சளைத்ததல்ல என்பதைக் கொரியாப் போரில் நாடு இழந்தோரின் புனர்வாழ்வுக் கமிட்டித் தலைவராக இருந்து நிலைநாட்டினார். கிரேக்கர்களுக்கும் துருக்கியர்களுக்குமிடையே நல்லெண்ணம் ஏற்படுவதற்காகச் சாதுரியத்தோடு ஸைப்ரஸில் பணியாற்றி வருகையில் அவர் மரணமுற்றது மிகவும் வருத்தத்துக்குரியது.

கிருபளானி விளக்கிய ராஜாஜி

இந்த விந்தையை என்னவென்று சொல்வது? இன்று நாற்பது வயது, ஐம்பது வயது ஆனவர்கள் எல்லாம்கூடத் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆனால் எண்பத்தெட்டுப் பிராயத்தை எட்டிப் பிடிக்கும் ராஜாஜியின் பிறந்த தினத்தை யொட்டி ஒரு விழா கொண்டாட வேண்டுமென்றால் ராஜாஜி மறுக்கிறார். அனுமதி கிடைப்பதில்லை. ராஜாஜியின் விருப்பத்துக்கு மாறாகவே பிறந்த தினவிழாவைக் கொண்டாட வேண்டியிருக்கிறது. இவ்வாண்டும் இதே போல்தான்.

ராஜாஜி விழாவில் இவ்வாண்டு ஆசாரிய கிருபளானி கலந்து கொண்டது விசேஷம்.

அவருக்கு எழுபத்தெட்டு பிராயம் ஆகிறது. ஆதிநாளைய காங்கிரஸில் செயற்குழு அங்கத்தினராகவும், செயலாளராகவும், தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார். ஆகவே, பழைய காங்கிரஸின் பெரும் தலைவர்களுள் ராஜாஜிக்கு அடுத்தபடி நம்முடன் இருப்பவர் ஆசாரிய கிருபளானி. அதனாலேயே ''காந்தி மகானின் வாரிசு நேருஜி'' என்று சொல்வது எவ்வளவு பேதைமை என்பதை அவரால் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் காட்ட முடிந்தது.

காந்திமகான் தாம் நடத்தி வந்த இந்திய சுதந்திரப் போராட்டம் தமது வாழ்நாளிலேயே வெற்றி பெறுவிடில் நமக்கு அடுத்தபடியாக — வாரிசாக — ஜவாஹர் தலைமை தாங்கி நடத்துவார் என்று குறிப்பிட்டாரேயன்றி அரசாங்கப் பதவியைக் குறிக்கவில்லை. ஏனெனில், அவர் குறிப்பிட்ட காலத்தில் அரசாங்கம் நம் கைக்கு வரும் என்று யாரும் கனவில்கூட கருத முடிந்திருக்காது. அதே சமயத்தில் ராஜாஜி தமது மனசாட்சியின் காவலர் என்று காந்திமகான் கூறியதைக் கவனிக்க வேண்டும். ஆனால் இப்படிச் சொல்வது மட்டும் ராஜாஜியைப் பூரணமாக விளக்கி விடாது என்று குறிப்பிட்டார் ஸ்ரீ கிருபளானி. எத்தனையோ சந்தர்ப்பங்களில் ராஜாஜி காந்திமகானின் மனச்சாட்சிக்கு அப்பாற்பட்ட திசையில் சென்றிருக்கிறார் என்பது நாடறிந்த விஷயம்.

ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கூறியவற்றை வைத்துக் கொண்டு அவற்றை நிரந்தரச் சத்தியம் போல் உபயோகிப்பது தவறு என்பதைத் தெளிவாக்கினார் ஸ்ரீ கிருபளானி.

ராஜாஜி அந்த நாட்களில் பிரிட்டிஷ் ஆட்சியினின்று தேசத்தை விடுவிக்கச் செய்த சேவைகளைக் காட்டிலும் இப்போது அவர் புரியும் சேவைதான் மகத்தானது. ஏனெனில் அந்நிய ஆட்சியின் கொடுமையைவிட மிக மிகக் கொடிது நம்முடைய சுதேச மக்களின் ஆட்சியில் இழைக்கப்படும் கொடுமை.

சுதந்திரம் பெற்று விடுவது பெரிதல்ல. அதைக் காப்பாற்ற நிரந்தரமாக விழிப்புடன் இருக்க வேண்டும். அந்த அரிய பாடத்தை நன்கு ராஜாஜி உணர்ந்திருப்பதால்தான் அவர் ஓயாமல் போராட்டம் நடத்தி வருகிறார் என்றார் கிருபளானி.

காங்கிரஸ் உயர்குழுவின் கருத்துக்கு மாறுபட்ட நிலையில் நிற்பதே ராஜாஜியின் பூர்வகால காங்கிரஸ் சரித்திரத்தை எடுத்துக் கொண்டாலும் முன்நிற்கிறது என்றார் பேராசிரியர் ரத்தினசுவாமி. அதனால் அவரை 'ஒத்துப் போகாதவர்' என்று குறிப்பிட வேண்டும்'' என்றார் ரத்தினசுவாமி.

ராஜாஜி ஒத்துப் போகாதவராயினும் மற்றோர் அம்சத்தில் மிகமிக ஒத்துப் போகிறவர் ஆயிற்றே' ராஜாஜி அன்றும் இன்றும் இந்தத் தேசத்தின் பண்புடன் ஒத்துத்தான் போய்க் கொண்டிருந்திருக்கிறார்.

அன்று காங்கிரஸும், இன்று அரசாங்கமும், நம் தேச மக்களின் கருத்து என்ன என்று தெரியாமல் தவிக்கிற போதெல்லாம் ராஜாஜி நாட்டு மரபின் பக்கம் நின்று பண்பின் பிரதிநிதியாகக் குரல் கொடுத்து வந்திருக்கிறார்!

முன்னுக்குப் பின் முரண்

தங்கப் பத்திரத் திட்டத்துக்கு மக்களின் மனப்பூர்வமான வரவேற்பு இருக்கிறது என்று முதன்மந்திரி கூறியிருக்கிறார். தினப் பத்திரிகைகளில் பிரசுரமாகும் கடிதங்கள் இதற்கு நேர் எதிரான உண்மை நிலவரத்தை எடுத்தியம்புகின்றன. ஏன், முதன் மந்திரியே இதைத் தாமறியாமல் ஒப்புக் கொண்டிருக்கிறார். தங்கப் பத்திரத் திட்டத்தில் கட்டாயக் கெடுபிடி எதுவுமில்லை என்றும் மக்களின் சுயேச்சையான பேராதரவு உள்ளது என்றும் கூறியுள்ள அவர், அதே கையோடு தங்கப் பத்திரத்துக்குக் கட்டாயமாக வசூலிப்பதற்காகச் சட்டமும் இயற்றப்படலாம் எனக் 'கோடி' காட்டியிருக்கிறார். இது முன்னுக்குப் பின் முரணாகும். இப்போது சட்டம் இயற்றாமலே 'தடி எடுத்தவன் தண்டல்காரன்' என்ற ரீதியில் காரியம் செய்வதைவிடச் சட்டப்படிக் கெடுபிடி செய்வது கூட சிலாக்கியமோ என்று நினைக்கத் தோன்றுகிறது என்கிறார் ராஜாஜி. இதனால் அவர் தங்கத் திட்டத்துக்கான சட்டத்தை வரவேற்கிறார் என்று யாரும் பொருள் கொள்ள மாட்டார்களென நம்புகிறோம்.

தங்கத் திட்டத்தை நிர்ப்பந்தப்படுத்துகிறார்களா இல்லையா என்பது ஒருபுறமிருக்க இது விஷயமாக யாரும் ஆட்சேபணை தெரிவிப்பதும்கூட நிர்ப்பந்த முறையில் அடக்கப்பட வேண்டும் என்று நம் ராஜ்ய உள்துறை மந்திரி நினைப்பதாகத் தெரிகிறது. சர்க்காரின் எந்த நடவடிக்கையை எதிர்த்தாலும், பாதுகாப்பு முயற்சிக்குக் குந்தகம் விளைவிப்பதாக அவர் கருதினால் நமது ராஜ்யத்தில் ஜனநாயகத்தை ஈசுவரன்தான் ரட்சிக்க வேண்டும்.



திருந்தச் செய்வதற்கு ஒருவர்

கி. சந்திரசேகரன்

சென்னையில் ஐம்பது ஆண்டுகளுக்குக் குறையாமல் நிறம்பட வக்கில் தொழிலைச் செய்து, பொதுப் பணியிலும் ஈடுபட்டவர்கள் மிகச் சிலரே. பொதுஜன சேவைக்கெனத் தொண்டாற்றிய சட்டநிபுணர்களான பெரியார்கள் அநேகமாக அந்த நாள் காங்கிரஸில் இருந்தவர்கள். அப்படியில்லாத இரண்டொருவரும் பெருமைப்படும் விதத்தில் செயலாற்றியுள்ளனர். சமீபத்தில் காலஞ்சென்ற ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசுவாமி ஐயர் அந்த இரண்டொருவரில் சேர்க்க வேண்டியவர்.

எண்பது வயதைத் தாண்டிய ஸ்ரீ கே. வி. கே. பதினைந்து வருஷங்களுக்கு மேலாக உடல்நலமின்றி, பேசக்கூட இயலாது கிடந்து விட்டார். எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகவும், தாமதத்தைக் கண்டால் துளியும் பொறுக்காத இயல்பினராய்ப் பொதுப் பணிகளில் ஆக்கவேலைகள் செய்தாரோ, அவரே அவ்வளவுக்கவ்வளவு பொறுமைக்கு ஓர் ஆதாரமாய், உட்கார்ந்த இடத்திலேயே தமது விருப்பு வெறுப்பொன்றையும் பிறரிடம் தெரிவிக்கக்கூட முடியாதவராகக் கடைசி சில ஆண்டுகளைக் கடத்தினர். இதைவிட மனத்தை உருக்கும் காட்சி வேறு இல்லை.

சட்ட நிபுணர்களில் நீதிபதிகளின்முன் சற்றேனும்அவசியமில்லாத பயங்காட்டியோ, முறையீடு செய்வது போலவோ பழக்கிக் கொள்ளாது திடமான குரலில் வாதாடி வியாஜ்ஜியங்களைச் சிறப்பாய் வென்ற வழக்கறிஞர் ஸ்ரீ கே. வி. கே. அவர்கள். என்றுமே சட்ட சூட்சமங்களை மிகவும் ஆற்றலுடன் பரிமளிக்கும் மாதிரியில் கோவைப்படுத்திக் கட்டியாடியவர். நீதிபதிகள் மரியாதையுடனும் கவனத்துடனுமே இவருடைய வாதங்களைக் கவனித்து ஏற்பர். இளைஞர்கள் கௌரவம் கெடாது தொழில் நடத்துவதற்கு வேண்டிய உயரிய கருத்துக்களைச் சேகரித்துப் புத்தகமாய் (Professional Conduct and Advocacy) வெளியிட்டுப் பெருமை பெற்றார்.

தமிழ் அகராதி உருவாகாத நிலையில் இவரைக் குழுவின் தலைவராய் நியமித்தது சர்வகலாசாலை சிண்டிகேட். அவ்வளவுதான்; உடனே வேலை விரைவாக நடந்து எட்டு பாகங்களுடன் அகராதி ஆறு வருடங்களில் வெளியாகியது.

சென்னை சங்கீத வித்வத் சபை, வருவாய் இல்லாத சிரமமும் செலவுத் திட்டங்களைக் கண்காணிக்காத குறையும் குன்றச் செய்த சமயம் - 1935ம் வருஷம் - இவர் அதன் தலைமைக்கு வந்தார்; சபையின் சிரமங்கள் விலகிச் சீரிய கலைச் சேவையை வித்துவான்களும் சங்கீத ரசிகர்களும் கூடிச் செய்வதற்கான வசதிகளை உடனேயே செய்தார். இன்று சென்னை சங்கீத வித்வத் சபை மட்டுமல்ல, சங்கீத வித்துவான்களும் இவருடைய சேவையை மனதாரப் போற்றும் படியான நிலையில் புகழ்பெற்று விட்டார்!

புத்தகசாலை இயக்கம் (Library Movement) என்பதைத் தொடங்கி அதனை வலுவாக நிலைநாட்டினார். புத்தகசாலை சம்பந்தமான சட்டத்தை உருவாக்க உதவிய இயக்கமாயும் இவரது தொண்டு சிறப்பெய்தியது.

சென்னை வக்கீல்கள் சங்கத்துக்கும் பேருதவி புரிந்தவர் ஸ்ரீ கே. வி. கே.

எதைச் செய்வதாயினும் செய்வன திருந்தச் செய்த பெருமையுடையவர் அவர். செய்நேர்த்தியில் அவருக்கிருந்த கண்டிப்பு காரணமாக அவருடன் வேலை செய்பவர்களால் அவருடைய வேகத்துக்கு ஈடுகொடுக்க இயலாது. ஆனால், பாரபட்சமின்றி எவரையும் தமது நெறிக்கு இணங்க வைத்த இவருடைய நிருவாக ஆற்றலை அனைவருமே போற்றி வணங்குவர்.

நேர்மை நெறியை ஒரு சிறந்த லட்சியமாய் வைப்பவர்களுக்கு இவரைப் போன்ற அனையாவிளக்கு நற்பாதையைக் காட்டி என்றும் ஒளிவீசும். உலகம் உத்தமர்களை இழந்து தவிக்கையில்தான் பொதுஜன சேவையும் சப்பென்றாகிவிடுகிறது. ஆயினும், கிருஷ்ணசுவாமி ஐயரைப் போன்ற, திருந்தச் செய்யும் ஒருவரைப் பெற்றதை உலகம் என்றும் மறக்காது.


சீரிய சுகாதார
வாழ்விற்கு
நெய்லர்
கேரமாக்
• விட்ரியஸ் சைனா
சானிடரி சாதனங்கள்
நாகரீக வாழ்விற்கு எழில்மிகு
நெய்லர் கேரமாக் சானிடரி சாதனங்கள்
ஒப்பற்றவை. உலகப்புகழ் பெற்ற
மேற்கு ஜெர்மனி கேரமாக் ஸ்தாபனத்தின்
கூட்டு முயற்சியின் விளைவு. இந்தியா
இதுவரை காணாத நெய்லர் கேரமாக்
சானிடரி சாதனங்கள். தூய வெள்ளை
தவிர வண்ண வண்ணச் சேர்க்கைகளில்
வனப்பு மிகுந்த சாதனங்கள் பல:
வாஷ் பேஸின்கள், ஐரோப்பிய கம்மோடுகள்,
யூரினல்கள், பான்கள், ஸின்க்குகள்
முதலியன. உறுதிக்கும் உழைப்புக்கும்
தலைசிறந்தவை. D. G. S. & D யினால்
அங்கீகரிக்கப்பட்டவை.
ISS 2556 - Part I க்கு
உட்பட்டவை.
தயாரிப்பாளர்கள்:
நெய்வேலி ஸெராமிக்ஸ் அண்டு ரெப்ராக்டரீஸ் லிட்
(சேஷசாயி துணை நிறுவனம்)
வடலூர் போஸ்ட் தென்னாற்காடு ஜில்லா

என்றுமுள்ள செந்தமிழுக்கு ஏற்றம் மிகுந்தது காணீர்!

தொல்காப்பியர் காலம் முதல் தற்கால இலக்கியம்வரை தமிழுக்கு என்றும் சிறப்புத் தானே? இப்போது புதிதாக அதற்கு என்ன விதத்தில் யார் ஏற்றம் தந்துவிட முடியும்? என்று நினைத்தோமானால் தவறில்லைதான். ஆனால் உண்மையிலேயே தமிழன்னை இதுவரை அடையாத ஒரு தனிச் சிறப்பை ஏப்ரல் மாதத்தில் பெறப்போகிறாள்!

இதுவரையில் தமிழைத் தமிழன் போற்றி வந்திருக்கிறான்; பாரத நாட்டிலுள்ள பிற மொழியினரில் தமிழறிந்த பலரும் தமிழின் சிறப்பைக் கூறத் தயங்கியதில்லை; அயல் நாட்டவரிலும் பலப் பலர் தமிழின் மேன்மையையும் தொன்மையையும் உணர்ந்து மதித்திருக்கிறார்கள். ஆனால் அயல் நாட்டு அரசாங்கம் எதுவும் தமிழுக்கு விழா எடுத்ததாக, அதிலும் மாபெரும் அளவில் ஒரு சர்வதேச விழா நடத்தியதாக நமக்கு நினைவில்லை. விரைவில் அத்தகைய அற்புதம் நிகழத்தான் போகிறது.

மலேசிய அரசாங்கத்தின் முழு ஆதரவுடன் மலேயா சர்வகலாசாலையும் தேசிய கல்வி அபிவிருத்தி (இந்தியப் பள்ளிகள்) கவுன்சிலும் இணைசேர்ந்து இந்த மிகப் பெரிய தமிழ் விழாவை நடத்தவிருக்கின்றன. ஏப்ரல் பதினேழு முதல் இருபத்திமூன்றும் தேதி வரை நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் ருஷ்யா, அமெரிக்கா, பிரிட்டன், ஸ்வீடன், ஜப்பான், இலங்கை, ஜெர்மனி, போர்ச்சகல், செக்கோஸ்லாவாகியா போன்ற பலப்பல நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து கலந்துகொள்ளுகிறார்கள். இந்தியாவிலிருந்தும் பல பார்வையாளர்களும் பிரதிநிதிகளும் செல்லவிருக்கிறார்கள்.

மகாநாட்டில் பங்கு கொள்ளும் சில தமிழறிஞர்களின் பெயர்களைப் பாருங்கள்: பேராசிரியர் சேவியர் தனிநாயகம் (மலேயா சர்வகலாசாலை இந்தியத் துறைத் தலைவர்) டாக்டர் கமில்சுவலபில் (திராவிடத் துறைப் பேராசிரியர், செக்கோஸ்லாவாகியா) பேராசிரியர் கார்ல் எச் மென்ஜெஸ் (கொலம்பியா சர்வகலாசாலை, அமெரிக்கா) தெ. பொ. மீனாட்சிசுந்தரம் (அண்ணாமலை சர்வகலாசாலை) டாக்டர் மு. வரதராசனார் (சென்னை பல்கலைக் கழகம்) — இப்படி எத்தனையோ தேசங்களைச் சேர்ந்த மொழி அறிஞர்கள் வந்து கூடும்போது அவர்களைத் தகுந்த முறையில் வரவேற்று உபசரித்து அவர்கள் தேவைகளைக் கவனித்துக்கொள்ள வேண்டாமா? இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் மகாநாட்டின் செயற்குழு செய்திருக்கிறது. மகாநாட்டுக்குச் சென்று திரும்புவதற்கான பிரயாணச் செலவைமட்டுமே பிரதிநிதிகளோ அல்லது அவர்களைத் தங்கள் சார்பில் அனுப்பி வைக்கும் ஸ்தாபனங்களோ ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்கே போன பிறகு பிரதிநிதிகள் மகாநாட்டின் விருந்தினராக இருக்கலாம். இந்த மாபெரும் விழாவில் கலந்து கொள்ளும் ஆர்வம் கொண்ட தமிழறிஞர்கள் இது சம்பந்தமாக மேலும் விவரங்கள் அறிய விரும்பினால் அவர்கள், காரியதரிசி, இந்தியாவுக்கான பிராந்தியக் குழு, சர்வதேச தமிழ் ஆராய்ச்சி மகாநாடு, 14/1, ''தமிழகம்'', ஸ்டெர்லிங் ரோடு, சென்னை-34 என்ற விலாசத்துக்கு எழுதலாம். தமிழபிமானம் மிக்க செல்வந்தர்கள் இங்கிருந்து தமிழ்ப் பேரறிஞர்களை அனுப்பி வைக்கப் பிரயாணச் செலவுக்கான பொருளுதவி செய்தும் உதவலாம். இந்த உதவி தமிழுக்கும் தமிழருக்கும், தமிழ் நாட்டுக்கும் ஏற்றம் தரும் உதவியாக இருக்கும்.


இத்தகைய ஒரு சர்வதேச மகாநாடு முதன் முதலாகத் தமிழகத்திலே நடக்க முடியாதபடி 'நெருக்கடி நிலைமை' தடையாக நிற்கிறதென்றாலும் இதுவே ஒருவிதத்தில் நன்மையாக முடிந்து விட்டிருக்கிறது. மலேசியா வாழ் தமிழர்களும் மலேசியா அரசாங்கமும் தமிழுக்கு ஒரு தனிப் பெருமையைத் தேடித் தந்திருப்பதுடன் தங்களையும் பெருமைப் படுத்திக் கொண்டுள்ளார்கள்.

பல்வேறு மொழியினரும் இம் மகாநாடு குறித்து ஆர்வம் காட்டிப் பொருளுதவி செய்ததன் விளைவாக ஏற்கெனவே ஒன்றரை லட்சம் மலேசிய டாலர்கள் மகாநாட்டுக்குச் சேர்ந்திருக்கிறது! ஓர் அமெரிக்க ஸ்தாபனம் மொழி ஆராய்ச்சி வல்லுநர்களான இரு அமெரிக்கர்களை மகாநாட்டுக்கு அனுப்பி வைக்கப் பிரயாணச் செலவுகளை மேற்கொண்டுள்ளது. இதேபோன்ற உதவியை நல்கத் தமிழ் நாட்டில் இந்தியன் பாங்கும் இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கும் முன் வந்துள்ளன.

மகாநாட்டில் அறிஞர்கள் ஆற்றும் ஆராய்ச்சிப் பேருரைகள் புத்தக வடிவிலே அச்சாகவும் இவையும் பிற சிறந்த தமிழ் நூல்களும் உலக மொழிகள் பலவற்றிலும் பெயர்க்கப்படவும் ஏற்பாடாகி வருகின்றன.


புதுதில்லியில் 1964ல் சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்கம் உருவாயிற்று. இந்தச் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாகத் தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில் நடைபெறவிருக்கும் இந்த முதல் மகாநாட்டை மலேஷியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களே தொடங்கி வைப்பார். மகாநாட்டின் நிர்வாகக் குழுவின் தலைவராகத் தபால் தந்தி இலாகா மந்திரி சம்பந்தம் அவர்களும் பொருளாதாரக் குழுவின் தலைவராகத் தொழில் மந்திரி மாணிக்கவாசகம் அவர்களும் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இத்துணைச் சிறப்புக்களுடன் நடைபெறவிருக்கும் இந்தத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்கு நமது முழு ஆதரவையும் அளித்து உயர்வோமாக.









புது உலகம் கண்டோம்!

துங்கபத்திரா நதியின் தெளிந்த நீரோட்டத்தைத் தடுத்தன ஆங்காங்கே ஆற்றின் மத்தியிலிருந்த பல பாறைகள். இதன் விளைவாக — நதி திசை திரும்பிய அந்தத் திருப்ப முனையில் — அது நுங்கும் நுரையுமாகச் சுழித்துக் கொண்டு பாய்ந்தது. சற்று எட்ட ஒரு பாறையின்மீது நின்று இந்த அழகிய காட்சியை ரசித்துக் கொண்டிருந்தோம் நாங்கள்.

'இங்கேயெல்லாம் முதலைகள் அதிகம்' என்றார் எங்களோடு வந்த உள்ளூர் வழிகாட்டி. ராமச்சந்திர ராவ் என்பது அந்தக் 'கைடி'ன் பெயர். வழிகாட்டிக்கு நாங்கள் பல இடங்களில் வழிகாட்ட வேண்டியிருந்தது வேறு விஷயம். பாவம், நல்ல மனுஷர்!


''உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் அவர்.


''தெரியாது!'' என்றேன்.

''என்ன தெரியாது?''

''நீ உங்களுக்குத் தெரியுமா என்று எதைக் கேட்டாயோ அது எனக்குத் தெரியாது; நிச்சயமாகத் தெரியவே தெரியாது.''

வழிகாட்டி கொஞ்ச நேரம் விழித்தார். அப்புறம், ''நான் என்ன சொல்ல வந்தேனென்றால் இந்தத் துங்கபத்திரை நதியில் முதலைகள் அதிகம். ஒரு சமயம் ஸினிமா ஸ்டார் நாகேசுவர ராவ் இங்கே ஹாய்யாக நீச்சலடித்துக் குளித்துக் கொண்டிருந்தார்.....'' என்று பீடிகை போட்டார்.





''அட ராமச்சந்திரா!'' என்றேன்.

''ஏன், என்ன வேண்டும்?'' என்று கைடு என்னு என்பதற்குமுன் என்னையாய் நின்று கேட்டார். ''அடப் பாவமே! உம்மைக் கூப்பிடவில்லை ஐயா நான். மேலே நடந்ததைச் சொல்லும். நாகேசுவர ராவை முதலை கவ்விப் பிடித்து விட்டதா? அப்புறம் காப்பாற்றியது யார்?''

''காப்பாற்றுவதாவது ஒண்ணாவது? முதலை வாயில் மாட்டிக் கொண்டவன் மீளமுடியுமா? அரோகரா தான்!''










நான் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தேன். ''அப்பனே! நாகேசுவர ராவ் இன்னும் எத்தனையோ நாட்கள் தீர்க்காயுசுடன் வாழ வேண்டியவர்.''

''ஆமாம். புண்ணியவான் நன்றாக வாழட்டும். அவர் நடிப்பு எனக்கு ரொம்பப் பிடிக்கும். நல்ல உபகாரியும் கூட.''

வழிகாட்டியைப் பற்றி எனக்கு ஏற்கனவே ஏற்பட்டிருந்த சந்தேகம் இப்போது வலுப்பட்டது. இருந்தாலும் அரையா முழுமையா என்று நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்பி, '' 'நன்றாக வாழட்டும்' என்று சொன்ன வாயாலேயே சற்று முன் அவரைச் சாக அடித்து விட்டாயே!'' என்று கேட்டேன்.

''ஐய்யய்யோ! நான் எங்கே அப்படிச் சொன்னேன்?'' என்று அலறினார் அவர்.

''பின்னே முதலே வாயில் அகப்பட்டுக் கொண்டு மாண்டார் என்றாயே, அது பொய்தானே?''





துங்கபத்திரா நதிக்கரையில் தங்கள் தலைநகரை ஏற்படுத்திக் கொண்ட விஜய நகர மன்னர்கள் விசேஷ தினங்களில் தங்கள் எடைக்கு எடை பொன்னும் மணியும் தானம் புரிவார்களாம். அதற்குப் பயன்பட்ட துலாபாரம் தான் உயர்ந்து நிற்கக் காண்கிறீர்கள் பக்கத்திலே. அப்படி ஒரு மகோந்நதமான காலத்தைக் கண்டிருந்த விஜயநகரம் இன்று அளிக்கும் தோற்றத்தை மற்ற படங்கள் புலப்படுத்துகின்றன.

"இல்லை, நிஜம்தான்! ஆனால் மாட்டிக் கொண்டது நாகேசுவர ராவ் இல்லை; அவருடைய டிரைவர். நாகேசுவர ராவ் கரையேறிய பிறகு அவர் டிரைவர் குளிக்கப் போனார். முதலை அவரை இழுத்துக்கொண்டே போய்விட்டது."

"அப்பனே! இன்னும் கொஞ்சநேரமானால் டிரைவர் கரையேறிய பிறகு கார் குளிக்கப் போயிற்று. அதுதான் முதலையிடம் அகப்பட்டுக் கொண்டு பிராணனை விட்டுவிட்டது என்பாய் போலிருக்கிறதே!" என்றேன்.

"ஸார்! நான் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தெரிகிறது. என்னைக் கிண்டல் செய்யறீங்க. அதோ பாருங்க முதலை!"

தூக்கிவாரிப் போட அவர் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பினேன். "எங்கே? எங்கே?" என்று கேட்டேன்.

"அதோ!"

"எங்கே காணோமே?"

"கண்ணைத் திறந்துகொண்டு பார்த்தால் அல்லவா தெரியும்?"

அப்போதுதான் பயத்தில் கண்களை இறுக மூடிக் கொண்டிருப்பதை உணர்ந்து அவற்றைச் சிரமப்பட்டுத் திறந்து நோக்கினேன். அவர் காண்பித்த இடத்தில் ஆற்றின் மீதாக ஒரு நுரைப் படலம்.

"பூ! வெறும் நுரைதானே இது?" என்றேன்.

"முதலை நீருக்கடியில் நீந்திப் போகும்போது அப்படித்தான் நுரை கூட்டம் மேலே மிதக்கும்."

நான் நம்பத் தயாராயில்லை. "அது முதலைதான் என்பது என்ன நிச்சயம்?"

"அது நகர்கிறதே?"

"நீரோட்டத்தின் விளைவாக அந்த நுரை கூட்டமும் நகரலாம். அதனடியில் முதலை இருப்பதாக எப்படி ஒப்புக்கொள்ளமுடியும்?"

"உறுதிப் படுத்திக் கொள்ள ஒரு வழி உண்டு!"

"என்ன அது?"

"உங்களைத் தூக்கி இந்த ஆற்றிலே போட்டு விடுகிறேன். முதலை உங்கள் தலையைக் கவ்வியதும் உங்களுக்கு நம்பிக்கை பிறந்துவிடும்!" 'கைடு' ராமச்சந்திர ராவ் கண்களை உருட்டி விழித்தார்.

"அது முதலைதான். முதலையேதான்!" என்று பலமாகத் தலையாட்டிக்கூறி 'அம்பேல்' விட்டு விட்டு அங்கிருந்து மெள்ள நழுவினேன்.

அது சரி, துங்கபத்திரா நதிக் கரைக்கு நீ எதற்காகப் போனாய்? அங்கே உனக்கு என்ன வேலை என்று கேட்கிறீர்களா?

ஆ! அதுதான் புதிர்! கல்கி நேயர்களுக்கு இந்தப் புதிரை விடுவிப்பது கஷ்டமேயில்லை. இந்தக் காலத்தில் எந்தப் பத்திரிகையில்தான் புதிருக்கு விடையை அதே பக்கத்தில் வெளியிடுகிறார்கள்? இந்த வழக்கத்தையொட்டி நானும் கூறுகிறேன், விடை: 18ம் பக்கம் காண்க!

ஆம், துங்கபத்திரா நதிக்கரையில் திரு அகிலனோடும் ஓவியர் வினுவுடனும் நான் புது உலகம் கண்டுகொண்டிருந்தேன். ஹம்பி என்று அழைக்கப்படும் விஜயநகரத்தின் இன்றைய நிலையைத்தான் பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் முன்னே தோன்றியது இடிபாடடைந்த கோயில்களும் மாளிகைகளுமா? இல்லை! வானளாவும் கோபுரங்கள். மாடிமேல் மாடியாக உயர்ந்து நிற்கும் மாட மாளிகைகள்! இந்நாளைய மவுண்ட்ரோடைப் போன்று மிக அகலமான சாலைகள். அதன் இரு புறங்களிலும் பலவிதப் பொருள்களிலும் வாணிபம் நடக்கும் கடைகள். முத்தும் மணியும் நவரத்தினங்களும் குவிந்து கிடக்கின்றன ஒரு புறம். பொன்னாபரணங்கள் மின்னுகின்றன மறு புறம். வெள்ளி, வெண்கலம், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், பட்டுத் துகில்கள், கலைப் பொருள்கள், உணவு வகைகள், அலங்காரத்துக்கான உபகரணங்கள், வாசனைத் திரவியங்கள். இன்னும் மனிதனுக்குத் தேவையான நவ நாகரிகப் பொருள்கள் அனைத்தும் அங்கே வாரி இறைத்தது போல் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் பார்வையிட்டுக் கொண்டு எவற்றை வாங்கலாம் என்று யோசித்தபடியே ஆரணங்குகள் ஒயிலாக நடக்கிறார்கள். வாலிப மிடுக்கும் கற்சிலை போன்ற திண்மையான உடலும் கொண்ட ஆண்களும் தங்கள் காதலிக்கு என்ன பரிசு வாங்கலாம் என்ற சிந்தனையுடன் நிதானம் காட்டி மெல்லவே அடி பெயர்த்து வைக்கிறார்கள். பல்லக்கில் பவனி வரும் அரசிளங் குமரிகளும் அவர்களுக்கு முன்னும் பின்னும் குதிரை வீரர்களும் காட்சி தருகிறார்கள். ரதங்களில் வரும் அமைச்சர்கள், ராஜ கம்பீரத்துடன் யானை மீது ஆரோகணித்து வரும் அரச குமாரர்கள் இவர்களெல்லாம் எங்களெதிரே தோன்றுகிறார்கள். ராஜ நர்த்தகிகள் தங்கள் கால்களில் அணிந்துள்ள சதங்கைகளால் கொஞ்சும் மொழி பேசுவதைக் கேட்க முடிகிறது. இன்னொரு மேன்மாடத்தில் இளம் காதலர்களின் கலகலப்பான சிரிப்பொலி எழுந்து போதையூட்டுகிறது. தன் வட்டக் கருவிழிகளை நயனங்களின் ஓரத்துக்குச் செலுத்திக் கள்ளத்தனமாய் நோக்கும் காரிகையினிடம் நம் மனம் கவர்ந்து இழுக்கப்படுகிறது. தேவாலயத்தின் மணி ஓசை 'ஓம் ஓம்' என்று அலை அலையாக நம் செவி குளிரப் பாய்கிறது. சைவரும் வைணவரும் ஜைனரும் இஸ்லாமியரும் அந்த விஜயநகரத்தில் ஜாதி மத வேற்றுமைகள், பகைமைகள் ஏதுமின்றித் தங்கள் தங்கள் இறைவனை அவர்களுக்கென்று ஏற்பட்ட வழிபாட்டுத் தலங்களில் தொழுவதைக் கண்ணுறுகிறோம்.

இவையெல்லாம் இன்றைய பரபரப்பு நிறைந்த — விண்வெளி யுகத்தில் வாழும் நமக்குப் புதுமையாக, ஏதோ ஒரு புது உலகத்துக்கே வந்துவிட்டோமோ என்று எண்ணும்படியாகத் தோற்றமளிக்கின்றன.

தலையை வேகமாகப் பல தடவைகள் உலுக்கி விட்டதுபோல் ஆட்டிக்கொண்டு சுயநிலைக்குத் திரும்புகிறோம். 1965ல்தான் வாழ்கிறோம் என்று உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பிப் பக்கத்தில் உள்ள ஒரு சோடாக் கடைக்குச்சென்று கோலி சோடா உடைத்துத் தரச் சொல்லி ஆளுக்கொன்றாகக் குடிக்கிறோம்.

சக்தி வாய்ந்த இந்த பிரஞ்சு ஔஷதம் திரும்பவும் உங்களுக்குக் கிடைக்கிறது.



ரத்தத்தைச் சுத்தப்படுத்துகிறது. தொல்லைதரும் நோய்களிலிருந்து நிவாரணம் அளிக்கிறது.

காலில் ஏற்படும் ரணங்கள், மற்றும் சொறி சிரங்கு, படை, முகப்பருக்கள், கட்டிகள், கொப்பளங்கள், சீழ்ப் புண்கள் போன்ற அநேக சரும வியாதிகளுக்கு மூலகாரணம் அசுத்தமான ரத்தம்தான்.

இந்த விதமான நோய்கள் பலவற்றிற்கு மேல்பூச்சாகக் களிம்பையோ மருந்தையோ தடவுவதால் பிரயோசனம் இல்லை. சில நாட்களில் வியாதி திரும்பவும் வந்து விடுகிறது. சிலர் ஒவ்வொரு வருஷமும் சொறி சிரங்கு, கட்டிகள், முகப்பருக்கள், கால் ரணங்கள், சீழ்ப் புண்கள் போன்ற நோய்களால் வருந்துகிறார்கள். இந்த வியாதிகளின் அடிப்படைக் காரணம் ரத்தத்தில் இருக்கிறது.

ரிச்லேஸ் பிளட் பியூரி:ஃபையர் (RICHELET'S BLOOD PURIFIER) சாப்பிட்டுப் பாருங்கள். ஆச்சரியகரமான அதன் சக்தியைக் கண்டு நீங்கள் அதிசயப்படுவீர்கள். சருமத்தின் ஆழமான பகுதிகளையும் அது சுத்தப்படுத்துகிறது. ரத்தம் சுத்தமாகிறது. விருத்தியாகிறது. மேல் புண்களும், படைகளும் மறைந்து சருமம் தனது இயற்கையான, ஆரோக்கியமான பளபளப்பைப் பெறுகிறது.

ரிச்லேஸ் லாக்ஸட்டிவையும் (RICHELET'S LAXATIVE) கல்லாஸ் ஆயின்ட்மென்டையும் (GALLA'S OINTMENT) உபயோகியுங்கள்.

ரிச்லேஸ்

பிளட் பியூரி:ஃபையர்

எல்லா மருந்துக் கடைகளிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.
விவரங்கள் அறிவிக்கும் இலவச அறிவிப்புக்கு (FOLDER) எழுதுங்கள்.

இந்தியா வெங்கும் ஏஜண்டுகள் தேவை. விண்ணப்பிக்கவும்:

இந்தியாவில் ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்:
மஹாஸ்வரி ஜெனரல் ஸ்டோர்ஸ்,
19/35, பெரிய கடை வீதி, கோயமுத்தூர்

EP.MG-1

மகோன்னதமான விஜயநகரத்தின் கடை வீதியில் இன்று நாம் காண்பது ஒரு மடக் கடையும் ஒரு சோடாக் கடையும்தான்.

''தாக சாந்தி செய்து கொண்டதும் அச்சுத ராயா கோயிலுக்குப் போவோமா?'' என்றார் கைடு ராமச்சந்திர ராவ்.

''அதிலே என்ன விசேஷம்?''

''ஒன்றுமில்லே; நோ ஐடியல்!

''மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள தெய்வ மூர்த்தம் ஏதும் இல்லே என்கிறாய். யு மீன் ஐடல்.''

''ஆமாம். நோ ஐடியல் என்றுதான் சொல்கிறேன்.''

அவரிடம் 'ஐடல்' என்றுதான் கூற வேண்டும் என்று தர்க்கம் செய்தால் மறுபடியும் என்னை 'முதலையிடம் தூக்கிப் போட்டுவிடுவேன்' என்று பயமுறுத்துவார் போலிருந்தது.

''வராஹஸ்வாமி கோயிலேப்போய்ப் பார்ப்போமா?'' என்றார் வழிகாட்டி.

''அதிலே என்ன விசேஷம்?''

''விசேஷமென்றுமில்லே. நோ ஐடியல்!''

''அப்பனே! 'ஐடல்' என்பதை 'ஐடியல்' என்று சொல்வதையே நீ உன் ஐடியலாக வைத்துக் கொண்டிருக்கிறாய் போலிருக்கிறது. உன் லட்சியம் வாழ்க! அது போகட்டும். ஒவ்வொரு கோயிலாகச் சொல்லிவிட்டு அதில் மூலஸ்தானத்தில் விக்கிரகம் இல்லே என்கிறாயே, எல்லாம் எங்கே போயிற்று? உண்மையைச் சொல்லிவிடு!''

''ஐயய்யோ! எனக்குத் தெரியவே தெரியாது. நான் எடுக்கவேயில்லே. சத்தியமாக நான் தொடவில்லே!'' மிரள மிரள விழித்தார் அவர்.

''உனக்கு ஒன்றும் தெரியாதது போல் நடிக்கிறாய்! பொய்தானே நீ சொல்வது...?''

ராமச்சந்திர ராவ் நடுக்கத்துடன் மடியை உதறிக் காட்ட ஆரம்பித்து விட்டார் இப்போது.

''இங்கே வந்த வேற்று நாட்டவர் இதையெல்லாம் இடித்து அழித்துவிட்டார்களாமே நிஜம்தானே அது?''

''அதுமட்டுமில்லே ஸார்!'' என்று இடையில் புகுந்தார் அகிலன். ''வேற்று நாட்டவரிஞல் அழிக்கப்படு முன்னர் அரசரின் ஆணைப்படியே பக்தியிற் சிறந்தவர்கள் இவற்றைத் தாங்களே அப்புறப் படுத்தியுமிருக்கலாம்!''

''இருந்தாலும் பொறாமை மனிதர்களை எப்படியெல்லாம் ஆட்டிப் படைக்கிறது. இந்த விஜயநகரம் எழும்ப எவ்வளவு பேர்கள் எத்தனை பாடுபட்டிருப்பார்கள்! அதை எத்தனை சுலபமாக அழித்து விட்டார்கள் வஞ்சகத்துடன் தருணம் பார்த்துக் காத்திருந்த விரோதிகள்!''

''அப்படியொன்றும் சுலபமாக அவர்களால் அழித்துவிட முடியவில்லே. விஜயநகரத்தின் கோயில் கோபுரங்களை, மாட மாளிகைகளை இடிக்க எத்தனையோ மாதங்கள் ஆயின.. சூறையாடவே பல மாதங்கள் பிடித்தன. செல்வங்களை வாரி வாரியும் அள்ளி அள்ளியும் எதிரிகளின் கைகள் சோர்ந்து போயின. கோயில்களையும் மாளிகைகளையும் கடப்பாறைகளால் தாக்கித்



''இப்போ என் தலேமேல் தண்ணீரைக் கொட்டினது எதற்காக? பாட்டுப் பாடியதற்கா அல்லது உங்கள் பெண்ணைக் காதலித்ததற்கா?''

''சொல்லித்தான் ஆக வேண்டுமோ?''

''ஆமாம்; பாட்டுப் பாடியதற்கு என்றால் உங்களுடன் நான் சண்டை போட்டாக வேண்டும்!''

தாக்கித் தோளெல்லாம் வலியெடுத்து விட்டன. அத்தனை தூரம் இடித்துத் தகர்த்த பின்னும் இன்னமும் நமக்கு விஜயநகரத்தின் பெருமையை உணர்த்திக்கொண்டு இத்தனை தேவாலயங்களும் மாளிகைகளும் இருக்கின்றன என்றால் அந்நாட்களில் இந்த இடம் எப்படிப்பட்ட ஒரு சொப்பன புரியாகத் திகழ்ந்திருக்க வேண்டும்?'' அகிலன் பரவசத்துடன் கூறிவந்தார்.

''ஆமாம், ஆமாம். இதையெல்லாம் தகர்த்தவர்கள் ரொம்பவும் சிரமப்பட்டுத்தான் இருக்க வேண்டும். ஹம்பியை வெறுமனே சுற்றிப் பார்ப்பதற்குள்ளேயே நமக்குக் கால் சோர்ந்து விட்டதே'' என்றேன் நான்.

ஹம்பியில் உருப்படியாக முழுமையாக எஞ்சியிருப்பன இரண்டொரு கோயில்கள் தான். அவையும் மகிமை குன்றி யாத்திரிகர்கள் அதிகமின்றி மிகவும் ஏழைமையான நிலேயில்தான் உள்ளன. ஆனால் சிதிலமடைந்தும் மூலஸ்தானத்தில் விக்கிரகங்களின்றியும் மூர்த்தங்கள் இருப்பினும் பூஜையின்றியும் உள்ள கோயில்கள் ஏராளம். இடிபாடடைந்துள்ள மாட மாளிகைகளுக்கோ கணக்கு வழக்கேயில்லே. ஹம்பியில் திரும்பிய பக்கமெல்லாம் ஒரு கோபுரம்! பார்த்த இடமெல்லாம் ஒரு மாளிகை! புரட்டிய கல்லெல்லாம் ஒரு கலே நுணுக்கம்!

மூர்த்தங்கள் இல்லாத கோயில் ஒவ்வொன்றினுள்ளும் அகிலன் அவர்கள் விசேஷ சிரத்தையுடன் நுழைந்து சென்று வெற்றிடமாக இருந்த பீடத்தைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டு திரும்பினார்.

''கோதண்டராமா கோயிலுக்கும் போவோமா?'' என்றார் வழிகாட்டி.

''வேண்டாம். அங்கே நோ ஐடியல்'' என்றேன்.

வநிசைப்படி அலட்சியமாகவும் பெருமிதத் தொடனும் ஒரு வெற்றிப் புன்னகையை என் மீது வீசினார். ''இடியல் உண்டு; வாருங்கள்'' என்றார். அப்புறம் பதில் பேச எனக்கு வாயேது? சாது போல் அவரைப் பின் தொடர்ந்தேன்.

நம்மை ஒரு சாது என்றுதான் வழிகாட்டி ராமச்சந்திர ராவ் வர்ணித்துக்கொண்டார், சந்நியாசி என்ற அர்த்தத்தில். ஆனால் கொஞ்சம் சினிமா மோகம் மட்டும் அவருக்குண்டு. ஹம்பிக்கு இதுவரை வந்துள்ள நட்சத்திரங்கள் யார் யார், அவர்கள் எந்தப் படங்களின் ஷூட்டிங்கையொட்டி அங்கே வந்தார்கள் என்பதெல்லாம் அவருக்குத் தண்ணீர்ப் பாடம்!

ஆயினும் எத்தனை சினிமாக்கள் எடுக்கப்பட்டால்தான் என்ன? விஜயநகரத்தின் சிறப்பை செலுலாய்ட் பிலிமில் முழுமையாகப் பதிவு செய்துவிடவா முடியும்? அல்லது எந்த ஓர் எழுத்தாளனும்தான் அதன் மகோன்னதமான காலத்தை வார்த்தைகளால் வழித்தெடுத்துத் தந்துவிட முடியும்? பக்கம் பக்கமாக வர்ணித்தாலும் போதாது; போதவே போதாது. கற்பனை உள்ளம் படைத்தவர்கள் ஹம்பிக்கு நேரில் போய் அங்குள்ள கலை வளங்களுக்கிடையில் உட்கார்ந்து நாட்கணக்கில் சிந்தனையை ஓடவிட்டால் ஒரு மாதிரியாக உணரலாம்.

நாலாபுறமும் மலைகள் சூழ்ந்து பாதுகாப்புக்கான சிறந்த அரணாகத் திகழும் ஓரிடத்தில் துங்கபத்திரா நதிக்கரையின் இயற்கை அழகு கொப்புளிக்கும் பிரதேசத்தில் தங்கள் தலைநகரை ஸ்தாபித்தனர் விஜயநகர மன்னர்கள். அந்த மலைகளிலும் ஒரு விசேஷம்: வெண்ணெயை உருட்டி வைத்தது போன்ற, ஆனால் அளவில் பெரிதான பல பாறைகளின் குவியல்கள் அம்மலைகள். வெண்ணெயாகக் கருதித்தான் அப்பாறைகளிடம் விளையாடியிருக்கிறான் சிற்பி. இத்தனை மலைப்பாங்கான, பாறைகள் மிகுந்த ஓரிடத்தின் மண்வளமோ நம்ப முடியாத அளவுக்கு உயர்வாயிருக்கிறது. இன்றைக்கும் அங்கே கரும்புச் சோலைகளும் பல ரக தானிய வயல்களுமாய் எங்கும் பசுமையை, செழுமையைக் காண்கிறோம்.

மாபெரும் விஜயநகர சாம்ராஜ்யத்தை உருவாக்கிய மாபெரும் மன்னனான கிருஷ்ண தேவராயன் எதையும் பெரிய அளவிலேயே சிந்தித்ததில் வியப்பில்லை. பிரும்மாண்டமான கல்ரதம் மிகப் பெரிய விநாயகர் சிலை, அண்ணாந்து பார்த்துக் கழுத்து வலி எடுக்கும் வகையில் நரசிம்மர் சிலை, மார்க்கண்டேயனாலும் கட்டிப் பிடிக்க முடியாதோ என்று நம்மை எண்ண வைக்கிற அளவுக்குப் பெரிதான சிவலிங்கம், மக்களுக்கு மன்னன் தரிசனம் கொடுக்க உபயோகித்த, ஒரு மரமளவுக்கு உயர்ந்தும் இடலளவுக்குப் பரந்தும் விளங்குகிற மேடை, ஐம்பதடி தூரத்தில் நின்றாலும் காமிராவுக்குள் முழுமையாக அடங்காத யானைக் கொட்டில் ராமாயணக் காவியம் முழுவதையுமே கல்லிலே வடித்திருக்கும் அழகு இப்படி எத்தனையோ சொல்லலாம். அனைத்திலும் உள்ள கலை அழகை இன்றைக்கெல்லாம் வர்ணிக்கலாம். அரசிகள் குளிக்க உபயோகித்த செயற்கைத் தடாகமும் உல்லாசமாக வாழ்ந்த கமல மஹாலும், பல நூறு அடிகள் தூரத்துக்கு நகர முழுவதும் தண்ணீர் கிடைக்கச் செய்யப்பட்டிருக்கும் வசதிகளும், துங்கபத்திரையைக் கடக்க அந்நாளிலேயே சமைக்கப்பட்டிருந்த பாலமும் கிருஷ்ணதேவ ராயரால் அமைக்கப்பட்ட மிகப் பெரிய ஏரி நீர்த் தேக்கமும், அவராலேயே எழுப்பப்பட்ட பல பெரிய மசூதிகளும் இன்னும் இவை போன்ற பலவும் விஜயநகரம் எந்த அளவுக்கு நாகரிக முன்னேற்றம் அடைந்திருந்தது என்பதைச் சான்று காட்டி விளக்குகின்றன.

மத மாற்சரியங்களை விட்டொழித்து, ஒன்றுபட்டு ஒத்துழைத்து ஆக்க வேலைகளில் ஈடுபட்டால் எத்தனை பெரிய சாதனைகளைப் புரியலாம் என்பதற்கும் மதத் துவேஷம், இனத் துவேஷம் இவற்றுக்கு ஆளாகியும் பொறாமைக்கு இடம் கொடுத்தும் தன்னிலை இழந்தால் எத்தகைய கொடுமைகள் இழைக்கப்படலாம் என்பதற்கும் — இரண்டுக்குமே — ஹம்பி எடுத்துக் காட்டாக இன்றைக்கு விளங்கி மனித குலத்தையே எச்சரிக்கிறது.

ஹம்பியில் எத்தனையோ அழகிய சிற்பங்கள் உயர்ந்த கலை நுணுக்கங்களுடன் விளங்கிய போதிலும் அவற்றிலெல்லாம் மிகச் சிறந்ததாகத் தாம் கருதிய பீமசேனனின் திருவுருவத்தை இவ்விதழ் மேலட்டையில் வண்ண ஓவியமாக அளிக்கிறார் கலைஞர் வினு. நாட்டில் இன்று நீடித்துக் கொண்டே போகும் நெருக்கடி நிலைமையையும் எல்லைப் புறங்களில் சூழ்கின்ற யுத்த மேகங்களையும் பார்க்கும்போது அவர் இந்தச் சிற்பத்தைத் தேர்ந்தெடுத்ததிலும் ஒரு பொருத்தம் இருப்பதாகவே தோன்றுகிறது. இந்தப் புத்தாண்டில் பாரத புண்ணிய பூமியின் பலம் பெருகட்டும்; இங்கு வீரம் விளையட்டும், அமைதி நிலவட்டும், சுபிட்சம் பெருகட்டும் என்று பிரார்த்திப்போம். — குட்டிகிருஷ்ணன்



உஸ்தாத் ஆஸ்ராம்
"அது
Osram
ஆஸ்ரம் தானா என்று
பார்ப்பதில் பலசம்
இருக்கிறது"
GEC உமது உத்திரவாதம்
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பி. லிமிடெட்

வெற்றித் திருநகர்

அகிலன்

அத்தியாயம் பத்தொன்பது

ஒற்றுமைக்குச் சோதனை

உலகத்தில் செயற்கரிய செயல்களைச் செய்து முடித்த பெரியார்களில் பலர் முதன் முதலில் தங்களை அந்தச் செயல்களுக்கேற்றவர்களாகச் சித்தப்படுத்திக் கொள்ளத் தவறியதில்லை. சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயர் இருபதே ஆண்டுகள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தும், அந்தக் குறுகிய காலத்துக்குள் அவரால் எவ்வாறு விஜயநகர சாம்ராஜ்யத்தை அவ்வளவு உன்னதமான நிலைக்கு உயர்த்த முடிந்தது என்று பலர் இன்னும் வியப்படைந்து வருகிறார்கள்.

ஆனால் அவர் தமது ஆட்சிக் காலத்தின் ஒவ்வொரு நாளையும் ஒவ்வொரு நாழிகையையும் எவ்வாறு ஒழுங்குபடுத்திப் பயன்படுத்தி வந்தார் என்பதை அறிந்தவர்கள் அவரது சாதனைகளைக் கண்டு திகைப்படைந்ததில்லை. கிருஷ்ணதேவராயர் என்ற ஒரே மனிதருக்குள் பேராற்றல் கொண்ட போர் வீரர், தலைசிறந்த ராஜதந்திரி, செங்கோல் நெறி தவறாத மாமன்னர், கவிதைகளை இயற்றும் புலவர், கலைஞர்களை ஆதரிக்கும் புரவலர் இப்படிப் பலப் பலர் இருந்தார்கள்.

தம்முடைய உடல், உள்ளம் ஆகிய புறக் கருவி, அகக் கருவி இரண்டையும் அவர் சிறந்த முறையில் பழக்கி வைத்திருந்ததாலேயே, அவற்றை அடிப்படையாகக் கொண்டு அவரால் எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்ய முடிந்தது.

விஜயநகரம் விழித்துக் கொள்வதற்கு முன்பாகவே அவர் விழித்துக் கொண்டு விடுவார். உடற்பயிற்சி, குதிரை ஏற்றம், வாட்பயிற்சி, நீராடல், இறைவனைத் தொழுதல், அரசாங்க அலுவல்களை மேற்பார்வையிடுதல், நீதி வழங்குதல், ஒற்றர்களிடம் விசாரித்தல், நகரப் பரிசோதனை இப்படிப் பல்வேறு செயல்களையும் அவர் திட்டமிட்டுக் கவனித்தார்.

உடற் பயிற்சியை முடித்துக் கொண்டு கிழக்கு வெளுக்கும் நேரத்தில் அவர் தமது வெண்புரவியின் மீது தாவி ஏறுவார். மெய்க்காவலர் சிலர் பின்தொடர விஜயநகரத்தின் குன்றுகள் சூழ்ந்த பகுதிகளில் அவருடைய வழக்கமான குதிரைச் சவாரி நடைபெறும். தமக்கும் தம்முடைய குதிரைக்குமாக அந்தப் பயிற்சி நடைபெறும்போதே, வழியில் அங்கங்கே தென்படும் ஆஞ்சநேயர் கோயில்களைக் கவனிப்பார். அந்தக் கோயில்களின் முன்பு சிறு கூட்டமாகக் கூடி நின்று விஜயநகரத்து இளைஞர்கள் உடற்பயிற்சி செய்து கொண்டிருப்பார்கள். சக்கரவர்த்திகளின் மேற்பார்வையிருந்ததால் அவர்கள் அதை எல்லையற்ற பூரிப்போடு செய்தார்கள்.

இராமாயணக் காப்பியத்தின் கிஷ்கிந்தா பர்வதம் விஜயநகரத்தைச் சார்ந்து, அந்த நகரத்தின் வடக்குக் கோட்டை மதிலாக உயர்ந்திருந்தது. காப்பிய காலத்து ஆஞ்சநேயரின் உறைவிடம் என்பதற்காக மாத்திரம் அவர் அங்கே ஆஞ்சநேயர் வழிபாட்டைப் பரப்பவில்லை. உடலுறுதி, நெஞ்சுறுதி, வீரம், இலட்சியப் பற்று, தியாகம் இவற்றுக்கெல்லாம் ஓர் இலக்கணமாக விளங்கியவர் அநுமார். விஜயநகரத்து இளைஞர்களின் இலட்சியமாக ஆஞ்சநேயரும் அவர்களது இராமராகக் கிருஷ்ணதேவராயரும் இருந்தார்கள். பின்னர் மகாராஷ்டிரத்தில் தீவிரமாகப் பரவிய ஆஞ்சநேயர் வழிபாட்டுக்கு முன்னோடியாக விளங்கியது விஜயநகர சாம்ராஜ்யமே.



வழக்கம் போலவே அன்றும் கிருஷ்ணதேவராயர் விடிவெள்ளி முளைக்கு முன்பே துயில் எழுந்து, பல் துலக்கி, சிறிதளவு நல்லெண்ணெய் குடித்து விட்டு கூடற்பயிற்சி செய்தார். பயிற்சி முடிந்தவுடன் வேர்வையைத் துடைத்துக் கொண்டு தம்முடைய வெண்புரவியை நோக்கி நடந்து வந்தார். நிபத் தானின் அருகே நின்று கொண்டிருந்த மெய்க்காவல் வீரர்களின் பக்கம் அவர் விழிகள் திரும்பின. விசுவநாதன் நகரத்தில் இருந்தால் அதிகாலையில் அவருடன் புறப்படுவதற்காக அங்கு வந்து விடுவான். இன்றும் அப்படியே அவன் வந்திருந்தான்.

விசுவநாதனை உற்றுப் பார்த்த சக்கரவர்த்தி சைகை செய்து அவனை அருகில் அழைத்தார். அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. முகம் என்னவோ போலிருந்தது. சக்கரவர்த்தி தமது கரத்தை அவனுடைய நெற்றியில் வைத்துப் பார்த்தார். இலேசாக அது சுட்டுக் கொண்டிருந்தது.

''இரவில் நீ சரியாக உறங்கவில்லை என்று தெரிகிறது. மானி·



மாளிகைக்குப் போய் நன்றாக ஓய்வெடுத்துக் கொள். நாளைக்குள் உடல் நிலை சரியாகி விட்டால், பிறகு நீ அரண்மனைக்கு வரலாம்.''

விசுவநாதன் தயங்கி நின்றான். சக்கரவர்த்தி புன்முறுவல் பூத்தவாறு, ''உடலையும் அதன் சக்திக்கு மீறி வாட்டிக் கொள்ளக் கூடாது; மனத்தையும் வீணாகக் கலங்க விடக் கூடாது. போய் வா!'' என்று அனுப்பி வைத்தார்.

சக்கரவர்த்தியும் மெய்க்காவலர்களும் புறப்பட்டுச் சென்ற பிறகு சோர்வுடன் மாளிகைக்குத் திரும்பினான் விசுவநாதன். கமலாதேவிக்கு அவன் இரவுப் பொழுதில் நெடு நேரம் கழித்து மாளிகைக்குத் திரும்பிய போதே கலக்கம் ஏற்பட்டிருந்தது. நாகமநாயக்கர் அங்கு இருந்திருந்தால் அவர் அவ்வளவு கவலைப்பட்டிருக்க மாட்டார். அவரும் பாண்டிய நாட்டுக்குச் சென்று விட்டதால் கமலாதேவியால் தமது குமாரனின் போக்கைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

விசுவநாதன் திரும்பி வந்தவுடன் படுக்கையில் சாய்ந்தான். அன்னையார் அவன் இரவில் எங்கு சென்று வந்தான் என்பதை அறிந்து கொள்ள முயன்றபோது அரசாங்கக் கடமையாகச் சென்று வந்ததாக மட்டிலும் கூறினான். துங்கபத்திரா நதிக் கரைக்குப் போய்க் காத்திருந்த விஷயத்தை அவன் யாரிடமும் வெளியிட விரும்பவில்லை.

அன்றைக்குப் பிற்பகலில் அவனுடைய அன்னையாரைக் காண வருகிறவள் போல் லட்சுமி அங்கு வந்து சேர்ந்தாள். கமலாதேவியிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவனைக் காண்பதற்காக அவனுடைய அறைக்கு வந்தாள். லட்சுமியை அங்கு கண்டவுடனேயே அவனுடைய சோர்வில் ஒரு பாதி தீர்ந்துவிட்டதுபோல் இருந்தது. எழுந்து உட்கார்ந்து பஞ்சணையில் சாய்ந்து கொண்டு அவளை வரவேற்றான்.

''பகல் உணவுக்கு மாளிகைக்குத் திரும்பி வந்த அப்பா உங்களை அரண்மனையில் காணவில்லையே என்று விசாரித்தார்களாம். அவர்கள்தாம் உங்களுக்கு உடல் நலமில்லை என்ற செய்தியைக் கூறினார்கள். இரவில் அவர்களே உங்களைக் காண வருவார்கள்.''

''இப்போதே எனக்குச் சரியாகி விட்டது; என்னைக் காண வேண்டிய சிரமத்தை அவர்களுக்கு நான் வைக்கப் போவதில்லை'' என்றான் விசுவநாதன்.

லட்சுமியின் மென்தளிர்க் கரம் தாமரை இதழைப் போன்று சில்லென்று அவனுடைய நெற்றியில் பட்டது. அவன் ஒருகணம் விழிகளை மூடிக் கொண்டு அதன் மென்மையை உணர்ந்து அநுபவித்தான். முன்பு அவனைக் கண்டபோதெல்லாம் முகத்தைத் திருப்பிக் கொண்டு ஒதுங்கிய அதே லட்சுமிதானா இவள்? அவளுடைய மனமாற்றம் அவனைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

''தாங்கள் இரவில் மாளிகையில் தங்கவில்லை என்று அத்தையார் மிகவும் வருந்தினார்கள்'' என்றாள் லட்சுமி.

'எல்லாம் உன்னுடைய தந்தையாரின் செயலைக் கண்காணிப்பதற்காக அலைந்த அலைச்சல்தான்' என்று அவளுக்குச் சொல்ல வேண்டும் போல் தோன்றியது. அப்படிக் கூறாமல், ''நேற்று நடந்த பேச்சின் முடிவு உனக்குத் தெரிந்திருக்குமே? மாமா எப்படி முடிவு செய்தார்?'' என்று கேட்டான்.

''உடல்நிலை சரியில்லாத போதும் உங்களுக்கு அந்த நினைவுதானா?'' என்று கேட்டுச் சிரிக்க முயன்றாள் லட்சுமி.

''கேட்டுத் தெரிந்து கொண்டால் முழுவதும் எனக்குக் குணமாகி விடும்.''

லட்சுமி இதைக் கேட்டுத் தனக்குள் வருந்தினாள். ''நீங்கள் விரும்புகிறபடி அந்த முடிவு இல்லாவிட்டால்....?''

''உன் அப்பாவின் முடிவு எப்படி இருந்தாலும் நீ என்னை முழுவதும் நம்பி இரகசியத்தை வெளியிடுகிறாய் என்பதே எனக்குப் போதும். அந்த ஆறுதலாவது எனக்குக் கிடைக்குமல்லவா?''

அவள் அப்பாவின் செயலை அவன் நேரிலேயே கண்டிருந்தான். என்றாலும் இராஜதந்திரியான அவர் சக்கரவர்த்திகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் மேலும் சில தூதுவர்களை ஏன் இரகசியமாக அனுப்பியிருக்கக் கூடாது? அப்படி ஒரு நம்பிக்கையும் அவனிடம் ஊசலாடத் தொடங்கியது.

லட்சுமி நெடுநேரம் தயங்கினாள். அவள் முகத்தையே கூர்ந்து நோக்கினான் அவன். கண்கள் கலங்குவதையும் கண்ணுற்றான்.

''ஏன் தயங்குகிறாய்?'' என்று கேட்டான் விசுவநாதன்.

''நீங்கள் இதைச் சக்கரவர்த்திகளிடம் கூடக் கூறக் கூடாது. அவ்வளவு இரகசியமாக இருக்க வேண்டும். சக்கரவர்த்திகளுக்குத் தெரிந்தால்...... தெரிந்து விட்டால்.......''

அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. அவளுக்குத் தொண்டையை அடைத்தது.

''லட்சுமி! நீ என்னிடம் சொல்வதற்கு அஞ்சினால் நான் உன்னை வற்புறுத்தவில்லை. சக்கரவர்த்திகளுக்குத் தெரிந்து விட்டால் எங்கே அப்பாஜிக்கு நேர்ந்த கதி உன் தந்தைக்கும் நேருமோ என்று நினைக்கிறாய். இந்த விஷயத்தில் சக்கரவர்த்தி யாருக்கும் கட்டளையிடவில்லை. எல்லோரும் முழுமனத்தோடு ஒற்றுமையாகத் திரண்டு வந்தாலே பாபரின் வடக்கத்தியப் படையெடுப்பை முறியடிக்க முடியுமென்று நம்புகிறார்கள். ஆகவே, உன் அப்பா சக்கரவர்த்திகளின் கருத்துக்கு மாறாகவே நடந்தாலும் அது கட்டளையை மீறியதாகாது'' என்றான் விசுவநாதன்.

''நீங்கள் இதைச் சக்கரவர்த்திகளிடம் கூறுவீர்களா?''

''நான் மட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்; அவ்வளவுதான்'' என்றான் விசுவநாதன். ''சக்கரவர்த்திகள் எதையும் தீர்க்க தரிசனத்தோடு நோக்குகிறார்கள்; அவர்களுடைய லட்சியத்தை அவர்களுடைய அமைச்சரும் தம்பியும் அமரநாயக்கர்களும் தெரிந்து கொண்டு ஒத்துழைத்தால் நல்லதென்று நினைத்தேன். மேலும் எனக்கு இந்த


அப்பாவின் சூட்டுகள்
டிராவுசர்கள்...என்றாலே
எனக்கு அதிகப் பிரியம்
TERENE
Castle Mills
AVAILABLE IN BOMBAY FROM
CASTLE MILLS' RETAIL SHOP
New Look 23 B, Sir P.M. Road
Beauforts Vir Nariman Road
Hall Mark Eros Cinema · Churchgate

பதட்டத்தின் அறிகுறியே இல்லை இப்பொழுது!





வலிதான் எங்கள் பிரச்சினை...உங்களுக்கு நாங்கள் உதவக்கூடிய விதம் இதுதான்!

ஆராய்ச்சி: 'ஆஸ்ப்ரோ' ஆராய்ச்சிக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சிக் குழுவின் தலைமை வகிப்பவன் நான். எங்களுடைய பணி வலியை நீக்க மேன்மேலும் சிறந்த முறையைக் கண்டுபிடிப்பதே. இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த ஊக்கம் கொண்டுள்ள உலகத்தின் முதன்மையான பல கழகங்களுள் எங்களுடையதும் ஒன்று. வலிக்கு, இக்காலத்தில், சிறந்த ஒரே விடை 'ஆஸ்ப்ரோ' பார்முலாதான் என்பதை நாங்கள் இன்று அறிவோம். அதனால்தான் அது உலக முழுவதும் உள்ள டாக்டர்களாலும் ஆஸ்பத்திரிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

வலி என்பது என்ன? உயிர்ப்பொருள் உடல் வேகத்திலும் மேலாக, மிக விரைவாகத் திசுக்களில் சேர்ந்து குவிந்து, ஒரு "மறை முகமான" வீக்கத்திற்குக் காரணமாகிவிட அது நரம்புகளை அழுத்துவதின் மூலம் வலி ஏற்படுகிறது.

'ஆஸ்ப்ரோ' இயங்குவது எப்படி? 'ஆஸ்ப்ரோ' உடனடியாக இரண்டறக் கலந்துவிடுகிறது—வீக்கத்தைத் தணித்து—நரம்புகளின் மீதிருக்கும் அழுத்தத்தைப் போக்கி—வலியை வெளியே இழுத்து விடுகிறது.

இவைகளுக்கு ஆஸ்ப்ரோ சாப்பிடுங்கள்: தலைவலி • நரம்பு வலி • உடல் வலி • பல் வலி • மூட்டு வலி • ஜுரவேகத்துடன்கூடிய தலைநோவும் • சீதளம் • ஃப்ளு.

அளவு:
பெரியவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவையானால் மீண்டும் இதே அளவில் உபயோகிக்கவும்.
குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டரின் சொல்படி.



'ஆஸ்ப்ரோ'

வலியை வெளியே இழுத்துவிடுகிறது!

A G. 14-65 TAM

விஷயத்தில் சக்கரவர்த்திகள் மற்றவர்களைக் கண்காணிக்கும்படி கட்டளையிட வில்லை. ஆகவே நான் கூறமாட்டேன்.''

இதைக் கேட்டவுடன் லட்சுமியின் அச்சம் சிறிதளவு நீங்கியது. ''பாமினி சுல்தான்கள் இதில் ஒத்துழைக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வதாக என் அப்பா அச்சுதராயருக்கு வாக்களித்திருக்கிறார்கள்'' என்றாள்.

சுட்டி பாய்ந்தது போல் இருந்தது விசுவநாதனுக்கு. லட்சுமி அவனிடம் மீண்டும் மீண்டும் மன்றாடி, அந்தச் செய்தி சக்கரவர்த்திக்குத் தெரியக் கூடாதென்று வேண்டிக் கொண்டாள்.

''இதை நான் கூற மாட்டேன்; சக்கரவர்த்திகளின் மனவலிமைக்கே பேரதிர்ச்சி தரும் செய்தி இது. இதில் அச்சுதராயரும் சம்பந்தப்பட்டிருப்பதால் சக்கரவர்த்திகளிடம் இதைக் கூறாமல் இருப்பதுதான் சாம்ராஜ்யத்தின் ஒற்றுமைக்கும் நல்லது'' என்றான் விசுவநாதன்.

லட்சுமியின் உள்ளத்தில் அவனுக்காக நன்றி உணர்ச்சி பொங்கியது. அவனோ சக்கரவர்த்தியின் துணையற்ற நிலைக்காக ஏங்கினான்.

அத்தியாயம் இருபது

இலட்சிய நம்பிக்கை

நாட்கள் சென்றன. சக்கரவர்த்தியால் பாமினி சுல்தான்களிடம் அனுப்பப்பட்ட தூதுவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. சக்கரவர்த்தி மட்டிலும் ஏதோ ஒரு நம்பிக்கையோடு டில்லியை நோக்கிப் படைகளுடன் செல்வதற்கென முன்னேற்பாடுகளை மளமளவென்று கவனித்து வந்தார்கள். ஏராளமான ஆயுதங்கள் செய்து குவிக்குமாறு கட்டளையிட்டார்; உணவுப் பொருளும் திரட்டிச் சேகரிக்கப் பெற்றது. விசுவநாதனை வைத்துக் கொண்டு, வடக்கத்திப் படையெடுப்பை முறியடிப்பதற்கென்றே திரவியங்களையும் தனியாகப் பேழைகளில் நிரப்புவதற்கு ஏற்பாடு செய்தார்.

திரவிய சேமிப்பை அரியநாத முதலியார் கணக்கெடுக்கச் சக்கரவர்த்தியும் விசுவநாதனும் தனித்திருந்து நேரில் கவனித்தார்கள். தங்க வராகன்கள், வெள்ளி நாணயங்கள், பல்வகை ஆபரணங்கள், நன்முத்துக்கள், வைரங்கள் இப்படி எவ்வளவோ பொருட்கள் திரட்டப் பெற்றன.

''இந்த நாட்டு வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பமாக இருக்கும் இந்தப் போர்!''என்று பூரிப்போடு கூறினார் சக்கரவர்த்தி. ''எப்படி ரெய்ச்சூர் போர் விஜயநகர சாம்ராஜ்யத்தின் வலிமையை உலகுக்கு வெளிப்படுத்தியதோ அதே போல் நாம் அனைவரும் ஒன்றிரண்டு நடத்தப் போகும் இந்தப் போர் பரத கண்டத்தின் வலிமையை உலகத்தின் முன் நிலைநாட்டப் போகிறது.''

சக்கரவர்த்தி விழாக் காலங்களில் விருப்பத்தோடு அணிந்து கொள்ளும் ஒரு நவரத்தின மாலையை அரியநாத முதலியார் எடுத்து, ''இந்த மாலையைக் கூடவா?'' என்று தயங்குபவர் போல் கிருஷ்ண தேவ ராயரிடம் கேட்டார்.

''ஆமாம், அதையும் பேழையில் சேர்த்து விடுங்கள். வீரத்திலும் சாகசத்திலும் தலை சிறந்து விளங்கும் வீரனுக்கு நாம் அதைப் பரிசாக அளித்து விடுவோம். அந்த வீரன் விஜயநகரத்து வீரனாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. பீஜப்பூர், கோல்கொண்டா, மற்ற எந்தப் பாமினி சுல்தானின் வீரனாக இருந்தாலும் சரியே! நம்முள் இருக்கும் வேற்றுமை, பகை, சந்தேகம் இவைகளெல்லாவற்றையும் முதலில் வெற்றி கொண்டு, அந்த வெற்றியோடு வடக்கு எல்லையிலும் வெற்றிகொள்ளப் போகிறோம்.''

அரியநாத முதலியாருக்கு அந்த நவரத்தின மாலையை மட்டிலும் பேழைக்குள் வைக்க மனம் வரவில்லை. அதன் மத்தியில் தொங்கிய வராகச் சின்னத்தையே ஒரு கணம் உற்று நோக்கினார். வளைந்து கூர்மையான பல் கொண்ட காட்டுப் பன்றியும், அதன் முன்னே சூரியச் சந்திரப் பிடி போட்ட கூர்வாளும் பொறிக்கப் பெற்ற பொற் பதக்கம் பளபளப்போடு மின்னியது.

''முதலியாரே, ஒரே ஒரு நவரத்தின மாலையைக் கொடுப்பதற்கு இவ்வளவு தயங்குகிறீர்களே! இந்த நாட்டுக் கோயில்களிலிருந்தும், அரசர்கள், குடிமக்கள் வீடுகளிலிருந்தும் எத்தனை ஆயிரம் நவரத்தின மாலைகளைக் கொள்ளை கொண்டு போயிருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? இனி எந்தக் காலத்திலும் அப்படி ஓர் ஆசை கொண்டு எவனும் இந்த மண்ணை மிதிக்கக் கூடாது. பகைவனிடம் நாடே பறிபோய் விட்டால் பிறகு யாரிடமும் எதுவுமே மிஞ்சாது.''

சக்கரவர்த்தி அளவுக்கு மீறிய நம்பிக்கை கொண்டிருந்தது விசுவநாதனுக்கே அச்சத்தைக் கொடுத்தது. பீஜப்பூர், பீடார், கோல்கொண்டா, அகமதுநகர், பீரார் ஆகிய ஐந்து பாமினி நாடுகளும் அப்போதே விஜயநகரத்துடன் சேர்ந்து பகைவரை எதிர்க்க முன்வந்துவிட்டது போல் அவர் ஆர்வத்தோடு அடிக்கடி பேசினார். அப்படி ஓர் அதிசயம் நடைபெறப் போவதில்லை என்ற எண்ணம் விசுவநாதனிடம் மட்டிலும் வலுப்பெற்றுக் கொண்டிருந்தது.

''ஒருவேளை நமக்குள் ஒற்றுமை ஏற்படா விட்டால்...?'' என்று மெல்லக் கேட்டு வைத்தான் விசுவநாதன்.

சக்கரவர்த்தியிடம் வேறு யாராவது இப்படிக் கேட்கத் துணிந்திருந்தால் அவர் கோபத்தில் பொங்கி எழுந்து சீறியிருப்பார். ஆனால் கேட்டவனோ விசுவநாதன். அவருடைய சிந்தனையின் ஒரு பாதியிலிருந்த சஞ்சலத்தையே அவனும் பிரதிபலித்தான்.



''பிறரும் நம்மாலானதை முடிந்தவரையில் தனியே செய்வோம். முடிவு எப்படி இருந்தாலும் அது இறைவனின் திருவருள் என்று விட்டுவிடுவோம். இறைவன் ஒருவன் தான். அவனை யார் எந்தப் பெயரில் அழைத்தாலும் அவன் ஒருவன்தான். அதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் நான் விட்டலராயர் ஆலயத்துப் புது மண்டபத் தூணில் என் சிலைகளோடு இஸ்லாமிய வீரர்களின் சிலைகளையும் சேர்த்துச் செதுக்கச் செய்திருக்கிறேன். இறைவனையும் அவன் பெயரால் உள்ள சமயத்தையும் கொண்டுதானே இப்போது வேற்றுமை பாராட்டிப் பகை வளர்க்கிறார்கள்? இந்துக்களும் இஸ்லாமியரும் இறைவனின் முன்னிலையில் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற என்னுடைய நம்பிக்கையைத்தான் நான் கல்லில் வடிக்கச் செய்திருக்கிறேன். — இறைவனை நீயும் சென்று வேண்டிக்கொள்: நாம் அனைவரும் ஒன்றாக நின்று போராடி வாழவேண்டுமென்று வேண்டிக் கொள்.''

இப்படிக் கூறும்போது கிருஷ்ணதேவராயரின் விழிகள் கலங்குவதை விசுவநாதன் கவனித்தான்.

விட்டலராயர் ஆலயத்தில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த புது மண்டபத் திருப்பணி அவன் நினைவுக்கு வந்தது. விஜயநகரத்திலேயே பெரும் பரபரப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்த நிகழ்ச்சி அது. இந்து மதத்தின் காவலர்கள் என்று தங்களை நினைத்துக்கொண்டிருந்தவர்கள் மிகவும் தீவிரமாகச் சக்கரவர்த்திகளின் போக்கை எதிர்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களால் சக்கரவர்த்தியின் முடிவை மாற்ற முடியாமற் போகவே, இஸ்லாமிய மதத் தலைவர்களைக் கொண்டு முறையிடச் செய்தார்கள். சக்கரவர்த்தி அவர்களைச் சந்தித்துத் தக்க விளக்கம் கூறிவிட்டு, ''இதை ஒரு காரணமாகக் கொண்டாவது உங்களுக்குள் ஓர் ஒற்றுமை தோன்றியிருப்பதை நான் வரவேற்கிறேன்!'' என்று அவர்களைப் பாராட்டி அனுப்பினார்.

விசுவநாதன் அன்றைக்கு மாலையில் விட்டலராயரின் ஆலயத்துக்குத் தனியே சென்றான். மனித முயற்சிகளுக்குப் பின்னே இருந்து இயக்குவிக்கும் மாபெரும் சக்தியிடம் சக்கரவர்த்திக்கு இருந்தது போலவே அவனுக்கும் நம்பிக்கை இருந்தது. ஏதாவது ஓர் அற்புதம் நிகழ்ந்து பாமினி கல்தான்கள் விஜயநகரத்தோடு ஒன்றுபட்டு நிற்கவேண்டுமென்று அவன் வேண்டிக் கொண்டான்.

புது மண்டபத்தின் தூண்கள் அப்போது தான் உருவாகி முடிந்திருந்தன. அந்தச் சிற்பங்களைக் கண்டவன் அப்படியே சிற்பங்களோடு சிற்பமாக மாறி நின்றுவிட்டான். ஒவ்வொரு திசையிலும் தாடியும் தலைப்பாகையும் கொண்ட இஸ்லாமியக் குதிரை வீரர்கள் குதிரை மீது பாய்ந்து தாவுவது போன்ற அற்புதச் சிற்பங்கள். அவர்களை அடுத்து அவர்களுக்குச் சரி சமமாக, அவர்களுடைய தோற்றத்திலேயே சக்கரவர்த்தி கிருஷ்ணதேவராயரின் சிற்பங்கள்!

இந்த நாடும், இதன் சமயமும், கனவிலும் கற்பனை செய்தறியாத ஒரு பேரதிசயம் அங்கே

நிகழ்த்தப்பட்டிருந்தது. எந்தக் கோவிலிலும் அவன் இப்படி ஒரு புதிய மாற்றத்தைக் கண்டதில்லை. சமயங்களைப் பற்றிய நம்பிக்கையின் அடித்தளத்திலேயே ஒரு புதிய நம்பிக்கையை இணைக்கத் துணிந்த தனது சக்கரவர்த்தியை நினைத்து அவன் மெய் சிலிர்த்தான்.

நெடு நேரம் அவன் அங்கு நின்றான். சுற்றுப்புற உலகமே அவனுக்கு மறந்துவிட்டது. அங்கு வந்தவர்கள் சென்றவர்கள் யாரையும் அவன் கவனிக்கவில்லை.

''இளவரசே!'' என்று அவன் காதருகே வந்து ஒரு பூங்குயில் கூவியது. திரும்பிப் பார்த்தான். வழிபாட்டுக்காக அங்கு வந்திருந்த லட்சுமி அவனருகே நெருங்கி அவனை வியப்போடு பார்த்தாள். ''எதை இவ்வளவு நேரமாக 'நின்று வேடிக்கை பார்க்கிறீர்கள்?''

விசுவநாதன் சுட்டிக்காட்டிவிட்டு, ''இந்த நாட்டின் புதிய இலட்சியத்தை நான் இங்கு கண்டுவிட்டேன். ஒரு புதிய செய்தியை இது எனக்குச் சொல்லுகிறது'' என்றான்.

லட்சுமியால் விசுவநாதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. தெய்வ தரிசனம் கண்டுவிட்ட இளம் பக்தனைப் போல் நின்று கொண்டிருந்தான் அவன்.

''மூலஸ்தானத்து இறைவனை வழிபட்டு விட்டீர்களா?'' என்று கேட்டாள்.

''மூலஸ்தானத்தில் இருந்த இறைவன் இப்போது இங்கு வந்து விட்டான்!'' என்றான் விசுவநாதன்.

''ஓ! இந்தக் குதிரை வீரர்களைச் சொல்கிறீர்களா? அப்பாகூட எவ்வளவோ முறை சக்கரவர்த்திகளிடம் இப்படிச் செய்ய வேண்டாம் என்று மன்றாடி விட்டார்களாம். அவர்கள்தாம் கேட்கவில்லை.''

விசுவநாதன் பதில் சொல்லவில்லை. ஆனந்தக் கண்ணீர் மல்க அவளைத் திரும்பிப் பார்த்து, ''நீயும் இன்று என்னோடு இறைவனிடம் சேர்ந்து வேண்டிக்கொள்'' என்றான்.

''எதை வேண்டிக்கொள்ளச் சொல்லுகிறீர்கள்?'' என்று கேட்டுவிட்டு நாணித் தலைகவிழ்ந்தாள் அவள். 'நம்முடைய திருமணம் விரைவில் நடைபெற வேண்டுமென்று தானே?' என்று அவள் தன் விழிகளால் கேட்பது போலிருந்தது.

''விஜயநகரமும் பாமினி நாடுகளும் அன்பால் ஒன்றுபட வேண்டுமென்று வேண்டிக்கொள்!''

''அப்படியே உங்களுக்காக வேண்டிக் கொள்கிறேன்'' என்று ஏமாற்றத்தோடு பதிலளித்தாள் லட்சுமி.

ஆலயத்திலிருந்து விசுவநாதன் தன் மாளிகைக்குத் திரும்பி வந்தபோது, அங்கே அரண்மனைப் பணியாளன் ஒருவன் பரபரப்போடு நின்று கொண்டிருந்தான். அவன் வந்து காத்து நின்ற நிலையைக் கண்டபோது ஏதோ பேரதிர்ச்சி கொண்ட செய்தியோடு வந்திருப்பவன் போல் தோன்றியது.

''அவசரமாகத் தங்களை அழைத்து வருமாறு சக்கரவர்த்திகள் பணித்தார்கள்'' என்றான் அவன். (தொடரும்)





சேவைக்கு ஒரு சகோதரி

மோனிகா ஃபெல்டன்
— அநுத்தமா

சித்தியின் புதிய குடும்பத்திலுள்ள ஆறு பெண்களில் ஒவ்வொருவருக்கும் நிறையச் சோக நினைவுகள் இருந்தன. அவர்களைத் தங்கள் முற்காலத்தைப் பற்றிப் பேசவிடக் கூடாது என்றும், அதைப்பற்றிச் சிந்திக்கவே அவர்களுக்குச் சமயம் அளிக்கக் கூடாது என்றும் பெரியவர்கள் தீர்மானித்தார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு ஏகப்பட்ட வேலைகள் இருந்தன. அவர்களுடைய அன்றாட அலுவல்கள் நன்றாகத் திட்டமிடப்பட்டிருந்தன. அவர்கள் எப்பொழுதும் ஏதேனும் ஒரு வேலையில் ஆழ்ந்திருந்தார்கள்.

அநேகம் பெண்கள் நல்ல குடும்பங்களிலிருந்து வந்தவர்கள். தங்கள் சாஸ்திரங்கள் விதித்தபடி சுத்தமாகவும் கச்சிதமாகவும் இருக்க அவர்கள் அறிந்திருந்தார்கள். வேறு சிலர் கவனிப்பாரற்றுக் கிடந்த காரணத்தினால் அசுத்தத்தில் உழன்றனர். இத்தகைய ஒருத்தி தனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாகக் கைம்பெண்ணாகவே இருப்பவள். அவள் ஆதிகாட்டேஜுக்கு வரும்போது கிழிசல் ஆடையும், அழுக்குத் துணி மூட்டையுமாக வந்திருந்தாள். அம்மூட்டையின் துர்க்கந்தம் பொறுக்க முடியாமல் சித்தி அதைத் தூர எறிந்துவிடும்படி ஆகிவிட்டது. மற்றப் பெண்களில் சிலர் தங்கள் அருவருப்பை மறைக்க முயலவில்லை. புதிதாக வந்தவளைத் தம் சகோதரியாகப் பாவித்து அவளிடம் விசேஷ அன்பு செலுத்த வேண்டும் என்று அவர்களுக்கு உணர்த்துவது எளிதாக இருக்கவில்லை.

சித்தி எல்லோருக்கும் சித்தியாகவே திகழ்ந்தாள். நல்ல நகைச்சுவை நிறைந்த தன்மையுடன் பட்சபாதமின்றி அன்பு செலுத்தி வந்தபடியால் அவளை நேசிக்காமல் யாராலும் இருக்க முடியவில்லை. எல்லாப் பெண்களும் தாங்கள் ஒரே குடும்பத்தினர் என்ற உணர்ச்சியைப் பெற்று அங்கு தங்கள் சொந்த வீட்டில் வாழ்வது போலவே இருக்கச் செய்யச் சித்திக்கு வெகுகாலம் பிடிக்கவில்லை.

பார்வதி ஒருத்தியைத் தவிர மற்ற எவரும் பி. டி. ஸ்கூலின் ஆங்கிலப்

பகுதியில் ஆரம்ப வகுப்பில் சேரக்கூடத் தகுதி உள்ளவர்களாக இருக்கவில்லை. சிலருக்குப் படிப்பு வாசனையே இருக்கவில்லை. மற்றவர்கள் ஆங்கிலம் தெரியாவிட்டாலும், தமிழில் எழுதப் படிக்கவும், எளிதான கணக்குகளைப் போடவும் அறிந்து கொண்டிருந்தனர். இந்த விதவை இல்லத்துக்கு வெளியே இவர்களிடம் அனுதாபம் கொண்டிருந்த பலர் இருந்தனர். ஆனால் அவர்களில் யாருக்குமே இந்த இளம் விதவைகள், இவர்களைவிட அதிர்ஷ்டசாலிகளான சம வயதுப் பெண்களுடன் சேர்ந்து பள்ளியில் படிக்கும் அளவுக்கு முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கை ஏற்படவில்லை.

சகோதரி சுப்புலக்ஷ்மி அந்த அபிப்பிராயத்தை ஒப்புக் கொள்ளவில்லை. அப்பெண்கள் புத்திசாலிகளாகவும், படிப்பில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருந்தார்கள். தங்கள் வாழ்க்கையில் குறுகிய காலத்தில் அவர்கள் எவ்வளவோ இன்னல்களை அநுபவித்திருந்தார்கள். அவர்களை, தங்களை விடப் பல வயது சிறியவர்களான பெண்களுடன் ஆரம்ப வகுப்புக்களில் சேர்ந்து உட்கார்ந்து படிக்கும்படி செய்து மேலும் வெட்கமும் சங்கடமும் படச் செய்வது முறையல்ல. அது அவசியமும் இல்லை என்று சகோதரி நம்பினாள். அதற்குப் பதிலாக, இவர்களுடைய வயது ஒத்தவர்கள் படிக்கும் வகுப்பில் சேரத் தகுதி பெறும்படி இவர்களுக்குப் பயிற்சி அளித்து, பிறகுதான் அவர்களைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டும்.

ஸிஸ்டர் பி. டி. ஸ்கூலில் எல்லா வகுப்புகளுக்கும் தாவர சாஸ்திரமும், தமிழும் எடுக்க வேண்டியிருந்ததால், அவளால் தானே பக்கத்தில் இருந்து ஆதிகாட்டேஜில் அந்த இளம் விதவைகளுக்குக் கல்வி போதிக்க முடியவில்லை. பள்ளிக்கூடத்துக்குக் காலையில் சீக்கிரமே அவள் கிளம்பி விடுவாள். மாலையில் ஆதிகாட்டேஜுக்குத் திரும்பும்போது திருத்த வேண்டிய நோட்டுப் புத்தகங்களும், மறுநாளைக்காகத் தயாரிக்க வேண்டிய பாடங்களும் நிறைய இருக்கும். அப்படியும் தன்னால் இயன்ற வரையில் அவள் அப்பெண்களுடன் இருந்தாள். என்றாலும், அவர்களுக்குப் பாடம் சொல்லித் தர வேறொருவரைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று.

மிஸஸ் பிரிக்ஸ் (Mrs Briggs) என்ற ஓர் ஆங்கில மாது அந்தப் பணியை ஏற்க முன் வந்தாள். மிஸ் லின்ச் ஆங்கில முதல் பாடப் புத்தகங்களைத் தந்தாள். ஒரு வருஷப் படிப்புக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் புத்தகத்தில் முப்பது பாடங்கள் இருந்தன. சாதாரணமாகப் பள்ளிகளில் நடப்பது போல், வாரத்துக்கு ஒரு பாடம் என்று படித்து, மாதத்தில் ஒரு வாரம் இதுவரை படித்ததை மீண்டும் நினைவூட்டிக் கொள்வதற்குப் பதிலாக, ஒரு நாளைக்கு இரு பாடங்கள் வீதம் படிக்க முயல்வதாக அப்பெண்கள் சகோதரியிடம் வாக்களித்தார்கள்.

எப்படியோ அவ்வாறு செய்தும்விட்டார்கள். ஆங்கிலம் மட்டுமின்றி மற்றப் பாடங்களையும் படித்துச் சமாளித்தார்கள். இரண்டு வாரங்கள் ஆனவுடனேயே ஒவ்வொரு பெண்ணும் அடுத்த வருஷத்துக்கான பாடப் பகுதிகளைப் படிக்கத் தயாராகி விட்டாள்! ஆறு மாதங்களுக்குள் பி. டி. ஸ்கூலின் ஆங்கிலப் பகுதியில் சேர்ந்து படிக்க அவர்கள் தகுதி பெற்று விட்டார்கள்!

அவர்கள் மிகவும் உழைத்துப் பாடுபட்டார்கள். சிலர் அவர்கள் வாழ்க்கையில் முதன் முறையாக சந்தோஷம் என்பதை உணர்ந்தார்கள். சித்தி அவர்களுக்கு வாரந்தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கற்றுக் கொடுத்தாள். தானே அவர்கள் தலைக்கு எண்ணெய் தேய்த்தும் விட்டாள். நீராடிய பின்னர் அளகபாரத்தைப் பின்னல் போட்டு விட்டாள். தாங்கள் மீண்டும் இவ்வாறு அழகாக இருக்க ஒரு வாய்ப்புக் கிடைத்த அதிசயத்தை நம்ப முடியாதவர்கள் போல், அவர்கள் ஒருவரையொருவர் பார்த்து சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டு மகிழ்வார்கள்.

ஒவ்வோர் இரவும் படுக்கப் போகுமுன் சித்தி அவர்களுக்குக் கதை சொல்வாள். அநேக கதைகள் பழைய தமிழ் நூல்களிலிருந்தும், சம்ஸ்கிருத நூல்களிலிருந்தும் எடுத்துச் சொல்வாள். சில அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்தவை. பல எல்லோருக்கும் புதியனவாய் இருந்தன. தானாகவே முயன்று படித்து அறிவாற்றலைப் பெற்றவள் சித்தி. பெண்கள் எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும் அதை விளக்கப் புராணங்களிலிருந்து ஒரு நிமிஷ யோசனைகூட இல்லாமல் அவள் பொருத்தமான கதையைக் கூறிவிடுவாள். தனது அருமையான வர்ணனைத் திறனினால், என்றோ நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் நடந்தவற்றை நேற்று நடந்தது போல் அழகாக விவரிப்பாள். படுக்கப் போகுமுன் தான் கதை சொல்வது என்றும் அவள்



சென்னை மதருஸ் அட்வர்டைஸிங் கம்பெனியைச் சார்ந்த ஸ்ரீ எம். வெங்கட்டராமன் அவர்களின் குமாரி சௌபாக்யலக்ஷ்மிக்கும் தஞ்சாவூர் ஸ்ரீ மகாலிங்க அய்யர் குமாரர் சிரஞ்சீவி எம். சுந்தரராம கிருஷ்ணன் B. Com., அவர்களுக்கும் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

வைத்துக் கொள்ளவில்லை. யாரேனும் ஒரு பெண்ணுக்கு உடல் நலிவு ஏற்பட்டாலும், அல்லது அவள் வீட்டை நினைத்துச் சிறிது ஏங்கிக் கொண்டிருந்தாலும் தனக்கு எவ்வளவுதான் வேலைகள் இருப்பினும் சித்தி அவற்றைத் தாற்காலிகமாக ஒதுக்கி வைத்து விட்டு அந்தப் பெண்ணுடன் வேடிக்கையாகப் பேசியோ, கதை சொல்லியோ அவளது கவலைகளையெல்லாம் மறக்கடித்து விடுவாள்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறைகளிலும் சகோதரி நாள் முழுவதும் அப்பெண்களுடனேயே கழிப்பாள். அவர்களை உலாவ அழைத்துச் செல்வாள். அல்லது யார் வீட்டுக்காவது அழைத்துச் செல்வாள்.

பார்வையைத் தாழ்த்தி அவர்கள் அடக்கமாக நடந்து சென்றார்கள். அப்படியிருந்தும், சில சமயம் தெருவில் அவர்களைத் தாண்டிச் சென்றவர்களில் வேண்டுமென்றே அவர்களைப் பார்ப்போரின் கண நேரக் கண்வீச்சுக்களையும் வெறித்த நோக்குகளையும் அவர்கள் உணர்ந்தார்கள். எழும்பூரில் உள்ள எல்லோருக்கும் அந்தப் பெண்கள் யார் என்பது தெரியும். அவர்கள் எல்லோரும் இப் பெண்களைக் குறித்து நல்லெண்ணம் கொண்டிருந்தார்கள் என்பதற்கில்லை. இளம் விதவைகள், நியாயமாக இருக்க வேண்டிய குடும்பங்களிலிருந்து அகற்றப்பட்டு, அநேக இளம் மனைவிகளுக்குக்கூடக் கிட்டாத சில வாய்ப்புக்களைப் பெறுவதைப் பெரிய தவறு என்று நினைக்கும் பல மனிதர்கள் சென்னையில் இருந்தார்கள். பெண்கள் சில விஷயங்களை அறிய வேண்டிய அவசியமே இல்லை என்பது ஒருபுறம் இருக்க அவற்றை அவர்கள் கற்பது விரும்பத் தக்கதுமல்ல. அப்படி சாதாரணமான பெண்களே கற்றறிய வேண்டாத கல்வியை இவர்கள் — விதவைகள் பெறுவதென்றால் அது மிகக் கெடுதலாகும்! அதைவிட ரொம்ப மோசம், வயது வந்த விதவைகள் தலைமயிர் வைத்துக் கொள்ளவும், வளர்த்துக் கொள்ளவும் அனுமதிக்கப்படுவது. பளிச்சென்று அவர்கள் ஆடைகள் அணிவதும் நண்பர்களின் வீடுகளுக்கு விஜயம் செய்வதும் மானக்கேடான காரியங்கள்.

மட்டமான இந்த வம்புப் பேச்சு பரவுவதற்குக் கேட்க வேண்டுமா? மூச்சு விடுவதற்குமுன்னால் அது புயல் வேகத்தில் பரவி விட்டது.

மிஸ். லின்ச் சுப்புலக்ஷ்மிக்குச் சொல்லி அனுப்பினாள்.

''நான் கேள்விப்படுவது என்ன?'' என்று அவள் மிகவும் கடுமையாகக் கேட்டாள்.

''நீங்கள் என்ன கேள்விப்பட்டீர்கள்?'' என்று சுப்புலக்ஷ்மி கேட்டாள். புதிராகத் தோன்றியது அவளுக்கு. ஆனால், ரொம்பவும் கவலைப்படவில்லை அவள்.

மிஸ். லின்ச்சின் மேஜை மீது ஒரு கடிதம் கிடந்தது. அதை எடுத்து அவள் உரக்கப் படித்தாள். ஸிஸ்டர் ஆர். எஸ். சுப்புலக்ஷ்மி என்ற இளம் நங்கை தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த விதவைகளை ஒரு கல்யாணத்துக்கு அழைத்துச் சென்றதாக அறிந்து சென்னையின் பொதுஜனங்கள் அதிர்ச்சிக்குள்ளாகி விட்டார்கள் என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தது.

இத்தகைய குற்றச்சாட்டைக் கேட்டதும் அடக்க முடியாத சினத்தினால் தன் முகம் சிவப்பதைச் சகோதரி உணரலானாள். மிஸ் லின்ச் அந்தக் கடிதத்தைக் கீழே வைத்தவுடன், ''அத்தகைய தகாத காரியத்தை நான் செய்வேன் என்று நீங்கள் நம்புகிறீர்களா?'' என்று கேட்டாள் சகோதரி.

''இல்லை, நான் அவ்வாறு நம்பவில்லை'' என்று மிஸ் லின்ச் பதிலளித்தாள். கடிதம் எழுதியவர் கையெழுத்துப் போடவில்லை. அநாமதேயக் கடிதங்களுக்குள்ள மதிப்பை மிஸ் லின்ச் அறிவாள். இருந்தாலும் இதுபற்றிச் சகோதரியைக் கேட்க வேண்டியது தன் கடமை என்றும் அவள் கருதினாள்.

கடிதத்தை யார் எழுதியிருப்பார்கள் என்று சுப்புலக்ஷ்மியால் ஊகிக்க முடியவில்லை. ஆனால் மனிதர்கள் ஏன் இவ்வாறெல்லாம் மட்டமாக நடந்து கொள்கிறார்கள் என்பது சுலபமாகப் புரிந்தது. அவர்களைத் தூண்டியது துவேஷமும், பொறாமையும் மட்டுமல்ல. விதவைகளைக் கண்டால் கஷ்டம் நேரும் என்ற ஆழப் பதிந்து போன மூட நம்பிக்கையின் விளைவாக எழுந்த பயமும்தான் காரணம். பி.டி.ஸ்கூலின் எதிர்வாடையில் உள்ள ஒரு வீட்டில் சென்ற வாரம்தான் நடந்த ஒரு கல்யாணத்தைப் பற்றி சுப்புலக்ஷ்மி மிஸ் லின்ச்சுக்கு ஞாபகமூட்டினாள். ஜோசியர்கள் வழக்கம் போல் முகூர்த்த நேரம் குறித்தார்கள். ஆயின், பிறகு, முகூர்த்த நேரத்தைத் தள்ளிவைத்து விட்டார்கள். கல்யாண விருந்தினர்கள் வர ஆரம்பிப்பதற்கு முன்பே பள்ளிக்கூடத்தில் மணி அடித்து இளம் விதவைகள் கண் மறைவாக வகுப்புகளுக்குள் சென்று விட்டிருக்க வேண்டும். அதற்கேற்றாற்போல் வேறு முகூர்த்த நேரத்தைத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஆறு இளம் விதவைகளை இப்போது பள்ளிக்கூடம் அனுப்புவது பெரிய காரியமல்ல. பின்னால் நடத்த வேண்டிய நீண்ட கடுமையான போரின் ஆரம்பக் கட்டம்தான் இது என்பதை மிஸ் லின்ச்சும் சுப்புலக்ஷ்மியும் அறிந்து தான் இருந்தார்கள். மிஸ் லின்ச், சுப்புலக்ஷ்மி, அவள் பெற்றோர்கள், சித்தி மற்றும் அவர்களுக்கு ஆதரவளித்த ஒரு சில மனிதர்கள் இவர்கள் மட்டுமே போராடி வெற்றி காண முடியாது. இன்னும் எத்தனையோபேர்களுடைய ஆதரவும் ஒத்துழைப்பும் உதவியும் தேவைப்படும்.

நல்ல காலமாக, சாரதா லேடீஸ் யூனியனில், அங்கத்தினர்களின் எண்ணிக்கை படிப்படியாக வளர்ந்து வந்தது. இதற்குள் ஒரு வாசகசாலை நிறுவப் பெற்றுத் தினந்தோறும் அனைவருக்கும் நல்வரவு கூறியது. நிறையப் புத்தகங்களும், மாத வார சஞ்சிகைகளும், தினசரிகளும் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. துணிந்து பொது நூலகங்களுக்குச் சென்று ஆண்களுக்கிடையில் அமர்ந்து படிக்க வேண்டிய சங்கடம் இல்லாமல், ஓரளவு கல்விஞானமுள்ள பெண்கள் பொது அறிவு பெறவும் அன்றாடச் செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் இது சாதகமாக இருந்தது.

பி. டி. பள்ளியில் சனிக்கிழமை தோறும் பிற்பகலில் நடந்த கூட்டங்களுக்கு நிறையப் பேர் வந்தார்கள். ஆதிகாட்டேஜ் பெண்களும், பள்ளிக்கூடத்து உயர்தரப் படிவங்களின் மாணவிகளும் தவறாமல் இக்கூட்டங்களில் கலந்து கொண்டார்கள்.— சொற்பொழிவு தவிர பாட்டுக் கச்சேரிகளும் வேறு பல கலை நிகழ்ச்சிகளும்கூட நடந்தன. பள்ளி மாணவிகளுக்குள் விவாதங்களும், சொற்பொழிவுப் போட்டிகளும், பாட்டுப் போட்டிகளும் நிகழ்ந்தன. இவைகளைக் கேட்பதற்கு வயதில் பெரியவர்களான ஸ்திரீகள் அங்கு கூடுவார்கள்.

மாதர்களைவிடப் பள்ளி மாணவிகள் சங்கோசம் குறைந்தவர்களாக இருந்தனர். சொற்பொழிவு ஆற்றுவதிலும், தங்கள் திறமைகளை வெளிக் காட்டிக் கொள்வதிலும், அவர்களுக்கு விருப்பம் இருந்தது. பெரியவர்கள் நடத்தும் நிகழ்ச்சிகளைக் கேட்டு அவர்கள் சில சமயம் புளகித்தார்கள். சில சமயம் ஏதோ தாட்சிண்யத்துக்கு ரசித்தார்கள். ஆங்கிலம் அறியாத சில பெண்மணிகள் சித்தியைப் போல சமஸ்கிருதத்திலும் தமிழிலும் கற்றறிந்தவர்களாக இருந்தனர். அவர்களில்



''பச்சைக் கிளி என்ற படத்துக்கும் போகிறாயா? அதைத்தான் நீ ஏற்கெனவே பார்த்தாகிவிட்டதே!''

''இந்தப் பச்சை நைலக்ஸ் புடவை கட்டி, பச்சைச் சோளி போட்டு, பச்சைக் கைப்பை இவற்றோடு போய்ப் பார்க்கவில்லையே!''

பலர் பெரிய கூட்டங்களை மெய்ம் மறக்க வைக்கக் கூடிய குரல்களை உடைய பேச்சாளர்கள். இப்படிப்பட்டவர்கள் அதிகம் பேர் இல்லைதான். மாதர் சங்கத்தின் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் மிகவும் சங்கோசிகள்; அநுபவமற்றவர்கள். முன்னேற்பாடின்றிச் சட்டென்று சில வார்த்தைகள்கூட அவர்களால் பேச முடியாது. எப்பொழுதாவது பெரிய மனுஷியான ஓர் அம்மாள் ஒரு கூட்டத்துக்குத் தலைமை தாங்க ஒப்புக் கொண்டிருப்பாள். எழுந்துநின்று சொற்பொழிவை எழுதி வைத்திருக்கும் தாளை எடுத்து, படிக்கக் கூடத் தெரியாதோ என்னும்படி அவள் கட்டுத் தடுமாறுவாள். அதைப் பார்த்து மாணவிகள் புன்முறுவல் பூத்துத் தங்கள் சிரிப்பை அடக்கிக் கொள்ள முயல்வார்கள்.

பி. டி. ஸ்கூலின் எல்லாப் பெண்களும் சகோதரியிடம் பெருமதிப்பு வைத்திருந்தனர். ஆங்கிலேயப் பெண்கள், அவள் அழகாகவும், கம்பீரமாகவும் அதே சமயம் கவர்ச்சியாகவும் இருந்தாலும், தான் சொல்லிக் கொடுத்த எதையுமே சுவாரசியமுள்ளதாகவும் முக்கியமானதாகவும் தோற்றுவிக்கும் சாமர்த்தியமுள்ளவளாக விளங்கியதாலும் அவளை வியந்து போற்றினர். பிரத்தியேகமானதோர் ஆங்கிலப் பள்ளிக்கூடமெனக் கருதப்பட்ட ஸ்கூலில் ஆசிரியை உத்தியோகத்தில் அமர்த்தப்பட்ட முதல் ஹிந்து அவள்தான். பல இந்தியப் பெண்கள் அவளைத் தெய்வம் போன்று பூஜிப்பதற்கு இது ஒன்றே போதுமானதாக இருந்தது. (தொடரும்)



தூண்டில் முள்

ஒரு பொருள் தனித் தகைமை வாய்ந்த தென்றால், பல பொருள்களுக்கிடையே வைத்தாலும், அதைத் தனியாக இனம் கண்டு கொள்ள முடியும். எத்தனையோ நாடகங்கள் மேடையேறும் இந்த நாளிலே, பிரகாஷ் பிரசன்டேஷன்ஸ் மேடையேற்றியுள்ள 'தூண்டில் முள்' தனித்து ஒளிவிடுகிறது என்றால் அதற்குக் காரணம்:

இன்றைய பாகிஸ்தான் — பாரதப் போரைப் பகைப்புலனாகக் கொண்டு சமைக்கப்பட்டுத் தற்காலச் சூழ்நிலையைச் சிறப்புறச் சித்திரிக்கும் வகையிலே அமைந்துள்ளது.

பாகிஸ்தானிய ஊடுருவல்காரர்கள் எப்படியெல்லாம் நாடகமாடி இந்தியாவின் உண்மை பலத்தை அறிய முயல்கிறார்கள், முயல்வார்கள் என்பதை 'சஸ்பென்ஸ்' சிறிதும் கெடாமல் ஆவலைத் தூண்டிவிடும் வகையிலே கையாண்டு, கடைசியிலே முடிச்சை அவிழ்க்கும் கட்டத்திலே மன நிறைவை அளிப்பதுடன் பாரதத்தின் பெருமைக்குப் பெருமை சேர்ப்பது.

கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் ஆசிரியப் பணி ஆற்றும் அன்பர்கள், நடிப்புக் கலையைத் திறம்படப் பயின்று, தொழில் நடிகர்களுக்கு நாங்கள் சளைத்தவர்களல்ல என்பது போல ரசிகளின் ஆர்வத்தைக்கிளறிநடிப்பது.

புகழ்ந்து பேசத் தோன்றும்பொழுது தூண்டில் முள் சில இடங்களில் குத்தக் காரணம்:

நகைச்சுவை இல்லையென்றும், நாடகம் சோபிக்காது என்ற நினைப்பில் கதைக்குத் தொடர்பில்லாத நகைச்சுவைக் காட்சிகள்; இரண்டாந்தரமான நகைச்சுவை வசனங்கள். நகைச்சுவைக்காக மிகைப்படுத்திக் காட்டப்படும் அங்க சேஷ்டைகள்.

உணர்ச்சி வேகத்திலே பாரதத்தின் பண்புக்கு இழுக்குச் சேர்க்கும் சில பல வசனங்கள். 'இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்' என்னும் வாக்கைப் பின்பற்ற மறந்திருத்தல்.

ஓர் ஆங்கிலப் படத்தின் கதைக் கரு தூண்டில் முள்ளாக ஈர்த்து இந்த நாடகத்தை உருவாக்க வைத்திருக்கிறது என்றாலும், மேடையேறி மெருகேற வாய்ப்பிருக்கிறது.

ஒரு விரல்

ஆண்டவன் ஐந்து விரல்களைக் கொடுத்தான். அவற்றைச் சேர்த்தும் பிரித்தும் நம் இஷ்டத்துக்கு இயக்கவும் வழிவகை வைத்தான்.

எதற்காக?

யோசிக்கும் வேளையிலே ஒரு முடிவுக்கு வரத் தோன்றும். அதாவது சரியில்லாத ஒரு காரியத்தைக் காணும்பொழுதோ, செய்யும் பொழுதோ ஐந்து விரல்களையும் சேர்த்துத் 'தப்பு, தப்பு' என்று கன்னத்தில் போட்டுக் கொள்ளலாம் அல்லது ஒரு விரலால் தவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்தவோ பிறரைக் குற்றம் சாட்டவோ செய்யலாம்.

'ஒரு விரல்' என்னும் துப்பறியும் கதையை 'அசோசியேட் ஆர்ட்டிஸ்ட்ஸ்' திரைப்படமாக்கியிருக்கும் முறையை நினைத்தால் நாம் ஒரு விரலை உயர்த்தி இப்படி ஒரு திரைப் படத்தை ஏன்தான் தயாரித்தார்களோ என்று உணர்த்தச் சுட்டிக்காட்டவே வேண்டியிருக்கிறது. அவர்களும் தங்கள் ஐந்து விரல்களையும் சேர்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்டு கையைக் கடிக்கும் இந்தக் காரியத்தில் இறங்காமல் இருக்கலாம் அல்லவா?

'ஒரு விரல்' படத்தில் நாம் கண்ணால் காண்பது மூன்று கொலைகள். கண்ணுக்குத் தெரியாமல் நடக்கும் கொலை இன்னும் ஒன்று உண்டு. அதுதான் கலைக் கொலை. துப்பறியும் படத்துக்குத் தேவையான கதை அம்சமோ, ஒளிப்பதிவோ, ஒலிப் பதிவோ இந்தப் படத்தில் எங்கு தேடினாலும் காணக் கிடைக்கவில்லை. வசனங்கள் 'அமெச்சூர்' என்றால் நடிகர்களுடைய நடிப்பு துளிக்கூட 'மெச்சூரா'காமல் காட்சி தருகிறது. பாட்டு படும் பாட்டை என்னவென்பது?

பக்கத்தில் உட்கார்ந்து வசனத்துக்கு வசனம் வாய் விட்டுச் சிரித்து மகிழும் நண்பர்களில் எவராவது, 'ரசிகர்கள் நாங்கள் இருக்கும்பொழுது இப்படியா ஒரு விமரிசகன் சுட்டிக் காட்டுவது?' என்று ஒரு விரலை உயர்த்துகிறாரா? அப்படியானால் ஐந்து விரல்களையும் சேர்த்துக் கன்னத்தில் போட்டுக்கொள்ள வேண்டியதுதான்: 'இப்படிப்பட்ட ரசிகர்களும், படத் தயாரிப்பாளர்களும் இருக்கும் வரை படக் கலையின் நிலை உயர்ந்தாற் போலத்தான்' என்று!





ஹார்லோ

உலகத் திரைப் படத் தொழிலின் தலைமைப் பீடமான ஹாலிவுட் நகரம். அதனைச் சுவர்க்க பூமியாக உலக மக்கள் கற்பனை செய்து கொண்டிருந்த காலம் அது. 1930ம் ஆண்டு. ஒரு யுவதி. வெள்ளிக் கோசமும் வெள்ளை உள்ளமும் கொண்ட அந்தப் பெண், திரை வானிலே ஒளிவீசும் நட்சத்திரமாக மின்னப் போகும் தன் வருங்காலக் கற்பனைகளில் மிதந்தபடி, படப்பிடிப்பு நிலையங்களில் சிறு சிறு பாத்திரங்களில் நடிக்க அழைக்க மாட்டார்களா என்று ஏக்கமுடன் நிற்கும் நீளமான 'க்யூ' வரிசையில் காத்துக் கிடக்கிறாள். பிற்காலத்தில் உலக முழுவதிலுமுள்ள திரைப்பட ரசிகர்களைப் பைத்தியமாக அடிக்கப் போகும் அழகும் திறமையும் கொண்ட ஒரு நடிகை அந்த வரிசையில் நிற்கிறாள் என்பதை அறியாத படாதிபதிகள் அவளைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. திறமைசாலிகளைத் திரைப்பட நிறுவனங்களுக்கு அறிமுகப் படுத்தும் ஏஜண்ட் ஒருவரின் கண்களில் இந்த மங்கை தென்படுகிறாள். அவரது ஊகம் வீண் போகவில்லை. அவரது உழைப்பால், ஒப்பற்ற திறமையால் ஹாலிவுட் பிரமிக்கும் அற்புத நடிகையாகிறாள் அவள். அது திடீரென்று ஒரு நாளில் ஏற்பட்டு விடவில்லை. அவருக்கும் அவளுக்கும் அதில் எத்தனையோ ஏமாற்றங்கள், தோல்விகள், துயரங்கள், வேதனைகள். ஆனால் அத்தனையும் அவளைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சேர்க்கிறது. அவள் நடை, உடை, சிரிப்பு, பேச்சு, அலங்காரம் எல்லாமே அமெரிக்கப் பெண்களின் நாகரிகமாகிவிடுகின்றன. அந்த அளவுக்கு அவள் ஹாலிவுட்டின் விந்தைப் பெண்ணாகிறாள். அவளும் காதலிக்கிறாள்; கல்யாணமும் செய்துகொள்ளுகிறாள். அதுவே அவள் வாழ்க்கையின் திருப்பமாக அமைகிறது. திருமணமான இரண்டாவது வாரத்தில் கணவன் தற்கொலை செய்து கொள்ளுகிறான். பட உலகுக்கும் பத்திரிகைகளுக்கும் இதைவிடச் சுவையான செய்தி வேறு வேண்டுமா? அவன் ஏன் தற்கொலை செய்துகொண்டான்? யாராலும் விடுவிக்க முடியாத அப்புதிரே அவளுக்கு அதிர்ச்சியாகிறது. அந்த அதிர்ச்சி அவள் வாழ்வைப் பலிகொள்ளுகிறது. வாழ்விலே வெறுப்பும் புகழிலும் பொருளிலும் நிராசையும் கொண்ட அந்த நடிகை தன்னுள் தன்னையே தேடிக்கொண்டதொரு நிலையில் ஒரு நாள் நள்ளிரவில் கடற்கரையிலே போய் நிலைவிழுந்து விழுந்துவிடுகிறாள். காலையில் போலீஸ் வான் அவளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வருகிறது. 'பிளாட்டினம் பிளாண்டி' என்று புகழ் பெற்ற அந்த அற்புத நடிகையின் வாழ்வு அவலமாக முடிவடைகிறது.

உண்மையாகவே வாழ்ந்து மறைந்த ஜீன் ஹார்லோ என்ற நடிகையின் கதையைத் தான் பாரமவுண்ட் பிக்சர்ஸார் வண்ணப் படமாக வெளியிட்டிருக்கிறார்கள். ஒரு நடிகை பட உலகில் பெயரும் புகழும் பெற வேண்டுமானால் எத்தனை இன்னல்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்பதற்கு ஹார்லோவின் வாழ்க்கை ஒரு மாதிரி. ஹார்லோவாக கரோல் பேக்கர் சிறப்பாகவே நடித்திருக்கிறார். அவளைப் புகழேணியின் உச்சிக்குக் கொண்டு போகும் ஏஜண்ட் ஆர்தர் லாண்டுவாக வரும் ரெட் பட்டன்ஸின் நடிப்புத்தான் இப்படத்தில் பிரமாதம். இந்தப் படத்தை டைரக்ட் செய்துள்ள கார்டன் டக்ளஸ், உண்மை ஹார்லோ புகழேணியின் படிகளில் கால்வைத்திருந்த சமயத்தில் ஸ்டுடியோவின் செய்திகளை இங்கு மங்கும் கொண்டுபோகும் எடுபிடி வேலை செய்துகொண்டிருந்தார். அவர் இன்று ஹாலிவுட்டின் புகழ் பெற்ற டைரக்டர். அவளது வாழ்க்கைக் கதையைத் தாமே டைரக்ட் செய்ய வேண்டியிருக்கும் என்பதை முன்பு நினைத்துப் பார்த்திருப்பாரா? உண்மைக் கதையானதால் நமக்குப் படத்தில் குறை காணும் மனப்பான்மை குறைந்து விடுகிறது.





61. கண்கொள்ளாக் காட்சி

தெய்வயானை அந்தக் கல்லின்மீது நடந்தபோது, கிண்கிணி, 'அந்தோ! என் அன்னை இக் கல்லின்மீது மெல்லிய திருவடி வைத்து நடக்கின்றாளே! இத் திருவடி கல்லின் மீது நடந்தால் வருந்துமே!' என்று கூறி அரற்றுவது போல் இருந்தது.

இடையில் உள்ள மேகலாபரணம் ஒலிப்பது மெல்லிய இடை வருந்துமே என்று கூறுவது போலிருந்தது.

கல்லுயர் பொருப்பினிடை
காமரடி செல்ல
அல்லன கொல் என்றுமணி
நூபுரம் அரற்ற

மெல்லிடை வருந்துமென
மேகலை இரங்க
எல்லவரும் உள்மகிழ
எம்மனை நடந்தாள்.

''இவ்வாறு அம்மை தேவகுஞ்சரி கல்லின் மீது பாத தாமரையை வைத்து நடந்தருளுவதில் என்ன ஆச்சரியம் உளது? எம்பிரான் கந்தவேள் தமது திருவடி மலரை அடியேனுடைய நெஞ்சமாகிய கருங்கல்லில் வைத்து உலவுகின்றாரே!'' என்பர் கச்சியப்பர்.

பஞ்சிதனின் மெல்லடி
பனிப்ப உரையின்பால்
குஞ்சரி நடந்த செயல்
கூறு புதுமைத்தோ?

செஞ்சுடர்வை வேலுடைய
செம்மலடி நீயேன்
நெஞ்சக அடுக்கலினும்
நின்றுலவும் என்றால்.

என்பது கச்சியப்பரின் அதியற்புதமான வாக்கு.

இந்திரன் அந்தப்புரம் சென்று தெய்வயானை அம்மையாரைச் சிறப்புடன் திருமணத்துக்கு அழைத்து வந்தான்.

முரசங்கள் முழங்கின. தெய்வ அம்மையாரைத் திருமணப் பந்தரில் கண்ட முனிவர்கள் அனைவரும் 'தாயே வாழ்க' என்று துதித்தார்கள். தெய்வயானையம்மையார் பார்வதி, பரமேசுவரரைத் தொழுது நடுவேயுள்ள ஞான பண்டிதரைக் கண்டு நாணி நின்றார். உலக அன்னையாகிய உமா தேவியார் முருக வேளையும் தெய்வயானை யம்மையாரையும் ஓர் உயர்ந்த ஆசனத்தில் இருத்தினார். திருவேலிறைவன் தெய்வயானையோடு திருமணக் கோலத்தில் வீற்றிருந்ததைக் கண்டு இந்திரனும் வானோரும் ஏனோரும் கைகூப்பி ஆனந்தக் கண்ணீர் பெய்து வந்தித்து வாழ்த்தினார்கள். இந்திராணி நாணம் மேலிட்டவளாய்த் திருமஞ்சன நீரை வார்க்க, இந்திரன் எந்தை கந்தவேள் திருவடிகளைப் பூசித்தான். மலர்களைச் சூட்டித் தூப தீபங்களைப் பணிந்தான். எம்பெருமானுக்குப் பூசனைகள் முடிந்ததும் இந்திரன் தெய்வயானை அம்மையாரது திருக்கரத்தை எம்பிரான் திருக்கரத்தில் வைத்து, ''எளியேனுடைய மகளை ஏற்றருள்வீர்'' என்று வேத மந்திரம் கூறித் தாரை வார்த்தான்.

மருத்துவன் மாமறை
மந்திர நீரால்
ஒருத்தி பொருட்டினில்
ஒண்புனல் உய்ப்பக்

கரத்திடை ஏற்றனன்
ஞல்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொள் முத்தியும்
ஆக்கமும் ஈவோன்

தம் கரத்தில் இந்திரன் வார்த்த மந்திர நீரை முருகப் பெருமான் ஏற்றுக்கொண்டார். பிரம்ம தேவர் மாங்கல்ய நாணை மனத்தினால் படைத்துக் கொடுத்தார். அதனை முருகப் பெருமான் தம் திருக் கரத்தினால் வாங்கிச் சுரகுஞ்சரியம்மையின் கழுத்தில் தரித்தார்; அம்மையாரின் கழுத்தில் ஒரு மலர் மாலையும் சூட்டினார். கரும்பு, தேன், முக்கனிகள் முதலியவற்றையும் காமதேனுவின் பாலையும் இந்திரன் முருகக் கடவுளுக்கு நிவேதித்தான்.

திருப்பரங்குன்றத்தில் நடைபெற்ற முருகப் பெருமானின் திருமணக்காட்சி



கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தீவலம் வருதல், அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல் முதலிய சடங்குகள் சிறப்புற நடந்தன. தேவாதி தேவன், தேவராஜகுமாரி மணந்த திவ்விய வைபவங்களை யாரே விரித்துரைக்க முடியும்?

அம்மியின் மீது மனைவியின் காலைக் கணவன் பற்றி வைக்க வேண்டும். கற்பு வரம் வாங்குவதே இச் சடங்கின் கருத்தாகும். கற்பு என்ற சொல் 'கல்' என்ற சொல்லின் பகுதியையும், 'பு' என்னும் தொழிற் பெயரின் விகுதியையும் கொண்டது. கல் போன்ற மனத்திண்மை கொள்வதே கற்பு. மனத்திண்மைக்கு உவமையாகக் கல்லை ஏன் கொள்ளவேண்டும்? இரும்பை மனத்திண்மைக்கு உவமையாகச் சொல்லலாமே? ஏன் அப்படிச் சொல்லவில்லை என்றால் பாரம் அதிகமானால் இரும்பு வளைந்து கொடுத்துவிடும். கல்லோ வளைந்து கொடுக்காது. பிளந்துவிடும். எதிர்ப்பு எல்லை மீறினாலும் கற்பு தன்னைத்தான் அழித்துக்கொண்டு மாயுமே தவிர, வளைந்து கொடுக்காது.

திருமணச் சடங்குகள் யாவும் இனிதே முடிந்தன. முருகக் கடவுளும் தெய்வயானையும் பார்வதி — பரமேசுவரர்களை வலம் வந்து வணங்கினர். முருகனைச் சிவபெருமானும் மருமகள் தெய்வயானையைப் பார்வதி தேவியும் எடுத்து அணைத்து அருகில் அமரச் செய்து அருள் புரிந்தனர். ஆதி தம்பதியான சிவ—சக்தி இப் புது தம்பதிக்கு முதன்மை ஸ்தானமும் அளித்து மகிழ்ந்தனர்.

அடுத்த லத்தில்விழ் மக்களை
இருவரும் ஆர்வத்(து)
எடுத்த ணைத்(து) அருள்செய்துதம்
பாங்கரில் இருத்தி
முடித்த லத்தினில் உயிர்ந்(து)'உமக்கு

எம்முறு முதன்மை
கொடுத்தும்' என்றனர் உவகையால்
மிக்கவொள் கையினர்

முருகப் பெருமானையும் தெய்வயானையையும் வணங்கியவர்களுக்கெல்லாம் சிவபெருமானும் பார்வதி தேவியும் திருவருள் புரிந்து மறைந்தனர்.

பின்னர் முருகப் பெருமான் சிங்காதனத்தினில் வீற்றுத் தரிசனம் தந்தார். அதன் பின் குழுமியிருந்தவர்கள் அனைவரும் அஞ்சலி செய்யவும் மங்கல வாத்தியங்கள் ஒலிக்கவும் தேவர் குழாங்கட்கு அருள் செய்து தெய்வயானை அம்மையாருடன் திருக்கோயிலுட் புகுந்தருளினார்.

இந்திரன் யாவருக்கும் காமதேனு, கற்பகம், சிந்தாமணி இவைகளால் இன்னமுதூட்டி விடைகொடுத்தனுப்பினான். இந்திரன் நீண்ட காலம் விட்டுப் பிரிந்திருந்த இந்திராணியுடன் திருப்பரங்குன்றத்தில் இல்வாழ்க்கைச் சுகம் எய்தினான்.

திருப்பரங்குன்றத்தில் தெய்வயானையம்மையாரைத் திருமணம் செய்து கொண்ட செவ்வேட் பரமன் அங்கே சில நாட்கள் அம்மையாருடன் வீற்றிருந்தார். தேவர்களை விண்ணுலகத்தில் குடியேற்றவும், பொன்னுலகத்தில் இந்திரனுக்கு முடி சூட்டவும் திருவுளங் கொண்டார். தெய்வயானையம்மையாருடன் தம் திருக்கோயிலினின்றும் வெளியே புறப்பட்டார். வீரவாகு தேவரும் பூதர்களும் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். திருமால், பிரம்மா இந்திரன் முதலிய தேவர்களும், முனிவர்களும் அவ்வாரவார ஒலியைக் கேட்டு முருகவேளைப் பணிந்து சூழ்ந்தார்கள். வாயுதேவன் மனோவேகத் தேரைக் கொண்டுவந்து நிறுத்தினான். ஆறுமுகக் கடவுள் தெய்வயானையம்மையாருடன் அத்தேரில் ஏறி அமர்ந்தார். அப்போது அவர்கள் சிவபெருமானும் மலைவளர் காதலியும் போல் விளங்கினார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். மயில் வாகனம் அமரர்கள் தொழ அருகில் வந்தது. ஆறுமுகப் பெருமான் அமரர்களைப் பார்த்து, ''நீங்கள் யாவரும் உங்கள் வாகனங்களில் ஏறி எம்மோடு விண்ணுலகத்துக்கு வாருங்கள்'' என்று ஆணையிட்டார். பெருமான் ஆணையின் வண்ணம் அமரர்கள் தங்கள் தங்கள் வாகனங்களில் ஊர்ந்து எம்பெருமானின் இரு மருங்கும் துதி செய்துகொண்டு சென்றார்கள். பராசர முனிவரின் புத்திரர்களும் உடன் சென்றார்கள். இரண்டாயிரம் பூத வெள்ளங்களும் விரைந்து புறப்பட்டன. பூதங்களில் பலர் முரசுகளை முழங்கினர்; சங்குகளை ஒலித்தனர்; மிருதங்கம் முழக்கினர். இவ்வாறாக, கந்தவேள் விண் வழியே இந்திரனுடைய அமராவதியை அடைந்தார். பானுகோபனால் எரிக்கப்பட்டுப் பாழ்பட்டிருந்த விண்ணுலகை வேலாயுதக் கடவுள் புதுப்பிக்கத் திருவுளம் கொண்டார். தேவதச்சனை நோக்கி, ''விண்ணுலகை எல்லா வளங்களுடனும் மீண்டும் அமைப்பாயாக!'' என்று கட்டளையிட்டார். **(தொடரும்)**

மாந்தர்களைப் போலவே மரம் செடி கொடிகளும் போரின் விளைவுகளுக்கு உள்ளாகி வினைகள் புரிகின்றன. மரங்கள் நிறைந்த ஒரு பெரும் நிலப் பகுதி எங்களது குண்டுமாரிக்கே இலக்காகி அழிந்ததை நான் கண்டிருக்கிறேன். இங்கே சமீபத்தில்தான் 'க' கிராமத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஜெர்மானியப் போர்வீரர்கள் முற்றுகை யிட முனைந்து கூடியிருந்தனர். ஆனால் மரணப் பிடி, மரங்களோடு மரங்களாக அவர் களையும் தீர்த்துக் கட்டி விட்டது. வேர் பறிந்து சாய்ந்து கிடந்த தேவதாரு மரங்களுக் கிடையே அந்த ஜெர்மானிய வீரர்களின் சடலங்கள் புதைந்து கிடந்தன. உடல் முழுதும் ரணக் காயங்களை ஏற்று, பசுமை தலைகாட்டும் செடிகளுக்குள் மறைந்து அவை அழுகிக் கொண்டிருந்தன. குண்டுக் காயம் பட்டு, பட்டை உரிந்து போன தேவதாரு மரங்கள் பெருக்கிய நறுமணத்தினால் கூட, மூக்கைத் துளைக்கும் அழுகல் பிணங்களின் நாற்றத்தை மாற்ற முடியவில்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். குண்டுகளின் தாக்குதல்களுக்கு இலக்காகிக் குழி குழியாகி விட்ட பூமி, கருப்பும் பழுப்புமாகச் சுட்ட மண்ணை உமிழ்ந்து இடுகாட்டின் நாற்றத் தைக் கூட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

எங்கள் குண்டுகளுக்கு இரையாகிக் குண்டும் குழியுமாகத் தோன்றிய அந்தக் களத்திலே மரணம் தனது மௌன ஆட்சியைச் சீராகப் புரிந்து கொண்டிருந்தது. ஆனால் அதிசயத்திலும் அதிசயம் என்னவென்றால், வெறும் பொட்டல் காடாகிவிட்ட அந்த மைதானத்தின் நடு மையத்திலே ஒரே ஒரு மரம் மட்டும் அன்று நின்ற மேனியாக நின்று கொண்டிருந்தது. அதுவும் குண்டுகளின் இலக்குக்குத் தப்பவில்லை என்பதை அதன் கிளைகளில் காணப்பட்ட சிராய்ப்புக்கள் எடுத்துக் காட்டின. 'உய்' என்ற ஒலியுடன் வீசிய காற்று சிராய்ப்பின் எரிச்சலைப் போக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. கூடவே, பனிச்சிடும் அதன் பசுந்துளிருக்கு ஏதோ ஆறுதல் மொழி கூறிச் செல்வது போலும் தோன்றியது.

நாங்கள் அந்த மைதானத்தின் வழியே நடந்து போய்க் கொண்டிருந்தோம். எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த இளம் பிராயத்து ஆர்டர்லி இலேசாக அந்த மரத் தின் அடியைத் தீண்டி அன்பும் வியப்பும் ஒருங்கே கூடிய குரலில், ''நீ மட்டும் அழிவின் இந்த விளையாட்டிலிருந்து சேதப் படாமல் எப்படித் தப்ப முடிந்தது?'' என்று கேட்டு விட்டு நடந்தான்.

குண்டடி பட்டால் தேவதாரு மரம் புயலால் வீழ்த்தப்பட்டது போலவே சாய்ந்து விடுகிறது. அதன் கரடுமுரடான அடிமரத்திலிருந்து வழியும் திரவம், பட்டுப் போவதற்குமுன் கடுக்காய் மரம் இருக்கும் நிலையை நினைவுறுத்துகிறது.



ளர். பெயர் இல்லாத ஓர் அருவிக் கரையிலே வளர்ந் திருந்த பழம் பெரும் கடுக்காய் மரத்தின் மீது ஜெர்மானியர் களின் குண்டு பாய்ந்தது. ஊடுருவிச் சென்று ஆழப் பதிந்த காயம் அதன் பாதி உயிரை உறிஞ்சி விட்டது. ஆனால் மறுபாதி நீர்க்கரையின் பக்கமாகச் சாய்ந்து துளிர்த்துத் தளிர்த்து வசந்த காலத்தைக் கண்முன் நிறுத்திக் கொண் டிருந்தது. இன்றும் மரத்தின் காயம்பட்ட கிழ்க்கிளைகள் கனநீரில் இரவு பகல் எந்நேர மும் மூழ்கிமுக்குளித்துக் கொண்டிருக்கின்றன. மேல் கிளைகளோ பார்த்துப் பார்த்துச் செதுக் கினாற்போல் இருக்கும் தனது வனப்பான பசிய இலைகளை வெய்யிலில் விரித்து மகிழ்ச்சி யில் பூரித்து நிற்கின்றன.

நீண்டு சரிந்து உயர்ந்து அகன்ற தோள் களையுடைய லெஃப்டினெண்ட் கோராசிமோவ் பாதுகாப்புக் குழியின் நுழை வாசலில் உட் கார்ந்து எங்களுக்கு அன்றையப் போர் நட வடிக்கைகளைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்


தார். எதிரிகளின் டாங்கித் தாக்குதலைத் தவிடுபொடியாக்கி யிருந்தது. அவரது வசத்தில் இருந்த படைப் பகுதி. குறி தவறாத கழுகுக் கண் படைத்தவர் அவர். அவரது ஆற்றலுக்குக் கேட்பானேன்?

ஆனால்..........

அவரது ஒட்டிய முகம் அமைதியாகவும் அதே நேரத்தில் எதிலும் ஈடுபாடு கொள்ளாமலும் இருந்தது. ஜில்லென்றிருந்த அவரது விழிகளில் களைப்பு தேங்கியிருந்தது. உருக்கமும் கம்பீரமும் கொண்ட குரலில் அவர் பேசிக் கொண்டிருந்தார். இடையிடையே தமது கைவிரல்களைப் பின்னிப் பிரித்துக் கொண்டிருந்தார். ஆண்மையும் வலிமையும் நிறைந்த அவரது கம்பீரத் தோற்றத்துக்கு ஏற்றதாகத் தோன்றவில்லை அவரது அச் செயல். சொல்ல முடியாத சுமைச் சோகம் அல்லது வேதனை மிகுந்த சிந்தனை ஓட்டம்–இவற்றில் அவர் லயித்திருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றியது.

சட்டென்று அவர் பேசுவதை நிறுத்திக் கொண்டார். அவரது முக பாவத்திலே ஒரு மாறுதல் தோன்றியது. அவரது மாநிறக் கன்னங்கள் வெளிறின. கன்னத்து எலும்புகளுக்குக் கீழே உள்ள குழிகளின் சதை இறுகியது. தமக்கெதிரே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த அவரது விழிகளிலிருந்து அடக்க அடக்க அடங்காத பயங்கர வெறுப்புணர்வு கிளர்ந்து எழுந்தது. அதைக் கண்ணுற்ற நான் என்னையும் மீறி அவர்

ஷோலோகாவ்



பார்வை சென்ற இடத்தை நோக்கினேன். எங்கள் படைக்கு முந்திய முகாமிலிருந்து மூன்று ஜெர்மானியக் கைதிகள் காட்டைக் கடந்து கொண்டிருந்தார்கள். செஞ்சேனையைச் சேர்ந்த ஒரு போர்வீரன் அவர்களை இட்டுச் சென்று கொண்டிருந்தான். அவனது கோடை காலத்து உடை சூரிய வெப்பத்தில் வெளுத்துப் போய்க் கிடந்தது. பாதுகாப்புக் குழிகளில் அணிந்து கொள்ளும் தொப்பி தலைக்குப் பின்புறமாகச் சரிந்திருந்தது.

செஞ்சேனையைச் சேர்ந்த அவ்வீரன் சொகுசாக நடந்து கொண்டிருந்தான். அவனது துப்பாக்கி அவனுடைய நடைக்கேற்ற லயக் கட்டோடு ஆடி அசைந்து கொண்டிருந்தது. அதன் முனையில் பொருத்தியிருந்த கூரிய கத்தி வெய்யிலில் மிகப் பயங்கரமாகப் பளிச்சிட்டுக் கொண்டிருந்தது. உலர்ந்த மஞ்சள் நிறப் புழுதி படிந்த பூட்ஸ்களுக்குள் புதைந்திருந்த தங்கள் கால்களை இழுத்து இழுத்து ஜெர்மானியக் கைதிகளும் அவனைப் போலவே ஆடி அசைந்து நடந்து கொண்டிருந்தனர்.

பாதுகாப்புக் குழிக்கு அருகில் வந்ததும் முன்னால் போய்க் கொண்டிருந்த ஜெர்மானியக் கைதி எங்கள் மீது ஓநாய் போன்று கூரிய பார்வையை வீசினான். பிறகு சட்டென்று திரும்பித் தன் இருப்புப் பட்டையில் தொங்கிக் கொண்டிருந்த இரும்புத்தொப்பியைச் சரி செய்து கொண்டான். நடுத்தர வயதினன் அவன். ஒட்டிய அவனது கன்னங்களில் அடர்த்தியாக ஆணி ஆணியாகப் பழுப்பு நிறத்தில் ரோமக் கால்கள் குத்திட்டு நின்றன. லெஃப்டினண்ட் கெராசிமோவ் எழுந்து நின்றார். செஞ்சேனையைச் சேர்ந்த அந்த வீரனை அதட்டிக் கூப்பிட்டு, ''என்ன காரியம் செய்கிறாய் நீ? அவர்களை உலாவ இட்டுச் செல்கிறாயா, என்ன? கரகரவென்று இழுத்துச் செல், வேகமாக!'' என்று கடிந்தார்.

அவர் இன்னும் ஏதோ சொல்ல விரும்பினார். ஆனால் அடக்க முடியாத ஆங்காரம் அவர் மூச்சைத் திணற வைத்து விட்டது. விரைவாகத் திரும்பிப் பாதுகாப்புக் குழிப் பக்கம் ஓடிவிட்டார் அவர். அங்கிருந்த பிரபல லெஃப்டினெண்ட் ஒருவர் வியப்பும் ஆவலும் கொண்ட என் பார்வையைக் கண்ட பின் கூறினார்: ''ஒன்றும் செய்ய முடியாது. உணர்ச்சிக் கொந்தளிப்புக் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மானியர்களால் இவர் ஒரு முறை சிறைப்படுத்தப்பட்டவர். உங்களுக்குத் தெரியாதா? எப்பொழுதாவது பேச்சுக் கொடுத்தால் அவராகவே கூறுவார். அங்கே அவர் பல சித்திரவதைகளுக்கு உள்ளாக நேர்ந்திருக்கிறது. அதன் விளைவாக எந்த ஜெர்மானியனை உயிரோடு கண்டாலும் அவருக்குப் பிடிப்பதில்லை. ஆம், உயிரோடு இருப்பவனைக் கண்டால்தான் இந்த நிலை. இறந்தவனைக் கண்டால் தவறாகத் தோன்றுவதில்லை. மாறாக, ஒரு வகைத் திருப்தியே அடைகிறார். ஆனால் ஜெர்மானியக் கைதிகளைப் பார்த்து விட்டால் மட்டும், ஒன்று கண்களை மூடிக் கொண்டு விடுகிறார்; முகம் தொங்கி விடுகிறது; அல்லது முகத்தைத் திருப்பிக்கொண்டு அந்த இடத்தை விட்டே நழுவி விடுகிறார்.''

லெஃப்டினென்ட் என் அருகில் இன்னும் நெருங்கி வந்து இரகசியக் குரலில், ''நான் அவரோடு இரண்டு முறைகள் போர் முனைக்குப் போரிடச் சென்றிருக்கிறேன். அவர் ஒரு குதிரையைப் போன்று வலுவானவர். போர்க்களத்தில் புலியாக வளைய வருபவர். போர்முனையில் அவரது சாகசச் செயல்களை இன்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கலாம். நான் வாழ்வில் எத்தனையோ கண்டும் கேட்டும் இருக்கிறேன். ஆனால் துப்பாக்கி முனைகளும் கூரிய கத்திகளும் புரியும் அற்புதங்கள் குலைநடுங்கச் செய்யக் கூடியவையாகும்'' என்றார்.

* * *

அன்று இரவு ஜெர்மானியப் பீரங்கிப் படை பயங்கரமாகக் குண்டுமாரி பொழிந்தது. இருந்து இருந்து எங்கிருந்தோ வெகு தொலைவில் இலேசாகக் கரகரவென்று ஓசை எழும். அடுத்த சில கணங்களுக்கெல்லாம் நட்சத்திரங்கள் நிறைந்த வான மண்டலத்தில் குண்டுகளுக்குள்ளிருந்து வெளியேறும் வெடிமருந்து எழுப்பும் இடி ஒலி கேட்கும். சிறுகச் சிறுக அந்த ஒலி வளர்ந்து தேயும். அதோடு நிற்குமா? பின்னால் சாலை ஓரம் எங்களைத் திரும்பிப் பார்க்கச் சொல்லும். அங்கே எங்களுக்காக அடுத்த முகாமுக்கு வெடிமருந்து ஏற்றி வரும் டிரக்குகள் நின்று கொண்டிருக்கும். அவற்றை நோக்கி வெடித்திரி போலப் பிகபிகவென்று மஞ்சள் நிறச் சுவாலை ஓடும். அப்புறம் காது செவிடுபடும்படியான ஒரு வெடிச் சத்தம்; பூமியே வெடித்து விட்டது போல் எழும்.

குண்டுகள் வெடிக்காத மற்ற இடை நேரங்களிலே, காட்டில் அமைதி நிலவுவதாக நினைக்கும் வேளையிலே, பக்கத்துச் சேற்றுக் குட்டைகளிலிருந்து படையெடுத்து வரும் கொசுக்களின் 'ஙொய்' ஒலியும் பயந்து நடுங்கித் தொண்டை கிழியக் கத்தும் தவளைகளின் புலம்பலும் கேட்கும்.

நாங்கள் அடர்ந்த மரங்களுக்கிடையில் ஒரு புதருக்கடியில் உட்கார்ந்திருந்தோம். காப்டன் கெராசிமோவ், தமது கதையைக் கூறிக் கொண்டிருந்தார். அவரது கைகள் ஒரு கிளையில் இருந்த கொசுக்களை ஓட்டிக் கொண்டிருந்தன. எனக்குத் தெரிந்தவரையில் அவர் கதையை அவரது வாய் மொழியாகவே கூற முயல்கிறேன்.

* * *

போருக்கு முன்னால் நான் மேற்கு சைபீரியாவில் ஒரு தொழிற்சாலை மேஸ்திரியாக இருந்தேன். போன ஆண்டுதான் எனக்கு ராணுவத்திலிருந்து அழைப்பு வந்தது. சரியான தேதி சொல்ல வேண்டுமென்றால் 1941ம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் தேதி. என் குடும்பத்தில் நான், என் மனைவி, இரு குழந்தைகள், என் தந்தை — இவர்கள் தான். முதுமையினால் என் தந்தை செயலிழந்து போயிருந்தார். நான் போர்முனைக்குப் புறப்பட்ட பொழுது, என் மனைவி எனக்கு விடைதரும் பொழுது சிறிது அழுதது

* அன்பும் வெறுப்பும் அருகருகே வாழ்பவை.
* போர்முனை வீரராகப் பணியாற்றி அநுபவத்திலும் முதிர்ந்த திரு மைக்கேல் ஷோலோகாவ் கூறும் உண்மை இது.
* நோபல் பரிசு பெற்று அதன் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் ஷோலோகாவின் இந்தப் போர்முனைக் கதை எப்படி நேர்முக அநுபவமாக அமைந்திருக்கிறது, பாருங்கள்.
* அடுத்த ஆண்டு 'டான் நதி அமைதியாக ஓடுகிறது' என்னும் அவரது நோபல் பரிசு பெற்ற நவீனம் புத்தக உருவத்தில் தமிழ் வடிவம் பெற இருப்பதாகச் செய்தியும் வந்துள்ளது.



நெஞ்சைப் பிளந்தது. "கடைசி மூச்சு இருக்கும்வரை நம் நாட்டையும் நம் நாட்டு மக்களையும் காக்கப் பாடுபடுங்கள். இப்பணியில் தேவைப்பட்டால் உயிரையே கொடுக்கத் தயங்காதீர்கள். எப்படியும் நாம் வெற்றி பெற்றாக வேண்டும்!" என்று கூறினாள். எனக்கு நினைவிருக்கிறது. அப்பொழுது நான் சிரித்தேன். "உன்னை நீ என்னவென்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்? மனைவியாக இலட்சணமாக இல்லாமல் எனக்கு உபதேசம் செய்ய வந்து விட்டாயே! போர்முனையில் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் எனக்கு இல்லை என்ற எண்ணமா? வெற்றியைப் பற்றி நீ கவலைப்படாதே. 'ஃபாஸிஸ்ட்'களின் கழுத்தைத் திருகி நாங்கள் வெற்றி காண்போம். வேண்டுமானால் நீ பாரேன்!" என்று சிரிப்புக்கிடையே பதிலும் அளித்தேன்.

என் தந்தை யாருக்கும் இல்லாத நெஞ்சுரம் வாய்த்தவர். நான் புறப்படும்பொழுது அவரும் சில நல்லுபதேசங்கள் நல்கத் தவறவில்லை. "விக்டர்! கோரஸிமோவ்களின் குடும்பம் சாதாரணக் குடும்பம் இல்லை என்பதை நினைவு வைத்துக் கொள். உடலுழைப்பையே மூலதனமாகக் கொண்டு உயர்ந்த நீண்ட வம்ச பரம்பரையிலே வந்தவன் நீ. உன் முப்பாட்டனார் ஸ்ட்ரோகனோவுக்காகப் பணியாற்றியவர். நமது குடும்பம்தான் பல நூற்றாண்டுகளாக நாட்டுக்கென்று உருக்கு உற்பத்தியில் முனைந்து நின்றது. இந்தப் போரில் நீ உருக்கைக் காட்டிலும் உறுதியோடு நின்று பணியாற்ற வேண்டும். இந்த ஆட்சி நாம் உருவாக்கியது. இது உன்னைப் போர் தொடங்குவதற்கு முன்பாகவே விசேஷப் படைக்குக் கமாண்டராக்கியுள்ளது. நீ உறுதி குலையாது நின்று எதிரியை முறியடிக்க வேண்டும்!" என்றார்.

"அப்பா! அப்படியே செய்வோம், நாங்கள்!" என்றேன்.

ஸ்டேஷனுக்குப் போகும்பொழுது நான் மாவட்டக் குழு அலுவலகத்துக்குச் சென்றேன். எங்கள் செயலாளர் கண்டிப்பானவர், காரியம் ஒன்றே குறியானவர்; தர்க்கத்தில் சிறந்தவர். விடைபெறும் பொழுது, 'மனைவியும் முதியபிராயத்தினரான தந்தையுமே எனக்கு உபதேசம் புரியும் ஆசையை அடக்க முடியாமல் தவித்தார்களே! இந்த மனிதர் அரை மணி நேரமாவது லெக்சர் அடித்து என் உயிரை வாங்காமல் எங்கே விடப் போகிறார்?' என்றுதான் எண்ணினேன். ஆனால் அதற்கு நேர்மாறாக நடந்தது. போனதும் அவர், "உட்காரு, கோரஸிமோவ்!" என்று ஆசனமளித்தார். பழைய காலத்தில் பயணம் புறப்படுவதென்றால், ஒருசில கணங்களுக்காவது உட்காரச் சொல்லுவது வழக்கம். அதைத்தான் அவர் கடைப்பிடித்தார்.

"சிறிது நேரம் அவர் மௌனமாயிருந்தார். எழுந்து நின்றபொழுது அவருடைய மூக்குக் கண்ணாடி பனித்திருப்பதை நான் கண்டேன். 'இன்றென்ன, எல்லாம் அதிசயத்திலும் அதிசயமாக நிகழ்கிறதே!' என்று நான் எண்ணமிட்டேன். "காமரேட் கோரஸிமோவ்! சொல்வதற்கு ஒன்றும் அதிகமாக இல்லை. நீ இத்தனை பொடியனாக இருந்த காலத்திலிருந்து உன்னை நான் அறிவேன். காற்றில் பறக்கும் கழுத்துப் பட்டையோடு கூடிய 'பயோனியர்' வெட்டுச் சட்டை அணிந்திருப்பாயே, நினைவிருக்கிறதா உனக்கு? எனக்கு இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. அப்புறம் கம்யூனிஸ்ட் கட்சியின் இளைய அங்கத்தினன் என்ற முறையிலே கடந்த பத்தாண்டுகளாக உன்னிப்பாக உன்னைக் கவனித்து வந்திருக்கிறேன். அந்த ஜெர்மானியப் பன்றிகளுக்குச் சிறிதும் இரக்கம் காட்டாதே. உன்னை நம் கட்சி பூரணமாக நம்புகிறது!" என்றார். அப்புறம் முதன் முறையாக நாங்கள் ஒருவரையொருவர் அன்புறத் தழுவி விடைபெற்றோம். அப்பொழுது எனக்கு எங்கள் செயலாளர் முன் போல வறண்ட உள்ளம் படைத்தவராகத் தோன்றவில்லை. அவரிடமும் நைப்பு குடி கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

அவருடைய அன்பிலே தோய்ந்து மகிழ்ச்சியுடன் பிரியாவிடை பெற்று நான் அலுவலகத்திலிருந்து வெளியேறினேன்.

என் மனைவி என்னை மேலும் மகிழ்விக்க முயன்றாள். ஒரு மனைவி போர்முனைக்குச் செல்லும் தன் கணவனுக்கு விடை கொடுத்து அனுப்புகிறாள் என்றால் அது மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியாக இருக்க முடியாது என்பதை நீங்கள் அனைவரும் ஊகித்து உணர

லாம். என் மனைவியும் முதலில் சிறிது தடுமாறவேதான் செய்தாள். அவள் என்னிடம் ஏதோ மிகவும் முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல விரும்பினாள். ஆனால் அந்த வேளையில் அவள் மூளையில் எதுவுமே நிற்கவில்லை. அடியோடு மறந்து விட்டாள். வண்டி புறப்பட்ட பொழுது என் கைகளைப் பற்றிக் கொண்டு வண்டியோடு கூடவே ஓடிவந்தாள். "வித்யா! உடம்பைக் கவனித்துக் கொள்ளுங்கள். போர்முனையில் சளி–இளி பிடித்துக் கொண்டு விட்டால் சிரமம்! உடம்பைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டேயிருந்தாள். "அட கடவுளே! உனக்கு என்ன பதில் சொல்லுவது நத்மா? நீ என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சளி–குளிரைப் பற்றி நான் நினைத்துப் பார்க்க முடியுமா அங்கே? போர்க்களத்துச் சூழ்நிலை நல்ல ஆரோக்கியமானதாக இருக்கும். சிநேகாஷ்ண ஸ்திதி பிரமாதமாயிருக்கும். நீ கவலைப்படாமல் போய்ச் சேரு!" என்றேன். அவளைப் பிரிந்த பின் என் மனத்தை என்னவோ செய்தது. துன்பம் பிடித்துக் கொண்டது. ஆனாலும் அதே நேரத்தில் அவளுடைய இனிமையும் அசட்டுத்தனமும் நிறைந்த பேச்சை நினைத்தபோது இன்பமாகவும் இருந்தது. இன்பமும் துன்பமும் கலந்த என் உள்ளத்தில், ஜெர்மானியர்களின் செயல் சொல்லவொண்ணாத கோபத்தைப் பொங்கி எழச் செய்தது. 'அட, அண்டை நாட்டு நம்பிக்கைத் துரோகிகளே! போரைத் தொடங்கியது நீங்கள்தான். எனவே உஷாராயிருங்கள்!' என்றவன் 'என்றென்றும் நினைவுவைத்துக் கொள்ளும்படியாக நாங்கள் உங்களைப் புடைப்போம்!' என்று மனத்தில் கறுவிக் கொண்டேன்.

சிறிது நேரத்துக்கு அவர் மௌனமானார். போர்முனையில் இருபுறத்து இயந்திரத் துப்பாக்கிகளும் இயங்கிச் சுடும் ஒலி அந்த வேளையில் காதைத் துளைத்தது. சிறிது நேரத்துக்கெல்லாம் தொடங்கியது போலவே அந்த ஒலி நின்றும்விட்டது.

"போருக்கு முன்னால் நாங்கள் இயந்திரங்கள் முதலான தளவாடச் சாமான்களை ஜெர்மனியிலிருந்துதான் பெற்று வந்தோம். அவற்றை இணைக்கும் பொழுது, எனக்கு நன்றாக நினைவிருக்கிறது, ஒவ்வோர் உறுப்பையும் குறைந்தபட்சம் நான்கைந்து முறைகளாவது நாற்புறமும் புரட்டிக் கிரட்டிப் பார்ப்பேன். அந்த இயந்திரங்கள் அநுபவமும் ஆற்றலும் மிகுந்த கைகளினால் நிர்மாணிக்கப்பட்டவை என்பதில் ஐயமில்லை. நான் ஜெர்மானிய எழுத்தாளர்களின் நூல்களைக்கூடப் படிப்பதுண்டு. அதன் பலனாக, ஜெர்மானியர்களிடம் நான் விசேஷ சிரத்தை காட்டலானேன். உண்மையைக் கேட்கப் போனால், 'என்ன வெட்கக்கேடு! உழைப்பும் ஆற்றலும் மிக்க அந்த நாட்டு மக்கள் எப்படித்தான் இந்த ஹிட்லரின் அருவருக்கத்தக்க ஆட்சியைப் பொறுத்துக் கொள்கிறார்களோ?' என்றும் நான் எண்ணியதுண்டு... ஆனால், நமக்கென்ன? அது அவர்களுடைய சொந்த விஷயம் என்ற எண்ணமும் தொடர்ந்து எழும். அப்பொழுது மேற்கு ஐரோப்பாவில் போர் மூண்டுவிட்டது.

"ஆம், அப்பொழுது நான் போர்முனைக்குப் போய்க் கொண்டிருந்தேன். அவர்கள் படை வலுக் குறைந்ததல்ல. விஞ்ஞான ரீதியிலே அவர்கள் மிகவும் வளர்ந்தவர்கள் என்பதையும் என்னால் எண்ணிப் பாராமல் இருக்க முடியவில்லை. அத்தகைய எதிரிகளோடு போரிட்டு அவர்களுடைய எலும்பை முறித்துப் போடுவது என்பது மிகவும் ரசமான காரியம். 1941ல் நாங்களும் சளைத்திருக்கவில்லை. எதிரிகள் நாணயமாக நடந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை என்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஃபாசிசத்தை முறியடிக்க வேண்டுமென்றால் இப்படி ஒன்றை எதிர்பார்க்க முடியாது: எதிர்பார்க்கவும் கூடாது. ஆனால் ஒரு கொள்கையுமற்ற கொடியவர்களிடம் இப்படிச் சிக்கிக் கொள்ள நேரக்கூடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. அப்பப்பா! அத்தகைய கொடிய குணமும் உண்டா? அதைப் பற்றிப் பின்னால் கூறுகிறேன்......

"எங்கள் படை போர்முனைக்கு ஜூலை முடிவில் போய்ச் சேர்ந்தது. 27ந் தேதி காலை நாங்கள் போருக்குப் புறப்படவேண்டியிருந்தது. ஆரம்பத்தில் இத்தகைய அநுபவம் இல்லாததனால், போர்நிலை சிறிது பயங்கரமாகத் தோன்றியது. குழிகளில் பொருத்தப்பட்டுத் தீயைக் கக்கிய அவர்களுடைய பீரங்கிகள் எங்களைக் காலூன்ற விடவில்லை. ஆனால் பொழுதேறப் பொழுதேற நாங்கள் நிலைமையைச் சமாளித்தோம். அவர்களுடைய தாக்குதல்களுக்கு எதிர்த் தாக்குதல்கள் புரிந்து அவர்களை ஒரு கிராமத்திலிருந்து விரட்டியடித்தோம். அந்தப் போரில் நாங்கள் கிட்டத்தட்ட பதினைந்து வீரர்களைச் சிறைப் பிடித்தோம். எனக்கு அந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் நேற்று நடந்தது போலவே பசுமையாக நினைவிலிருக்கிறது. சிறைப்பிடிக்கப்பட்ட வீரர்கள் பயந்து செத்துக் கொண்டிருந்தார்கள். அதற்குள் எங்கள் தோழர்களின் ஆத்திரம் சற்று மட்டுப்பட்டிருந்தது. எல்லோரும் கைதிகளுக்குத் தங்களால் இயன்றதைக் கொடுத்தார்கள். ஒருவன் ஒரு பாத்திரத்தில் குழம்பு கொடுத்தான் என்றால், இன்னொருவன் வாயில் அடக்கச் சிறிது புகையிலையைக் கொடுத்தான். சிலர் குடிக்கத் தேநீர்கூடத் தந்தார்கள். எங்கள் படையைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய முதுகைத் தட்டித் தோழர்களே என்று கூப்பிட்டுத் தோழமைகூடக் கொண்டாடத் தொடங்கினார்கள். 'என் தோழனே! நீ எதற்காகப் போர் புரிகிறாய்?' — இதுபோன்ற கேள்விகளைக்கூடக் கேட்டார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

"எங்களில் ஒருவன் — பழங்காலத்துப் போர்வீரன் அவன் — இந்த உள்ளம் உருக்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான். 'உனது இந்தத் தோழர்களின் அன்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வை. இங்கே இவர்கள்

எல்லாரையும் தோழர்களாகப் பாவிப்பதற்கு முன்னால் ஒன்று தெரிந்து கொள்வோம். இவர்கள் தங்கள் எல்லைக்குள்ளே காயமுற்ற நமது வீரர்களையும் நம் நாட்டு மக்களையும் எப்படி நடத்துகிறார்கள் என்பது தெரியும் வரையிலாவது நாம் நமது இந்த உறவுக்கு அணைகோலி வைப்போம்' என்றான். அவனது இந்தச் சொற்கள் எங்கள் தலையிலே ஒரு வாளி குளிர்ந்த நீரை ஊற்றியது போலிருந்தது. இப்படிக் கூறியவன் அப்புறம் அங்கே நிற்கவில்லை, போய்விட்டான்.

''அதற்குப் பிறகுதான் எங்கள் படை அவர்கள் மீது இரண்டாவது தாக்குதலை மேற்கொண்டது. அப்பொழுது ஜெர்மானியக் கொடுங்கோலர்கள் எத்தனை காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்பதைக் காணும் வாய்ப்பு எங்களுக்குக் கிட்டியது. கிராமம், கிராமமாக அவர்கள் அழித்து விட்டார்கள். நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள், கிழவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இறந்து கிடந்த செஞ்சேனை வீரர்களின் சடலங்களைக்கூட அங்கபங்கம் செய்தார்கள். பெண்களிடமும் சிறுமிகளிடமும் தகாத முறையில் நடந்து கொண்டு, ஈவு இரக்க மின்றி அவர்களைக் கொன்றும் போட்டார்கள்.

''அவர்களுடைய மாக்கட் தன்மைபற்றிய ஒரு நிகழ்ச்சி என் மனத்தில் அழியாமல் இடம் பற்றிவிட்டது. பள்ளி செல்லும் ஒரு சிறுமி. வயது ஏறக்குறைய பதினைந்து இருக்கலாம். ஜெர்மானியர்கள் அவளைப் பிடித்துக் கொண்டு விட்டார்கள். பக்கத்தில் இருந்த உருளைக் கிழங்குப் பாத்திகளுக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கே அவளோடு பலாத்காரம் புரிந்து கொன்றும் போட்டு விட்டார்கள். உருளைக் கிழங்குச் செடிகளைப் படுக்கையாகக் கொண்டு உயிரற்ற அந்தப் பூவுடல் அலங்கோலமாகக் கிடந்ததைக் கண்ட பொழுது மனத்தைப் பிழிந்தெடுத்தது. நாற்புறமும் புத்தகங்கள் சிதறிக் கிடந்தன. அவள் முகம் பயங்கரமாகக் காட்சி தந்தது. உடல் முழுவதும் வாள் கொண்டு ஆழக் காயப்படுத்தப்பட்டிருந்தது. அந்த நிலையிலும்கூட அவள் புத்தகக் கட்டை இறுகப் பற்றிக் கொண்டிருந்தாள். நாங்கள் அவள் உடலை எங்கள் கோட்டினால் மூடிவிட்டு ஒருகணம் மௌனமாக நின்றோம். பிறகு எல்லோரும் அங்கிருந்து பேசாமல் நடந்தார்கள். நான் மட்டும் சற்றுத் தயங்கி நின்றேன். எனக்குப் பிரமை தட்டினாற் போலிருந்தது. 'பார்கோவ், — போலோவின்கின் ஜூனியர் செகண்டரி, மற்றும் செகண்டரி ஸ்கூல்களுக்கான இயற்கை பூகோளப் புத்தகம்!' அங்கே சிதறிக் கிடந்த புத்தகங்களில் ஒன்றுக்கு இந்தப் பெயர். எனக்கு அந்தப் புத்தகத்தைத் தெரியும். ஏனெனில், என் சிறிய பெண் அப்பொழுது ஐந்தாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அதுதான் அவளுக்கும் பாடப் புத்தகம்.

''இந்த நிகழ்ச்சி குறிஞ்சுக்கு அருகில் நடந்தது. ஸ்லிவெரி என்றுமிடத்தில் நாங்கள்



''இதென்ன? பால் ஒரே தண்ணி?''

''நானென்ன பண்ணுவேன்? மாடு கிணற்றுக்குள்ளே விழுந்திடுச்சி. அப்படியே கறந்துட்டேன்!''

ஒரு கால்வாயைக் கண்டோம். அங்கே ஜெர்மானிய அக்கிரமக்காரர்கள் செஞ்சேனை வீரர்களுக்குச் சொல்லொணாத துன்பங்களை அளித்துச் சாவுக்கு இரையாக்கியிருந்தார்கள். நீங்கள் கசாப்புக் கடைக்கு எப்பொழுதாவது சென்றிருந்தால், ஓரளவு அங்குள்ள நிலைமையை அநுமானத்தினால் உணர்ந்துகொள்ளலாம்.

கால்வாய்க் கரையில் வளர்ந்திருந்த மரக் கிளைகளில் அவர்களது விகாரமான சடலங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவர்களுடைய கைகால்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. உடல் தோல் பெரும்பாலும் உரிக்கப்பட்டிருந்தது. கால்வாயின் மடுவில் இன்னும் எண்மருடைய சடலங்கள் குவிக்கப்பட்டிருந்தன. என்ன, ஏது என்று இனம் கண்டு கொள்ள முடியாத நிலை. எல்லாம் வெட்டிக் குவிக்கப்பட்ட மாமிசக் குவியல் போலத் தோன்றியது. அவற்றின் மீது ஒன்றுக்கொன்று அடுக்கினாற்போல் எட்டுத் தொப்பிகள் உணவுத் தட்டுக்களெனத் தோற்றமளித்தன.

''கண்ணால் கண்டவற்றையெல்லாம் இம்மியும் பிசகாமல் அப்படியே வர்ணிக்கும் ஆற்றல் எனக்கு இல்லை. நீங்கள் உங்கள் கற்பனைத்திறனுக்கு வேலை கொடுத்தால், ஓரளவு உணரலாம். அந்தப் பயங்கர விவரங்களை அப்படியேகூறும் சொற்பெருக்கும் என்னிடத்தில் இல்லை. நீங்களே உங்கள் கண்களால் பார்த்திருந்தால்தான் புரிந்து கொள்ளமுடியும்.''

இதற்குப் பிறகு எங்கள் பேச்சு திசை மாறி விட்டது. லெப்டினென்ட் கெராசிமோவினால் வெகுநேரம் வரையில் எதுவுமே கூற முடியவில்லை.

''இங்கே புகை பிடிக்க அநுமதி உண்டா?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

"உண்டு, உண்டு. தாராளமாக உண்டு. ஆனால் வெளிச்சம் உண்டாகக் கூடாது!" என்று உடைந்த குரலில் பதில் சொன்னார் அவர். அதற்குப் பிறகு அவரே நெருப்புக்குச்சியைப் பற்ற வைத்துக் கொண்டு கூறலானார்:

"ஜெர்மானியர்களின் கொடுமையையும் காட்டுமிராண்டித்தனத்தையும் கண்டு நாங்களே கொடியவர்களாகி விட்டோம் என்பதை நீங்கள் சுலபமாக உணர முடியும். கொடுமையின் விளைவு கொடுமையானதாகத்தானே இருக்கமுடியும்? நாம் மனிதர்களிடம் மாட்டிக் கொள்ளவில்லை. இரத்தம் குடிக்கும் கொடிய காட்டு விலங்குகளிடம் மாட்டிக் கொண்டு விட்டோம் என்பதாக நாங்கள் உணர்ந்தோம். ஜெர்மானியப் படையெடுப்பாளர்கள் இயந்திரங்கள் சமைப்பதில் எத்தகைய திறமையும் ஆற்றலும் காட்டினார்களோ, அதே திறமையையும் ஆற்றலையும் காட்டி எங்கள் நாட்டவர்களிடம் அடாது நடந்து கொண்டு உயிரையும் வாங்கி விட்டார்கள் என்பது தெளிவு. சில காலத்துக்குப் பின் நாங்கள் எதிர்த் தாக்குதலுக்கு இரையாகிப் பின் நகரும்படியாயிற்று. ஆயினும் நாங்கள் பேயாகப் போர் புரிந்து கொண்டிருந்தோம்.

"என் கம்பெனியில் பெரும்பாலானவர்கள் சைபீரியாவாசிகள். ஆனால் நாங்கள் யூக்ரேனியாவின் ஒவ்வோர் அங்குல நிலத்தையும் பாதுகாக்கும் பொருட்டுப் பலத்த போரில் ஈடுபட்டிருந்தோம். என் பகுதியைச் சேர்ந்த எத்தனையோ வீரர்கள் யூக்ரேனில் கொன்று குவிக்கப்பட்டார்கள். அவர்களது இந்தத் தியாகச் செயலுக்கு ஜெர்மானியர்கள் கடுமையான பணயம் வைக்கும்படியாகிவிட்டது. நாங்கள் போரில் வெற்றிபெறவில்லை. என்றாலும் அவர்களைச் சரியானபடி இழுக்கடித்தோம்."

அவர் ஒரு முறை சிகரெட்டை உறிஞ்சி விட்டு மிருதுவான குரலில் கூறலானார்: "யூக்ரேனின் மண்ணின் பெருமையை என்னவென்பது? அவ்விடத்து இயற்கை வளத்தை எண்ணி மாளாது. ஒவ்வொரு கிராமமும், கிராமங்களில் உள்ள ஒவ்வொரு குடிசையும் அற்புதமானவை; அன்பு செலுத்தத் தூண்டுபவை. அதனால்தானோ என்னவோ, நாங்கள் எங்கள் இரத்தத்தை அதன் மானத்தைக் காப்பதற்காகப் பெருக்கிக் கொண்டிருந்தோம். இரத்தம் நீரைக் காட்டிலும் கெட்டியானது. எனவேதான் இரத்த பாசத்துக்குத் தனி மகிமை. எங்கேயாவது அந்தக் கிராமங்களில் ஒன்றை விட்டுப் பின் வாங்க நேர்ந்தாலும், எங்கள் மனத்துக்குக் இலேசாகும் கஷ்டமும் உண்டாயின. ஓரிடத்திலிருந்து பின்வாங்க நேரும்பொழுது நாங்கள் ஒருவரையொருவர் கண்ணெடுத்துப் பார்க்கக் கூட அஞ்சினோம்.

"அப்பொழுது, என்றைக்காகிலும் ஒரு நாள் நானே ஜெர்மானியர்கள் மூலம் சிறைப்படுத்தப்படுவேன் என்று கனவிலும் கருதியதில்லை. ஆனால் அப்படி ஒரு காரியம் நடந்துவிட்டது. நான் ஸெப்டம்பர் மாதத்தில் முதல் தடவையாகக் காயமுற்றேன். ஆனால் என் கம்பெனியோடு கூடவே இருந்தேன். இரண்டாம் தடவை நான் 21ந் தேதி போல்தாவா பகுதியில் டேவிசோவிகா என்னும் இடத்தில் போரிட்டுக் கொண்டிருக்கும் பொழுது காயமுற்றேன்; ஜெர்மானியப் படையினால் சிறைப்படுத்தவும் பட்டேன்.

"ஜெர்மன் டாங்கிகள் வலது புறமாக உள்ளே நுழைந்து வந்தன. அது சமைத்துச் சென்ற இடைவெளி வழியாக அவர்களது படை முன்னேறி வந்தது. நாங்கள் நாற்புறமும் சூழப்பட்டோம். ஆயினும் விடாமல் போரிட்டுக் கொண்டிருந்தோம். அன்று என் கம்பெனிக்குப் பலத்த நஷ்டம் ஏற்பட்டு விட்டது. எதிரிகளின் இரு டாங்கித்தாக்குதல்களைப் பயனற்றதாக்கி விட்டோம். அவர்களுடைய ஆறு டாங்கிகளையும் ஒரு கவச மோட்டாரையும் கலைக்குதவாதனவாகச் செய்துவிட்டோம். இவற்றைத் தவிர சோளக் கொல்லையில் கிட்டத்தட்ட நூற்றிருபது ஹிட்லரின் படை வீரர்களை வாளுக்கு இரையாக்கி எமனுலகுக்கு அனுப்பி வைத்தோம். அதற்குப் பின் அவர்கள் தங்களுடைய பெரிய பீரங்கிப் படையை எங்களெதிரே கொண்டு வந்து நிறுத்தினர்கள். நாங்கள் பொழுது புலர்ந்ததிலிருந்து நான்கு மணிவரை எந்த மேட்டில் நின்று போர் புரிந்துகொண்டிருந்தோமோ, அதை விட்டு வேறு வழியின்றி நிர்ப்பந்தமாக வெளியேறும்படியாகி விட்டது. சூரியன் உதித்ததிலிருந்தே நல்ல வெப்பம். வானத்திலே எங்கும் மேகங்கள் என்ற பேச்சையே காணோம். ஆதவன் நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தான். வெய்யிலின் கொடுமை எங்களை மூச்சுக்கூட விட முடியாமல் திணற அடித்தது. போதாக் குறைக்குப் பீரங்கிகள் வேறு தீயைக் கக்கிக் கொண்டிருந்தன. எங்களுக்கு ஒரே தாகம். உதடுகள் உலர்ந்து கறுத்து விட்டன. எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. என்னால் நாக்கைக் கூடக் கூட்ட முடியவில்லை. அப்பொழுதும் நான் எப்படியோ குரல் எழுப்பி உத்தரவுகள் போட்ட வண்ணம் இருந்தேன். என் குரல்தானா அது என்று எனக்கே சந்தேகமாக இருந்தது. நாங்கள் ஒரு மடுவைத் தாண்டிக்கொண்டிருந்தபொழுது எதிரிகளின் ஒரு குண்டு என் எதிரே வந்து வெடித்தது. கரிய மண்ணும் புகை மண்டலமும் தூணாக எழும்பி உயர்வதை நான் கண்டேன். குண்டின் ஒரு பகுதி என் தொப்பியைப் பிய்த்துக் கொண்டு சென்றது. இன்னொரு பகுதி என் வலது தோள்பட்டையில் ஊடுருவிச் சென்றது.

"நான் அங்கே எத்தனை நேரம் மூர்ச்சை இழந்த நிலையில் கிடந்தேன் என்பது எனக்குத் தெரியாது; நினைவில்லை. ஆனால் காலடிச் சத்தம் கேட்டு நான் உணர்வு பெற்றேன். பார்த்தபொழுது, நான் விழுந்து கிடந்த இடத்தில் கிடக்கவில்லை என்பதையும் அறிந்தேன். எனது இராணுவக் கோட்டு அகற்றப்பட்டிருந்தது. தோள்பட்டைக் காயத்தில் இலேசாகக் கட்டுக் கட்டப்பட்டிருந்தது. என் தொப்பியை எங்கோ காணோம். என் தலையிலும் ஒரு கட்டுப் போட்டிருந்தது. ஆனால்


வீட்டை விளங்க வைக்கின்றன
விந்தை மிக்க
கைத்தறித் துணிகள்
உங்கள் வீடு முன்னைவிட
கவர்ச்சியிருந்து காணகிறது.
நீங்களும் உங்கள் நண்பர்
களும் அங்கு அதிக நேரம்
தங்கி அளவளாவி அகமகிழ்
கிறீர்கள். இந்த மாற்றத்துக்
குக் காரணம் என்ன? —
வேறென்ன. கைத்தறித் துணி
யாலான கதவுத் திரைகள்,
ஜன்னல் மறைப்புகள், அலங்
காரப் படுதாக்கள், நாற்காலி
உறைகள், மேஜைத் துணிகள்
படுக்கை விரிப்புகள் போன்ற
வையே உங்கள் வீட்டில்
உற்சாகம் மிக்க சூழ்நிலையை
உண்டுபண்ணுகின்றன.
ஹாண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார், சென்னை-3



சென்னை
ஸ்டார் • பிராட்வே
நடராஜ் • ஸ்ரீநிவாசா
மற்றும் தென்னாடெங்கும்
சரவணா பிக்சர்ஸ்
G.N.வேலுமணி அளிக்கும்
நாணல்
கதை, வசனம், டைரக்ஷன்
தயாரிப்பு
K.பாலசந்தர் B.Sc. • G.V.சரவணன்
ELEGANT

அது சரிவரப் போடப்படவில்லை. அதன் ஒரு முனை என் மார்பில் விழுந்து ஆடிக்கொண்டிருந்தது. நம் படையைச் சேர்ந்தவர்களில் யாராவதுதான் என்னை வயலிலிருந்து தூக்கி வந்திருப்பார்கள். வழியில் அவர்கள்தான் முதற் சிகிச்சை என்ற முறையில் கட்டுப் போட்டிருப்பார்கள் என்ற எண்ணம் என் மூளையில் பளிச்சிட்டது. நான் சிரமப்பட்டுத் தலையைத் தூக்கினேன், அவர்களைக் காணலாம் என்ற நம்பிக்கையுடன். ஆனால் என்னெதிரே ஓடிவந்தவர்கள் எங்களுடைய படையைச் சேர்ந்தவர்கள் இல்லை; ஜெர்மானியர்கள். அவர்களுடைய காலடி ஓசை கேட்டுத்தான் நான் உணர்வு பெற்றிருக்கிறேன் என்பதையும் உணர்ந்தேன். அப்பொழுது நான் வெள்ளித் திரையில் படம் பார்ப்பது போல அவர்களைத் தெளிவாகப் பார்க்கும் சக்தியைப் பெற்றிருந்தேன். நான் என் பக்கத்தில் நாற்புறமும் துழாவிப் பார்த்தேன். ரிவால்வர்; ரைபிள், வெடி குண்டு எதுவுமே என் கைப்பிடிக்கு அகப்படவில்லை. யாராவது — ஒருவேளை எங்கள் படையைச் சேர்ந்தவராகவே இருக்கலாம் — என் ஆயுதங்களையும், வரை படங்களையும் என் உடலிலிருந்து அகற்றி எடுத்துக்கொண்டிருப்பார்களோ...?

'' 'அப்படியானால் நமது முடிவு காலம் நெருங்கிவிட்டதோ?' — நான் மனத்துள் எண்ணினேன். அந்த நேரத்தில் எனக்கு ஏன் இந்த எண்ணம்...? என் கதையை நீங்கள் உங்கள் வருங்கால நாவலுக்குக் கருப்பொருளாக்கிக்கொள்ள ஆசைப்பட்டால், இனி இடைப் பகுதிகளை நீங்களே நிரப்பிக்கொள்ள வேண்டியதுதான். உண்மை என்னவென்றால், அந்த நேரத்தில் அதிகம் சிந்திக்க நேரமே இல்லை. என் அருகிலேயே ஜெர்மானியர்கள் நின்று கொண்டிருந்தார்கள். ஆனால் நானோ படுத்தபடியே உயிரை விட விரும்பவில்லை. அப்படிச் செய்வது என் கொள்கைகளுக்கு எதிரானது. உங்களுக்குப் புரிகிறதல்லவா? அதாவது, நான் படுத்தபடியே உயிரை விடச் சித்தமாயில்லை. உணர்ச்சி உந்தவே, நான் என் முழுச் சக்தியையும் உபயோகித்துக் கைகளைத் தரையில் ஊன்றி எப்படியோ எழுந்து நின்று விட்டேன்.

''அவர்கள் என்னை அணுகுவதற்கு முன்பாக நான் எழுந்து நின்று விட்டேன். ஆனால் நான் நின்ற நிலை சாராயமருந்திப் போதை ஏறியவனை ஒத்திருந்தது. எந்த நேரமும் என் முழங்கால்கள் தளர்ந்து மடிந்து விடலாம். நாம் கீழே விழுந்துவிட்டால் அவர்கள் தங்கள் துப்பாக்கி முனையைப் பாய்ச்சி என்னைக் கொன்று போட்டுவிடுவார்கள் என்று பயந்தேன். அவர்களில் யாருடைய முகமும் எனக்கு இப்பொழுது நினைவு இல்லை. அவர்கள் தங்களுக்குள் சிரித்துப் பேசிய வண்ணம் என்னைச் சுற்றி நின்றுகொண்டிருந்தார்கள். 'என்னைக் கொன்று போடுங்களேன், துஷ்டர்களே!' நான் கூவினேன்: 'என்னைக் கொல்லுங்கள். என் கதையை முடியுங்கள். நான் கால் தளர்ந்து கீழே விழுவதற்கு முன்பாக இந்தப் பணியைச் செய்யுங்கள்!' அவர்களில் ஒருவன் என்னைத் துப்பாக்கிக் கட்டையால் அடித்தான். நான் கீழே விழுந்து விட்டேன். ஆனால் எப்படியோ சமாளித்துக் கொண்டு மீண்டும் எழுந்து நின்றேன். அவர்கள் எல்லோரும் கடகடவென்று சிரித்தார்கள். அவர்களில் ஒருவன் சமிக்ஞை காட்டித் தங்களோடு நடந்து வருமாறு கூறினான். நான் நடந்தேன்...

''தலைக் காயத்திலிருந்து கசிந்த ரத்தம் கன்னத்தின் வழியே ஓடிக் கட்டி தட்டியிருந்தது. காயத்தில் அப்புறமும் இரத்தம் கசிந்து கொண்டுதான் இருந்தது. கச கச வென்று சூடாக. என் தோள்பட்டையில் நல்ல வலி. வலது கையைத் தூக்க முடியாமல் கஷ்டப்பட்டேன். அந்த நேரத்தில் அங்கேயே படுத்துக் கிடந்தால் தேவலை போலத் தோன்றியது. எங்கும் போக மனம் இல்லை. ஆயினும் நான் நடந்துகொண்டு தானிருந்தேன்.

''ஊஹூம், நான் சாக விரும்பவேயில்லை. அதற்காக அடிமையாக வாழவும் ஆசைப்படவில்லை. மிகவும் முயன்று என் மூளையை ஒருநிலையில் வைத்து நடக்கலானேன். அந்த வலியிலும் என்னிடம் உள்ள உயிர்ச் சத்துப் போகவில்லை. நடக்கும் ஆற்றல் எனக்கு இருக்கிறது என்ற உணர்வே மேலோங்கி நின்றது. அப்பப்பா! தாகம் தாளாமல் என் நிலை எப்படி மோசமாகிக் கொண்டிருந்தது, தெரியுமா? என் நா ஒரேயடியாக வறண்டு விட்டது. ஒன்று மாற்றி ஒன்றாக ஒவ்வோர் அடி எடுத்து வைக்கும்போதும் என் கண்களெதிரே கரிய இருள் அலைகள் எழும்பிய வண்ணம் இருந்தன. நான் நினைவற்ற நிலையை நெருங்கிக்கொண்டிருந்த போதிலும், குடிக்கச் சிறிது நீரும் கிடைத்து இலேசாக இளைப்பாற வசதியும் கிடைத்தால் மீண்டும் பழைய படியே சரியாகிவிட முடியும் என்ற நம்பிக்கையில் நான் முன்னேறிக் கொண்டிருந்தேன்.

''எங்களில் கைது செய்யப்பட்டவர்களை ஒரு சிறு காட்டின் முனையில் வரிசையாக நிறுத்தினார்கள். பெரும்பான்மையானவர்கள் எங்களுக்கு அடுத்த படைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். என்னுடைய ரெஜிமென்டைச்சேர்ந்த மூன்றாவது கம்பெனியில் நான் இரண்டே இரண்டு பேர்களை மட்டும் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. பெரும்பான்மையான கைதிகள் காயமுற்றிருந்தார்கள்.

''ஒரு ஜெர்மானிய லெப்டினென்ட் தனக்குத் தெரிந்த அரைகுறை ருஷிய மொழியில் எங்களிடையே கமிசார்களும் கமாண்டர்களும் இருக்கிறோமா என்று கேட்டான். யாரும் விடையளிக்கவில்லை. அப்பொழுது அவன் கர்ஜனை புரிந்தான், 'கமிசார்களும் அதிகாரிகளும் இரண்டு அடி முன் எடுத்து வையுங்கள்!' என்று. ஆனால் யாருமே அசைந்து கொடுக்கவில்லை.

''லெப்டினென்ட் மெதுவாக வரிசைக்கு முன்னால் வந்தான். யூதர்களைப் போல் தோற்றமளித்த ஏறக்குறைய பதினைந்து நபர்களைத் தேர்ந்தெடுத்தான். அவர்கள் ஒவ்வொருவரிடமும் 'ஜூட்?' என்று கேட்

டான். பதிலை எதிர்பாராமலே குறிப்பிட்ட மனிதனைத் தனியாகப் போய் நிற்குமாறு உத்தரவிட்டான். அவன் தன் அநுமானத்தைக் கொண்டு பொறுக்கி எடுக்கப்பட்டவர்களில் யூதர்கள் மட்டுமென்ன, ஆர்மேனியர்களும், ருஷ்யர்களும் கூட இருந்தார்கள். மாதிரமான அவர்களுடைய தலைமயிர் கறுப்பாக இருந்தது. அவர்களை எங்கள் கூட்டத்திலிருந்து பிரித்துத் தனியாகச் சிறிது தொலைவுக்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே 'டாமி கன்'களைக் கொண்டு அவர்களைச் சுட்டுத் தீர்த்தார்கள். அதற்குப் பின் அலட்சியமாக எங்களனைவருடைய நிஜார்ப் பைகளையும் சோதனையிட்டார்கள். எங்களுடைய பாக்கெட் நோட்டு, மற்றும் எங்களுக்கென்று நாங்கள் தனிப்பட வைத்துக்கொண்டிருந்த பொருள்கள் அனைத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள். எங்கள் கட்சியின் அடையாளச் சீட்டைப் பாக்கெட் நோட்டில் வைக்கும் பழக்கம் எனக்கு எப்பொழுதுமே கிடையாது. நான் என் பாண்டின் உள் பைக்குள்தான் வைத்துக்கொள்வேன். அதனால் அவர்கள் அதைப் பார்க்க மறந்துவிட்டார்கள். மானிட இயல்பைப் பற்றி நீங்கள் சிந்திக்கத் தொடங்கினால், இந்த மனிதன்தான் எத்தகைய விநோதமான பிராணி என்பதைக் காண்பீர்கள். என் வாழ்க்கை ஒரு மெல்லிய நூலில் ஊசலாடிக் கொண்டிருந்தது என்பதை நான் நன்கு அறிவேன். தப்பியோடினால், ஓடும்போது கொல்லப்படாவிட்டாலும், வழியில் இறந்துபடுவேன் என்பதை நன்கு உணர்ந்திருந்தேன். ஏனென்றால் என் உடலிலிருந்து இரத்தம் மிகவும் வெளியேறியிருந்தது. என்னால் மற்றவர்களோடு அவர்களுக்கு இணையாக ஓட முடியாது. ஆயினும் என் நிஜார்ப் பை சோதனை முடிந்த பின் என் கட்சியின் அடையாளச் சீட்டு அவர்கள் கையில் கிடைக்காதது குறித்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். அந்த மகிழ்ச்சியில் எனக்கு என் தாகம் எல்லாம் தீர்ந்துவிட்டது போன்ற உணர்வு உண்டாயிற்று.

''நாங்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டோம். பிறகு மேற்குநோக்கி அழைத்துச் செல்லப்பட்டோம். சாலையில் இருமருங்கிலும் எங்களுக்குக் காவலாகச் சில வீரர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் தவிர எங்களோடு மோட்டார் சைக்கிள்களில் பத்துப் பன்னிரண்டு இராணுவ அதிகாரிகளும் வந்து கொண்டிருந்தனர். எங்களைப் படுவேகமாக நடத்திச் சென்றார்கள். அதே வேகத்தில் என் உடலில் வலுக் குன்றிக் கொண்டிருந்தது. இரண்டு முறை நான் விழக்கூட விழுந்து விட்டேன். ஆனால் எப்படியோ சமாளித்து எழுந்து இரண்டு முறைகளும் அவர்களோடு நடந்தேன். ஏனெனில், ஒரு நிமிஷம் நான் பின்தங்கிவிட்டாலும், படை முன்னேறிவிடும். எதிரிகள் என்னை அங்கேயே துப்பாக்கி ரவைக்கு இரையாக்கி விடுவார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன். எனக்கு முன்னால் போன சார்ஜெண்டுக்கு இந்த நிலைதான் ஏற்பட்டது என் கண் முன்னே. காலில் குண்டடி பட்டுக் காயமுற்றிருந்தான். எப்படியோ சிரமப்பட்டுக் காலை இழுத்து இழுத்து நடந்து கொண்டிருந்தான். இடையிடையே அவன் பொருமுவான், வலி தாங்காமல். சில சமயம் கதறியே விடுவான். நாங்கள் ஏறக் குறைய ஒரு கிலோ மீட்டர் நடந்திருப்போம் இப்படியாக. அப்பொழுது அவன் கிறீச்சிட்டுக் கதறி, 'இனி என்னால் பொறுக்க முடியாது தோழர்களே, எனக்குக் கடைசி விடை கொடுங்கள்!' என்று கூறி அப்படியே நடுச் சாலையில் உட்கார்ந்து விட்டான்.

''எங்கள் நண்பர்கள் கை கொடுத்து அவனைத் தூக்கி நிறுத்த முயன்றார்கள். ஆனால் அவன் மீண்டும் கால் நிலை பாவாமல் தடுமாறி விழுந்து விட்டான். அவனது நினைவு இன்னும் என் கண் முன்னே ஒரு கனவெனத் தோன்றுகிறது — விறைத்துத் தொய்ந்த இளம் முகம். வில்லென இழுத்த புருவங்கள், கண்ணீர்க் குளம் கட்டிய கண்கள். எங்கள் கும்பல் முன்னேறிவிட்டது. நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். மோட்டார் சைக்கிள்களில் வந்த இராணுவ அதிகாரிகளில் ஒருவன் அவனருகில் சென்றான். தன் வாகனத்திலிருந்து இறங்காமலே தன் கைத் துப்பாக்கியை எடுத்தான். சார்ஜெண்டின் காதோரமாகக் குறிவைத்துச் சுட்டுவிட்டான். நாங்கள் ஆற்றங் கரையை அடைவதற்கு முன்பாகவே ஜெர்மானியர்கள் இப்படிப் பின்தங்கிவிடும் செஞ்சேனையைச் சேர்ந்த பல கைதிகளையும் சாவின் மடியில் தூங்க வைத்துவிட்டார்கள்.

''அத்தனை சாவுகளுக்கும் பின்னர்தான் எங்களுக்கு ஓர் ஆறு தென்பட்டது. அதைக் கடக்கவென்று கட்டப் பட்டிருந்த பாலம் இடிந்து நொறுங்கிக்கிடந்தது. ஒருடிராக், இருப்பத்துக்கருகில் சகதியில் சிக்கிக் கொண்டிருந்தது. அங்கே போன பிறகுதான் நான் குப்புறுங் கரணமாக விழுந்தேன். நான் மூர்ச்சித்து விட்டேனா? இல்லை, மூர்ச்சித்து விடவில்லை. சாலையில் விழுந்து நீண்டு படுத்து விட்டேன். என் முகம் முழுவதும் புழுதி மண்டிவிட்டது. கோபத்தில் என் பற்கள் நறநறத்தன. என் கால்களுக்கிடையே சிக்கி மணல் நலுங்குவதையும் நான் உணர்ந்தேன். ஆனால் என்னால் எழுந்து நிற்க முடியவில்லை. என் தோழர்கள் என்னைத் தாண்டி முன்னேறி விட்டார்கள். 'சீக்கிரம் எழுந்து நில்!'—நண்பர்களில் ஒருவன் என் அருகாகப் போகும்போது மெதுவான குரலில் கூறிச் சென்றான்: 'இல்லாவிட்டால் இப்பொழுதே உன்னைக் கொன்று போட்டு விடுவார்கள்.' நான் என் விரல்களினால் வாயைக் கிழிக்க முயன்றேன். என் விழி இமைகளை இறுக மூடிக் கொண்டேன். படுத்து விடும் சண்டி மாடுகளை எழுப்பக் கண்ணிலும் மூக்கிலும் வெங்காயத்தையும் மூக்குப் பொடியையும் திணித்தால் அந்த வேதனை தாளாமல் எழுந்துவிடும் அல்லவா? அதே போல நம்மை நாமே வருத்திக் கொண்டு உணர்வு பெற்று எப்படியாவது அந்த வேதனையில் காலை ஊன்றி எழுந்துவிடலாம் என்றுதான் நான் பலவாறாக முயன்றேன்.

டான். பதிலை எதிர்பாராமலே குறிப்பிட்ட மனிதனைத் தனியாகப் போய் நிற்குமாறு உத்தரவிட்டான். அவன் தன் அனுமானத்தைக் கொண்டு பொறுக்கி எடுக்கப்பட்டவர்களில் யூதர்கள் மட்டுமென்ன, ஆர்மேனியர்களும், ருஷ்யர்களும் கூட இருந்தார்கள். மாநிறமான அவர்களுடைய தலைமயிர் கறுப்பாக இருந்தது. அவர்களை எங்கள் கூட்டத்திலிருந்து பிரித்துத் தனியாகச் சிறிது தொலைவுக்கு அழைத்துச் சென்றார்கள். நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே 'டாமி கன்'களைக் கொண்டு அவர்களைச் சுட்டுத் தீர்த்தார்கள். அதற்குப் பின் அலட்சியமாக எங்களனைவருடைய நிஜார்ப் பைகளையும் சோதனையிட்டார்கள். எங்களுடைய பாக்கெட் நோட்டு, மற்றும் எங்களுக்கென்று நாங்கள் தனிப்பட வைத்துக்கொண்டிருந்த பொருள்கள் அனைத்தையும் பிடுங்கிக்கொண்டார்கள். எங்கள் கட்சியின் அடையாளச் சீட்டைப் பாக்கெட் நோட்டில் வைக்கும் பழக்கம் எனக்கு எப்பொழுதுமே கிடையாது. நான் என் பாண்டின் உள் பைக்குள்தான் வைத்துக்கொள்வேன். அதனால் அவர்கள் அதைப் பார்க்க மறந்துவிட்டார்கள். மானிட இயல்பைப் பற்றி நீங்கள் சிந்திக்கத் தொடங்கினால், இந்த மனிதன்தான் எத்தகைய விநோதமான பிராணி என்பதைக் காண்பீர்கள். என் வாழ்க்கை ஒரு மெல்லிய நூலில் ஊசலாடிக் கொண்டிருந்தது என்பதை நான் நன்கு அறிவேன். தப்பியோடினாலும், ஓடும்போது கொல்லப்படாவிட்டாலும், வழியில் இறந்துபடுவேன் என்பதை நன்கு உணர்ந்திருந்தேன். ஏனென்றால் என் உடலிலிருந்து இரத்தம் மிகவும் வெளியேறியிருந்தது. என்னால் மற்றவர்களோடு அவர்களுக்கு இணையாக ஓட முடியாது. ஆயினும் என் நிஜார்ப் பை சோதனை முடிந்த பின் என் கட்சியின் அடையாளச் சீட்டு அவர்கள் கையில் கிடைக்காதது குறித்து மிகவும் மகிழ்ச்சியுற்றேன். அந்த மகிழ்ச்சியில் எனக்கு என் தாகம் எல்லாம் தீர்ந்துவிட்டது போன்ற உணர்வு உண்டாயிற்று.

''நாங்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டோம். பிறகு மேற்குநோக்கி அழைத்துச் செல்லப்பட்டோம். சாலையின் இருமருங்கிலும் எங்களுக்குக் காவலாகச் சில வீரர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைத் தவிர எங்களோடு மோட்டார் சைக்கிள்களில் பத்துப் பன்னிரண்டு இராணுவ அதிகாரிகளும் வந்து கொண்டிருந்தனர். எங்களைப் படுவேகமாக நடத்திச் சென்றார்கள். அதே வேகத்தில் என் உடலில் வலுக் குன்றிக் கொண்டிருந்தது. இரண்டு முறை நான் விழக்கூட விழுந்து விட்டேன். ஆனால் எப்படியோ சமாளித்து எழுந்து இரண்டு முறையும் அவர்களோடு நடந்தேன். ஏனெனில், ஒரு நிமிஷம் நான் பின்தங்கிவிட்டாலும், படை முன்னேறிவிடும். எதிரிகள் என்னை அங்கேயே துப்பாக்கி ரவைக்கு இரையாக்கி விடுவார்கள் என்பதை நான் அறிந்திருந்தேன். எனக்கு முன்னால் போன சார்ஜெண்டுக்கு இந்த நிலைதான் ஏற்பட்டது என் கண் முன்னே. காலில் குண்டடி பட்டுக் காயமுற்றிருந்தான். எப்படியோ சிரமப்பட்டுக் காலை இழுத்து இழுத்து நடந்து கொண்டிருந்தான். இடையிடையே அவன் பொருமுவான், வலி தாங்காமல். சில சமயம் கதறியே விடுவான். நாங்கள் ஏறக் குறைய ஒரு கிலோ மீட்டர் நடந்திருப்போம் இப்படியாக. அப்பொழுது அவன் கிறீச்சிட்டுக் கதறி, 'இனி என்னால் பொறுக்க முடியாது தோழர்களே, எனக்குக் கடைசி விடை கொடுங்கள்!' என்று கூறி அப்படியே நடுச் சாலையில் உட்கார்ந்து விட்டான்.

''எங்கள் நண்பர்கள் கை கொடுத்து அவனைத் தூக்கி நிறுத்த முயன்றார்கள். ஆனால் அவன் மீண்டும் கால் நிலை பாவாமல் தடுமாறி விழுந்து விட்டான். அவனது நினைவு இன்னும் என் கண் முன்னே ஒரு கனவெனத் தோன்றுகிறது — விறைத்துத் தொய்ந்த இளம் முகம், வில்லென இழுத்த புருவங்கள், கண்ணீர்க் குளம் கட்டிய கண்கள். எங்கள் கும்பல் முன்னேறிவிட்டது. நான் பின்னால் திரும்பிப் பார்த்தேன். மோட்டார் சைக்கிள்களில் வந்த இராணுவ அதிகாரிகளில் ஒருவன் அவனருகில் சென்றான். தன் வாகனத்திலிருந்து இறங்காமலே தன் கைத் துப்பாக்கியை எடுத்தான். சார்ஜெண்டின் காதோரமாகக் குறிவைத்துச் சுட்டுவிட்டான். நாங்கள் ஆற்றின் கரையை அடைவதற்கு முன்பாகவே ஜெர்மானியர்கள் இப்படிப் பின்தங்கிவிடும் செஞ்சேனையைச் சேர்ந்த பல கைதிகளையும் சாவின் மடியில் தூங்க வைத்துவிட்டார்கள்.

''அத்தனை சாவுகளுக்கும் பின்னர்தான் எங்களுக்கு ஓர் ஆறு தென்பட்டது. அதைக் கடக்கவென்று கட்டப் பட்டிருந்த பாலம் இடிந்து நொறுங்கிக்கிடந்தது. ஒருடிரக், திருப்பத்துக்கருகில் சகதியில் சிக்கிக் கொண்டிருந்தது. அங்கே போன பிறகுதான் நான் குப்புறக் கரணமாக விழுந்தேன். நான் மூர்ச்சித்து விட்டேனா? இல்லை, மூர்ச்சித்து விடவில்லை. சாலையில் விழுந்து நீண்டு படுத்து விட்டேன். என் முகம் முழுவதும் புழுதி மண்டிவிட்டது. கோபத்தில் என் பற்கள் நறநறத்தன. என் கால்களுக்கிடையே சிக்கி மணல் நறுங்குவதையும் நான் உணர்ந்தேன். ஆனால் என்னால் எழுந்து நிற்க முடியவில்லை. என் தோழர்கள் என்னைத் தாண்டி முன்னேறி விட்டார்கள். 'சீக்கிரம் எழுந்து நில்!'—நண்பர்களில் ஒருவன் என் அருகாகப் போகும்போது மெதுவான குரலில் கூறிச் சென்றான்: 'இல்லாவிட்டால் இப்பொழுதே உன்னைக் கொன்று போட்டு விடுவார்கள்.' நான் என் விரல்களினால் வாயைக் கிழிக்க முயன்றேன். என் விழி இமைகளை இறுக மூடிக் கொண்டேன். படுத்துவிடும் சண்டி மாடுகளை எழுப்பக் கண்ணிலும் மூக்கிலும் வெங்காயத்தையும் மூக்குப் பொடியையும் திணித்தால் அந்த வேதனை தாளாமல் எழுந்துவிடும் அல்லவா? அதே போல நம்மை நாமே வருத்திக் கொண்டு உணர்வு பெற்று எப்படியாவது அந்த வேதனையில் காலை ஊன்றி எழுந்துவிடலாம் என்றுதான் நான் பலவாறாக முயன்றேன்.

''எங்கள் குழு நகர்ந்து விட்டது. என்னை நோக்கி வரும் மோட்டார் சைக்கிள்களின் சக்கரம் எழுப்பும் ஒலி தெளிவாக என் காதுகளில் விழுந்தது. எங்கிருந்து எனக்கு அந்த வலு வந்ததோ தெரியவில்லை. எப்படியோ எழுந்து கால் ஊன்றி நின்றேன். மோட்டார் சைக்கிள்கள் வரும் திசையைத் திரும்பிப் பாராமலே குடிகாரனைப் போலத் தட்டித் தடுமாறி ஓடி என் அணியைப் பிடிக்க முயன்றேன். எப்படியோ முன்னேறிப் பின்னால் உள்ள ஏதோ ஒரு வரிசையையும் பிடித்து விட்டேன். ஆற்றைக் கடக்கும்போது டாங்கிகளும் டிரக்குகளும் சென்று சென்று சேறாகக் குழப்பி வைத்திருந்த தண்ணீரைத்தான் நாங்கள் காண முடிந்தது. அந்தச் சேற்றுக் குழம்பை உளமாறப் பருகினோம். அந்த நேரத்துக்குச் சுட்டுக் கொண்டிருந்த அந்தச் சேற்றுக் குழம்புதான் எங்களுக்கு அருவியிலிருந்து பெருகும் குளிர்ந்த தெள்ளிய நீருக்கு ஒப்பாகத் திகழ்ந்தது. நான் என் தோள்களிலும், தலையிலும் அந்த நீரை வாரித் தெளித்துக் கொண்டேன். அதனால் எனக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. இறந்து போன தெம்பு மீண்டும் ஊறியது போலிருந்தது. இனி நாம் கீழே விழுந்து பாதையிலேயே பின் தங்கிவிட மாட்டோம் என்ற நம்பிக்கையும் பிறந்தது.

''அப்பொழுதுதான் நாங்கள் நதியைப் பின் நிறுத்தி முன்னேறியிருந்தோம். வழியிலே நடுத்தரமான ஜெர்மன் டாங்கிப் படை ஒன்று நின்றுகொண்டிருப்பதைக் கண்டோம். எல்லாவற்றுக்கும் முன்னால் நின்ற டாங்கியின் டிரைவர் எங்களைப் பார்த்தான். போர்க் கைதிகள் நாங்கள் என்பதைப் புரிந்து கொண்டான். டாங்கியிலிருந்து விஷ வாயுவை எங்கள் மீது பிரயோகித்தான். முன் வரிசையில் சென்றவர்கள் கண் கலங்கிக் குருடாகி ஒருவர் மீது ஒருவர் விழுந்து நசுங்கினார்கள். மோட்டார் சைக்கிள்களில் வந்த அதிகாரிகளும் காவற் படையினரும் இந்தக் காட்சியைக் கண்ணுற்றுக் கடகடவெனப் பேய்ச் சிரிப்புச் சிரித்து மகிழ்ந்தனர். பிறகு அவர்கள் ஜன்னல்களைத் திறந்து கைகளை ஆட்டிச் சமிக்ஞை செய்து கொண்டிருந்த டாங்கி டிரைவர்களிடம் உரத்த குரலில் ஏதோ கூறினார்கள். நச்சுப் புகையின் இருட்டு அடங்கியதும் நாங்கள் சிறிது சமாளித்துக் கொண்டோம். மீண்டும் அவர்கள் எங்களை அணிவகுத்து நிற்குமாறு உத்தரவிட்டார்கள். பிறகு சாலை ஓரமாக எங்களை இட்டுச் சென்றார்கள். ஜெர்மானியர்களின் விநோத உணர்வு வேடிக்கையானது, விசித்திரமானது என்பதில் ஐயமில்லை...

''அன்று மாலையோ இரவோ நான் ஓடி விட எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. அப்படிச் செய்து நம்மால் தப்ப முடியாது என்பதை நான் அறிந்திருந்தேன். இரத்தப் பெருக்கின் காரணமாக நான் மிகவும் வலு இழந்து விட்டிருந்தேன். அதோடு எங்கள் போக்கையும், நடவடிக்கையையும் கடுமையாகக் கண்காணித்து வந்தார்கள். ஓடித் தப்ப எந்த முயற்சி எடுத்துக் கொண்டாலும் அது வீணே. அந்த நேரத்துக்கு இந்த முடிவுக்கு வந்தவன், அப்பொழுதே ஓடித் தப்ப முயலாமற் போனது எத்தனை அறிவீனமான செயல் என்று என்னை நானே பல முறைகள் நொந்துகொண்டதுண்டு. மறுநாள் எங்களை ஒரு கிராமத்துக்கு இட்டுச் சென்றார்கள். அங்கே ஒரு ஜெர்மானியப் படை முகாமிட்டிருந்தது. ஜெர்மானியத் தரைப் படை வீரர்கள் எங்களைப் பார்ப்பதற்காகச் சாலையிலே குழுமியிருந்தார்கள். எங்களுக்குக் காவலாக வந்த படையினர், இக்கிராமத்திலிருந்து நடப்பதை விட்டு நாங்கள் ஓட வேண்டும் என்று எங்களுக்கு ஆணையிட்டனர். போரிட வந்திருக்கும் அந்த ஜெர்மானிய வீரர்களுக்கு எதிராக எங்களை அவமானப்படுத்த வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு. அவர்களுடைய அந்த ஆசையை நிறைவேற்ற நாங்கள் அவர்கள் ஆணையைச் சிரமேற்கொண்டு ஓடினோம். யாராவது பின் தங்கினாலும் அல்லது கீழே விழுந்து விட்டாலும் அங்கேயே குண்டுக்கு இரையாக்கப்பட்டோம். மாலை நேரத்தில் அந்தி மயங்குவதற்குள்ளாக நாங்கள் போர்க் கைதிகளின் முகாமை அடைந்து விட்டோம்.

''இந்த முகாம் ஆரம்பத்திலேயே ஒரு மெஷின் – டிராக்டர் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்தது. நாற்புறமும் முள் வேலியினால் சூழ்ந்திருந்தது. உள்ளே கணக்கற்ற கைதிகள் தோளோடு தோள் பொருத்திப் புளியடைப்பதுபோல் திணிக்கப்பட்டிருந்தனர். எங்கள் அனைவரையும் முகாமைச் சேர்ந்த பாராக்



முறையில் விட விரும்பவில்லை. எதிர்ப்பு உணர்ச்சி என்னிடம் எல்லைக்கடங்காமல் கொப்புளித்துக் கொண்டிருந்தது. நான் என் நாட்டின் சார்பில் மீண்டும் போரிட, எங்கள் படையில் போய்க் கலந்து கொள்ளவே விரும்பினேன். கடைசியில், எதிரியின் கொடுமைகளுக்குச் சரியான முறையிலே பழி வாங்கவேண்டி நான் திரும்பியும் போனேன்.

''அந்த முகாமிலிருந்து, நாலு கிலோ மீட்டர் தொலைவிலிருந்த வேறு ஒரு முகாமுக்கு மாற்றினார்கள். நான் முதலில் இருந்த முகாம் தாற்காலிக முகாம்தான். இந்த முகாம் முந்திய முகாமைக் காட்டிலும் எந்த விதத்திலும் மாறுபட்டிருக்கவில்லை. முன் இருந்த முகாமைப் போலவே, இதற்கும் இரும்பு முள் வேலி உண்டு. நீண்டு உயர்ந்த தூண்கள் உண்டு. சிறைக் கைதிகளை அடைத்திருக்கும் இடத்துக்கு நேரே மேல் கூரை கிடையாது. வானவெளிதான் கூரையாகச் செயலாற்றியது. உணவும் அதே பழைய மாதிரிதான் கிடைத்து வந்தது. சிற்சில சமயம் பச்சைக் கம்புக்குப் பதிலாக வேக வைத்த உணவு கிடைப்பதுண்டு. பூச்சியடித்த நாற்றம் தாளாது அதில். அவர்கள் இறந்த குதிரைகளின் சடலங்களை அங்கே இழுத்து வந்து போட்டு, அவற்றின் இறைச்சியைக் கைதிகளே தங்களுக்குள் பங்கு போட்டுக் கொள்ளும்படி விட்டுவிடுவார்கள். அந்த இறைச்சியை நாங்கள் பட்டினியினால் செத்துவிடக் கூடாதே என்று அஞ்சிச் சாப்பிட்டு வைத்தோம். ஆனால் உண்மையில் நடந்தது என்னவென்றால், அதைப் புசித்ததனாலேயே எங்களில் நூற்றுக் கணக்கானவர் மரித்து விட்டார்கள்..... அப்பொழுது, இன்னும் ஊறு விளைவிப்பதற்காகவோ என்னவோ, குளிர்காலம் வந்து சேர்ந்தது. அக்டோபர் மாதத்தில் இடைவிடாத மழை பெய்யும். காலையில் பனி பெய்யும். நாங்கள் குளிரால் வாடி அவதியுற்றோம். நான் செஞ்சேனையைச் சேர்ந்த ஒரு வீரனின் சடலத்திலிருந்து அவனது, 'டியூனிக்'கையும் நீண்ட கம்பளிச் சட்டையையும் கழற்றி அணிந்து கொண்டேன். ஆனால் அதனாலும் நான் என்னை முழுவதும் குளிரிலிருந்து காத்துக் கொள்ள முடியவில்லை. இத்தனை நாட்களும் பட்டினி — பசி கிடந்து கிடந்து அதற்கு நாங்கள் எங்களைப் பழக்கிக் கொண்டு விட்டோம்.

எங்களைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த பாராக்காரர்கள் எங்களுக்குத் தரப்படும் உணவைத் திருடித் தின்று கட்டுமஸ்தானவர்களாகக் காட்சியளித்தார்கள். அவர்கள் அனைவரும் கூடைச் செங்கல்லும் பிடாரிதான் என்ற கதையாக ஒரே இயல்பு படைத்தவர்களா யிருந்தார்கள். அத்தகைய துஷ்டர்கள் அடங்கிய வேறு ஒரு சமுதாயத்தை விளக்கேற்றித் தேடினாலும் காண முடியாது. அவர்களுடைய கேளிக்கை உணர்வு எத்தகையதாயிருந்தது, தெரியுமா? விடியற்காலையில் ஒரு கார்ப்போரல் முள் வேலிவரை வருவான். துபாஷி ஒருவன் மூலம் பிரகடனப்படுத்துவான்! 'இப்பொழுது ரேஷன் தரப்படும். வலதுபுறமாக வந்து பெற வேண்டும்.'

''கார்ப்போரல் இதைக் கூறி விட்டுப் போய் விடுவான். தன் கால் பலத்தில் நிற்கக் கூடிய கைதி ஒவ்வொருவனும் எழுந்து வலது புறம் போய் நிற்பான். நாங்கள் எதிர் பார்த்து நிற்போம். ஒருமணி, இரண்டு மணி அல்ல; மூன்று நான்கு மணி நேரம் கூடக் கால்கடுக்க நிற்போம். குளிரில் நடுங்கியவண்ணம் நூற்றுக்கணக்கான மனிதக் கூடுகள் ரேஷனுக்காகத் தவங்கிடந்து நிற்கும்.

''இடீரென்று ஜெர்மானியர்கள் வேறு பக்கமாகத் தோன்றுவார்கள். குதிரை இறைச்சியைத் துண்டங்களாக முள்வேலி வழியே விட்டெறிவார்கள். பட்டினியினால் துடிக்கும் மனித மந்தை ஒன்றையொன்று மோதித் தள்ளிக் கொண்டு இறைச்சியை எடுக்கத் தாவும். அப்பப்பா! சேற்றில் தோய்ந்த இறைச்சித் துண்டங்களுக்காகக் கைதிகளாகிய எங்களுக்கிடையே கூடக் கைகலப்பு ஏற்பட்டுவிடும். கூறுகெட்ட இந்த வயிற்றின் பசிதான் எத்தனை கொடியது!

''ஜெர்மானியர்கள் இந்தக் காட்சியைக் கண்டு கலகலவென்று நகைப்பார்கள். பிறகு இயந்திரத் துப்பாக்கி கொண்டு சுடுவார்கள். அலறலையும் கதறலையும் கேட்டு ஆனந்தப்படுவார்கள். சிறைக் கைதிகள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மீண்டும் வலதுபுறம் ஓடுவார்கள். பூமியிலே இறந்தவர்களும் காயம் பட்டவர்களும் பெருங் குவியலாகக் குவிந்து விடுவார்கள். இவ்வளவும் நடந்தபின் உயரமான, ஆனால் ஒல்லியான ஜெர்மானிய லெஃப்டினென்ட் ஒரு துபாஷியை அழைத்துக் கொண்டு முள்வேலி வரை வருவான். அவன்தான் அந்த முகாமுக்குத் தலைவன். தனக்கு வரும் சிரிப்பை அடக்க முயன்றவனாகக் கூறுவான்: 'ரேஷன் வழங்கும் பொழுது கைதிகளுக்கிடையே வேண்டத் தகாத நிகழ்ச்சி ஒன்று நடந்ததாக எனக்குச் செய்தி வந்துள்ளது. மீண்டும் இது போன்ற நிகழ்ச்சி நடைபெறுமானால் நான் தயை தாட்சிண்யமின்றி உங்கள் அனைவரையும் — ஒரு ருஷியன்கூட வைக்காமல் குண்டுக்கு இரையாக்கிவிடுவேன். ஜாக்கிரதை! இறந்தும் காயம் பட்டும் கிடக்கும் அனைவரையும் இங்கிருந்து உடனடியாக அப்புறப்படுத்துங்கள்.' அதிகாரிக்குப் பின்னால் நிற்கும் ஜெர்மானிய வீரர்கள் சிரித்துச் சிரித்துப் பூரித்துப் போவார்கள். ஆம். இவை போன்ற வேடிக்கை விளையாட்டுக்களெல்லாம் தான் அவர்களுக்குப் பிடித்திருந்தது.

''நாங்கள் பேசாமல் இறந்த வீரர்களை முகாம் பகுதியிலிருந்து இழுத்துச் செல்லுவோம். அருகில் உள்ள வாய்க்கால் ஓரத்தில் புதைத்து வருவோம்...

''ஏதோ கெட்ட கனவு போல எங்கள் நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. நான் நாளுக்கு நாள் இளைத்து வலுக் குன்றிக் கொண்டிருந்தேன். சிறு குழந்தைகூட என்னைத் தள்ளிக் கீழே வீழ்த்திவிடலாம். அப்படித் துரும்பாகி விட்டேன். சிற்சில சமயம் பயந்தவன் போல எலும்பு தெரியும் என் மெலிந்த கைகளைப் பார்ப்பேன். 'இக்

இருந்து என்னால் எப்படியாவது வெளியேற முடியுமா?' என்று வியப்போடு சிந்தித்துப் பார்ப்பேன். ஆரம்பத்திலேயே தப்பி ஓடாமற் போனேனே என்று என்னை நானே நொந்து கொள்ளுவேன். என்னை அவர்கள் அப்பொழுதே கொன்று போட்டிருந்தால் குறைந்தபட்சம் இந்த அமானுஷிகமான சித்திரவதையிலிருந்து தப்பியிருக்கலாமே என்று எண்ணிப் பாராத நாளே கிடையாது.

''மீண்டும் குளிர்காலம் வந்தது. நாங்கள் பனியை அகற்றிச் சுத்தம் செய்த பூமியில் படுப்போம். நாளுக்கு நாள் எங்கள் தொகை குறைந்து கொண்டே வந்தது. கடைசியில் ஒருநாள், இன்னும் சில நாட்களில் எங்களை வேலைக்கு அனுப்பப் போவதாக ஓர் அறிவிப்பு வந்தது. ருஷ்யர்களான நாங்கள் பெருமிதமடைந்தோம். எல்லோருடைய மனத்திலும் இலேசான நம்பிக்கைக் கீற்று ஒன்று ஒளி வீசியது. 'எப்படியாவது நமக்குத் தப்ப ஒரு வழி கிடைக்கக் கூடும் அல்லவா?' இந்த எண்ணமே ஒரு யானை பலத்தைத் தந்தது.

அன்றிரவு ஆழ்ந்த அமைதி நிலவியிருந்தது. பனியும் பெரிதாகப் பெய்து கொண்டிருந்தது. பொழுது விடிவதற்குச் சிறிது நேரம் முந்தித்தான் நாங்கள் பீரங்கிகளின் கர்ஜனையைக் கேட்டோம். என் அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எழுந்து விட்டார்கள். பீரங்கிகளின் ஒலி மீண்டும் கேட்கவே எங்களில் ஒருவன் உரக்கக் கூவினான்: 'தோழர்களே! இது நமது படைகளின் பீரங்கிச் சத்தமாகத் தோன்றுகிறது. போர் தொடுத்து முன்னேறி வந்திருக்கிறதென்று நினைக்கிறேன்.'

''அதற்குப் பின் நடந்த நிகழ்ச்சி கற்பனைக்கே அப்பாற்பட்டது. எங்கள் முகாமே வீறுகொண்டு எழுந்தது. செயலிழந்து வெகு நாட்களாக எழுந்திருக்க முடியாமல் கிடந்தவர்கள் கூட எப்படியோ புத்துயிர் பெற்றவர்கள் போலச் சட்டென்று எழுந்து நின்றார்கள். நாற்புறமும் மக்கள் கசமுசவென்று ஏதேதோ காதைக் கடித்துக் கொள்ளலாயினர். சிலர் விம்மி விம்மி அழலாயினர், பெண்களைப் போல. சிலர் என்ன, நானும்... நானுமேகூடத்தான் அழுதுவிட்டேன்...''

இதைக் கூறும்பொழுது லெப்டினென்ட் கோராசிமோவின் தொண்டை அடைத்துக் கொண்டு விட்டது. சிறிது நேரம் மௌனமாயிருந்த பின்னர் அவர் அமைதியான குரலில் தொடர்ந்தார். ''என் கண்களிலிருந்து நீர் முத்துக்கள் உதிர்ந்து கொண்டிருந்தன. யாரோ மிகவும் மெலிந்த குரலில் தேசிய கீதத்தை இசைத்தான். நாங்கள் எல்லோருமே கட்டிய தொண்டையோடு அதைச் சேர்ந்து பாடினோம். பாராக்காரர்கள் ரைஃபிள்களையும் டாமிகன்களையும் நீட்டி எங்களைக் குறி வைத்துச் சுடத் தொடங்கிவிட்டார்கள். 'படுத்துவிடு' என்று எங்களுக்கு உத்தரவு பிறந்தது. நான் நன்றாகப் படுத்துக் கொண்டு என் உடலைப் பனிக்கட்டிக்குள் புதைத்தவாறு குழந்தைகளைப் போல அழத் தொடங்கி விட்டேன். ஆனால் அந்தக் கண்ணீர் துயரக் கண்ணீர் அல்ல. பெருமிதமும் மகிழ்ச்சியும் பெய்த ஆனந்தக் கண்ணீர். தாய் நாட்டைச் சேர்ந்தவர்களின் பெருமையிலே பூரித்துப் பெருக்கிய நீர் அது. ஜெர்மானியர்கள் ஆயுதம் இல்லாத எங்களைக் கொன்று குவித்திருக்கலாம். ஏற்கெனவே பசியினால் வாடி அரைச் சாக்காடு செத்திருந்தவர்கள் நாங்கள். அவர்கள் எங்களைச் சித்திரவதை செய்து செய்து கொன்றிருக்கலாம். ஆனால் அவர்களால் எங்களது ஆத்ம பலத்தை அழிக்கவோ நசுக்கவோ முடியவில்லை. எத்தனை முயன்றாலும் எந்த நாளும் செய்ய முடியாத காரியம் அது. அவர்களது இலட்சியம் அதுவாக இருக்குமானால் நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். தவறான ஆட்களைப் பிடித்து அவர்கள் சிறைப்படுத்தி விட்டார்கள். அவர்கள் தலைகீழாக நின்றாலும் பலிதமடையாது. எங்களுடைய மன உறுதியைக் குலைக்க முடியாது.''

ஃ ஃ ஃ

அன்று இரவு நான் லெப்டினென்ட் கோராசிமோவின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றிய முடிவைக் கேட்க முடியவில்லை. ஹெட் குவார்ட்டர்ஸிலிருந்து அவருக்கு அவசர அழைப்பு வந்திருந்தது. சில நாட்களுக்குப் பிறகு நாங்கள் மீண்டும் சந்தித்தோம். பாதுகாப்புக் குழியில் கடுக்காய் கோந்தும் 'மில்டு' செடிகளின் மணமும் கலந்து மணத்துக் கொண்டிருந்தன. அவர் முன் பக்கமாகக் குனிந்து பெஞ்சியில் அமர்ந்திருந்தார். வலுவான எலும்புகளோடு கூடிய அவரது மணிக்கட்டுகள் முழங்கால்களில் பதிந்திருந்தன. விரல்கள் ஒன்றோடொன்று கோத்துக் கொண்டிருந்தன. அவர் அப்படி உட்கார்ந்திருப்பதைக் கண்ட நான், 'ஒரு வேளை சிறைப்பட்டிருந்தபொழுது, இம்மாதிரி பல மணி நேரங்கள் உட்கார்ந்திருக்கும் பழக்கம் அவருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். அது இன்னும் விடவில்லை போலும்!' என்று ஊகித்தேன். ஒன்றோடு ஒன்று கோத்து நிற்கும் விரல்கள், மௌனமே உருவாக அமர்ந்திருக்கும் நிலை — இவ்விரண்டும் துன்பமும் துயரமும் வருத்திக் கஷ்டமளிக்கும் நேரத்தில் பொருளற்ற சிந்தனை ஓட்டத்தில் லயித்திருக்கும் தன்மையைப் பிரதிபலிப்பதாகத் தோன்றின...

''நான் எப்படித் தப்பி வந்தேன் என்பதை நீங்கள் அறிந்துகொள்ள விரும்புகிறீர்கள் அல்லவா? அது எப்படி நடந்தது என்று கேளுங்கள். நாங்கள் பீரங்கிகளின் கர்ஜனையைக் கேட்டோமே, ஒரு நாள் இரவு, அதற்குச் சில தினங்களுக்கு முன்னமேயே போர் முனையைச் செப்பனிடும் வேலையில் எங்களை ஈடுபடுத்தினார்கள். நல்ல பனிக்குப் பின், அந்தப் பனிக்கட்டி உருகத் தொடங்கியிருந்தது. மழை வேறு பிடித்துக் கொண்டது. எங்களை முகாமிலிருந்து வடக்கு நோக்கி அழைத்துச் சென்றார்கள். சாலையில் போகும்பொழுது எங்களில் பலரின் கதி, பழைய கதியேயாயிற்று. களைத்து யாராவது விழுந்தால் அவர்கள் துப்பாக்கி ரவைக்கு இலக்

காக்கப்பட்டார்கள். விழுந்த இடத்தில் அவர்களை அப்படியே போட்டுவிட்டு நாங்கள் முன்னேற வேண்டியிருந்தது.

''அவர்களில் ஒருவன், ஜெர்மானிய என். ஸி. ஓ. ஒருவனால், வழியில் பனியில் பதிந்து கிடந்த உருளைக் கிழங்கு ஒன்றை எடுத்து விட்டான் என்று குற்றம் சாட்டப்பட்டு ஸ்தலத்திலேயே துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டான். அப்போது நாங்கள் ஓர் உருளைக் கிழங்கு வயலைக் கடந்துகொண்டிருந்தோம். நான் குறிப்பிடும் மனிதன் கோஞ்சர் என்னும் பெயர் உள்ளவன். யூக்ரேனிய சார்ஜெண்ட். அவன் வழியில் கிடந்த உருளைக் கிழங்கு ஒன்றை எடுத்து ஒளித்துக்கொள்ள முயன்றான். என். சி.ஓ. அதைப் பார்த்துவிட்டான். ஒரு வார்த்தையும் சொல்லாமல் அவன் தலைக்குப் பின்னால் குறி வைத்துச் சுட்டுவிட்டான். உடனே எங்கள் கோஷ்டி அங்கே நிறுத்தப்பட்டது. எங்களை வரிசையாக அணிவகுத்து நிற்குமாறு உத்தரவு போட்டார்கள். 'இதெல்லாம் ஜெர்மானியச் சொத்து' என்.சி.ஓ. தனது கையை அங்குமிங்கும் ஆட்டிச் சுட்டிக் காட்டிக் கூறினான். 'யாராவது அநுமதியின்றி எந்தப் பொருளைத் தொட்டாலும் சுட்டுப் போட்டுவிடுவோம்.'

''வழியில் நாங்கள் ஒரு கிராமத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அங்குள்ள மாதர்கள் எங்களைக் கண்டதும், எங்கள் மீது ரொட்டித் துண்டங்களையும் வேக வைத்த உருளைக் கிழங்குகளையும் விட்டெறிந்தார்கள். எங்களில் சிலர் அவற்றை எடுத்துக் கொண்டோம். ஆனால் மற்றவர்கள் அப்படிச் செய்ய முடியவில்லை. எங்களுக்குக் காவலாக வந்தவர்கள் விட்டு ஜன்னல்களைக் குறி வைத்துச் சுட்டார்கள். எங்களை இன்னும் வேக நடை போடுமாறு உத்தரவிட்டார்கள். ஆனால் குழந்தைகள் என்ன இருந்தாலும் குழந்தைகள்தானே? இளங் கன்றுகளுக்கு ஏது பயம்? அவர்கள் தெருவில் இறங்கி ஓடி எங்களுக்கு முன்னால் சிட்டெனப் பறந்து சென்றார்கள். வழியில் ரொட்டித் துண்டங்களை வைத்தார்கள். போகும்பொழுது நாங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக. எனக்கு நன்றாக வெந்த ஒரு பெரிய உருளைக் கிழங்கு கிடைத்தது. நான் என் அருகே வந்தவர்களுடன் அதைப் பங்கிட்டுச் சாப்பிட்டேன். நாங்கள் அதைத் தோலோடு தின்று விட்டோம். சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடு என்னும் பழமொழியைப் பின்பற்றியா? இல்லை, இல்லை. நான் என் வாழ்க்கையில் அதைக் காட்டிலும் ருசியான உணவைச் சுவைத்ததே இல்லை என்று இன்று வரை நம்புகிறேன்.

''போர் முனை சமைக்க எங்களை இட்டுச் சென்றார்களே, அது ஒரு காடு. எங்களுக்கு அங்கே பலத்த காவல் போடப்பட்டது. எங்கள் கையில் மண் வெட்டியைக் கொடுத்தார்கள். ஆனால் நான் அவர்களுக்காகப் போர்முனை தயார் செய்யும் முயற்சியில் ஈடுபடவில்லை. அதை எப்படி அழிக்கலாம் என்ற சிந்தனையிலேயே ஈடுபட்டிருந்தேன்.

''அன்று மாலை நான் ஒரு முடிவுக்கு வந்தேன். நாங்கள் தோண்டிக் கொண்டிருந்த குழியிலிருந்து வெளியேறி வந்தேன். இடது கையில் மண்வெட்டியைத் தூக்கிக்கொண்டு காவலாளியை நெருங்கினேன்... மற்ற ஜெர்மானியர்கள் அனைவரும் அங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு வாய்க்கால் கரையில் இருந்தார்கள். எங்கள் கோஷ்டியைக் காவல் புரிந்துகொண்டிருந்த அந்தக் காவலாளியைத் தவிர வேறு எந்தக் காவலாளியும் அப்பொழுது அருகில் இல்லையென்பதையும் பார்த்துக் கொண்டேன்.

'' 'இதோ பார், என் மண்வெட்டி உடைந்து விட்டது!' என்று அந்த வீரனிடம் சென்று முணுமுணுத்தேன். நான் உடனே அவனைத் தீர்க்காவிட்டால், அவன் என்னைத் தீர்த்துவிடுவான் என்ற எண்ணம் எப்படித் தான் என் மனத்தில் அவனைப் பார்த்த மாத்திரத்தில் ஏற்பட்டதோ, தெரியவில்லை. அந்த ஜெர்மானியக் காவலாளியும் என் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில் அதே போல் எண்ணியிருக்க வேண்டும். ஏனெனில் அவன் தன் 'டாமிகன்'னை எடுக்கத் தோள்களைத் தாழ்த்தினான். அதுதான் தருணம் என்று நான் மண்வெட்டியினாலேயே அவன் முகத்தில் அடித்தேன். அவன் தலையில் அடிக்க முடியவில்லை. காரணம் அவன் இரும்புத் தொப்பி அணிந்திருந்தான். அவனைப் பலமாகத் தாக்க அப்பொழுதும் என்னிடம் எப்படியோ சக்தி இருக்கத்தான் செய்தது. அவன் எவ்வித சப்தமும் போடாமல் மல்லாந்து விழுந்தான்.

''இப்பொழுது என்னிடம் அவனுடைய 'டாமிகன்'னும் மூன்று கிளிப்புகளும் இருந்தன. நான் ஓட முயன்றேன். அதற்கான வலு எனக்கு இல்லையென்பது அப்போதுதான் தெரிந்தது. நான் சற்று நின்று மூச்சு விட்டேன். பிறகு மெதுவாக ஓடலானேன். வாய்க்காலுக்கு அக்கரையில் அடர்ந்த காடு இருந்தது. நான் அதைக் குறி வைத்து முன்னேறினேன். நான் எத்தனை முறை விழுந்து எழுந்தேனோ, எனக்கு இப்பொழுது நினைவில்லை. ஆயினும் ஒவ்வொரு நிமிஷமும் நான் அவர்களை விட்டுத் தூர விலகிக் கொண்டிருந்தேன் என்ற உணர்வு மட்டும் இருந்து கொண்டேயிருந்தது. களைத்துச் சளைத்து மூச்சுத் திணறி, இடறிக் கிடறி எப்படியோ குன்றின் மறுபுறத்திலிருந்த ஒரு புதரை அடைந்து அதன் இடைவழியே நடக்கலானேன். வெகு தொலைவில் பல 'டாமிகன்'களும் 'பிடி, விடாதே!' என்ற கூச்சலும் என்னைத் துரத்திக்கொண்டு வந்தன. ஆனால் நம்மை இனி அவர்களால் பிடிக்க முடியாது என்ற உறுதி என்னை இயக்கிக் கொண்டிருந்தது.

'' வானம் வெளுத்து ஆடு மாடுகள் மேயப் போகும் நேரமும் வந்து விட்டது. ஜெர்மானியர்களை எதிர்ப்பட நேர்ந்தால், நான் தீர்மானித்து விட்டேன், துப்பாக்கியின் கடைசி ரவையை மட்டும் எனக்காக மீந்து வைத்துக் கொள்வதென்று! இந்த எண்ணம் எனக்குப் புத்துயிர் அளித்தது. நான் என் நடையின் வேகத்தைத் தணித்துக் கொண்

டேன். மிருந்த எச்சரிக்கையோடு முன் நடக்கலானேன்.

''அன்றிரவை நான் அந்தக் காட்டிலேயே கழித்தேன். அங்கிருந்து கிட்டத்தட்ட அரை கிலோ மீட்டரில் ஒரு கிராமம் இருந்தது. அங்கு சென்று மீண்டும் ஜெர்மானியர்களின் கையில் சிக்க நேர்ந்தால் என்ன செய்வது என்ற அச்சம் என்னை அங்கே செல்ல விடவில்லை.

''மறுநாள் ருஷ்யப் படையின் ஓர் அணியைக் கண்டேன். அவர்களுடைய பாதுகாப்புக் குழியில் சென்று இரண்டு வாரங்கள் தங்கி இழந்த சக்தியை மீண்டும் பெற முயன்றேன். ஆரம்பத்தில் அவர்களுக்கே என் மேல் சந்தேகம். நான் கட்சியின் அடையாளச் சீட்டைக் காட்டிக்கூட அவர்கள் நம்பவில்லை. நான் ஜெர்மானிய முகாமில் இருந்தபோது கோட்டின் உள்புறத் துணியில் வைத்துத் தைத்து அதைப் பத்திரப் படுத்தியிருந்தேன். பிறகு அவர்களது போர் நடவடிக்கைகளிலே நானும் பங்கு எடுத்துக் கொண்டபொழுதுதான் என்னைப் பற்றிய அவர்களது கருத்தில் மாற்றம் கண்டது. அங்கிருந்தே நான் என் கையால் கொல்லப்பட்ட ஜெர்மானியர்களைக் கணக்கெடுக்கத் தொடங்கி விட்டேன். இன்றும் கூட இந்தக் கணக்கை வெகு ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வருகிறேன். அந்தத் தொகை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. நூறை எட்டிப் பிடித்து விட்டது.

''ஜனவரியில் அந்தப் படைப் பகுதி என்னை எல்லைக் கோட்டைத் தாண்ட அநுமதித்தது. நான் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அங்கே அவர்கள் என் தோளில் சிக்கியிருந்த குண்டின் பகுதியை எடுத்தார்கள். என் மற்ற நோய்களுக்கான சிகிச்சைகள், முகாமில் ஏற்பட்ட முடக்கு வாதம் முதலானவற்றின் சிகிச்சைகள் போர் முடியும்வரை ஒத்திப் போடப்பட்டன. ஆஸ்பத்திரியிலிருந்து ஆரோக்கியம் பெறுவதற்காக நான் வீட்டுக்கு அனுப்பப்பட்டேன். நான் ஒரு வாரம்தான் வீட்டில் இருந்தேன். அதற்குமேல் என்னால் அங்கே தங்க முடியவில்லை. போர்முனைக்குத் திரும்பிவிட வேண்டும் என்ற ஆசை என் மனத்தில் துளிர்த்துத் தலைதூக்கி நின்றது. ஏனென்றால், என்ன ஆனாலும் கடைசிவரையில் போர் வீரனுக்குரிய இடம் இதுதானே?''

பாதுகாப்புக் குழியின் வாசலில் நாங்கள் ஒருவரை யொருவர் பிரிந்தோம். அந்த நேரத்தில், வெய்யிலில் ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டிருந்த காட்டுக்கிடையில் உள்ள அந்த மைதானத்தை ஆழ்ந்த சிந்தனையோடு பார்த்தவாறு லெஃப்டினென்ட் கேராசிமோவ் கூறினார்:

''....ஆம், நாம் நன்றாகப் போரிடவும், வெறுப்பை உமிழவும், அன்பு செலுத்தவும் கற்றுக்கொண்டு விட்டோம். போர் என்பது உணர்ச்சியின் ஓர் உச்ச நிலை. எல்லாவித உணர்வுகளையும் அது கூர்மையாகத் தூண்டி விடுகிறது. அன்பும் வெறுப்பும் ஒன்றோடொன்று நெருங்கி வாழ முடியாது என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம். பழங்காலத்திய ஒரு பழமொழி உண்டு. உங்களுக்கு நினைவிருக்கிறதோ, என்னமோ? 'காய் அடிக்காமல் குதிரையையும் மானையும் கூட ஒரு கடிவாளத்தில் இணைக்காதே' என்று கூறுவார்கள். ஆனால் இங்கோ நான் இரண்டையும் ஒரே நுகத்தடியில் பூட்டி, அவை சரியான படி வேலை செய்வதையும் கண்டிருக்கிறேன். நம்மீதும் நமது நாட்டின் மீதும் ஜெர்மானியர்கள் புரிந்த கொடுமைச் செயல்களை நினைத்து அவர்களை நான் கட்டோடு வெறுக்கிறேன். அதே நேரத்தில் நான் நம் நாட்டவர்களை உயிருக்குயிராக உளமார நேசிக்கிறேன். அவர்கள் ஜெர்மானியர்களுக்கு அடிமையாகித் துன்பப்பட வேண்டும் என்று நான் கனவில்கூட ஆசைப்படவில்லை. என்னையும் உங்களையும் ஏன், நம் அனைவரையும் ஈவு இரக்கமின்றிக் கல் நெஞ்சத்துடன் போர் புரியத் தூண்டுவதற்கு இந்த அடிப்படையான உணர்வுகளே காரணமாகும். இந்த இரு உணர்வுகளுமே செயலாக முகிழ்ந்து நமக்கு வெற்றி தேடித் தரும். நாட்டுப் பற்று நம் உள்ளங்களிலே நிலைபெற்றிருக்கும் வரையில் — நம் உள்ளத் துடிப்பு நிராத வரையில் நாட்டுப் பற்று நிலைபெற்றிருக்கவே செய்யும். நாம் நமது வெறுப்பைக் கத்தி முனையில் எடுத்துச் செல்லவே செய்வோம். என் உணர்வுகளை வெளிக் கொட்ட இதை ஒரு வித்தாரமான முறை என்று நீங்கள் கருதினால் என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் என் எண்ண ஓட்டம் இப்படித்தான் பாய்கிறது. அன்பும் வெறுப்பும் அருகருகே வாழ்பவை. அவற்றைச் சரியான பாதையிலே இயக்கினால் வெறுப்பும் அன்பாகும். தவறான பாதையிலே இயக்கினால் அன்பும் வெறுப்பாகும். அமுதம் விஷமாவது போல் விஷமும் அமுதமாகலாம் அல்லவா?''

லெஃப்டினென்ட் கேராசிமோவ் தம் பேச்சை முடித்தார். நாங்கள் ஒருவரையொருவர் சந்தித்த நாளாக, இன்றுதான் முதல் முறையாக அவரது முகம் பச்சிளம் பாலகனின் கள்ளங் கபடமற்ற முறுவலைப் பிரதிபலித்துப் பளிச்சிட்டது.

முப்பத்திரண்டு பிராயம் கூட முற்றுப் பெறாத அந்த லெஃப்டினென்டின் கம்பீரமான முகத்திலே அவருக்குக் கிட்டியிருந்த மயிர்க் கூச்செறிக்கும் அநுபவங்கள் முத்திரையெனப் பதிந்திருப்பதை நான் அப்பொழுதுதான் முதன் முறையாகக் கண்டேன். அத்தனை அநுபவங்களுக்குப் பின்னரும் அவர் கடுக்காய் மரத்தைப் போன்று உறுதியாக இருந்தார். காதுகளின் ஓரத்தில் பளிச்சிட்ட உரோமங்கள் வெளுத்துக் காட்சி தந்தன. பயங்கரப் போரிலே பொருது வெளுத்த அவரது கேசங்களின் வெண்மைதான் எத்தனை தூய்மையானது! அவரது தொப்பியில் ஒட்டிக் கொண்டிருந்த சிலந்தி வலையின் ஒரு வெள்ளையான நூலிழை அவரது காதோரத்து வெள்ளை நிறத்தோடு எப்படி ஒன்றிப் போயிருந்தது தெரியுமா? எத்தனையோ அரும்பாடு பட்டும் என்னால் இரண்டையும் இனம் பிரித்துக் காண முடியவில்லையென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். — ரா. வீ.



மந்தவெளி

மகாராஜபுரம் மயிலாப்பூர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தார்.

''எங்கே இப்படி... .-...?'' என்றேன்.

''வந்த காரியம் ஆகி விட்டது; திரும்பிப் போகிறேன்.''

''பஸ்ஸிலேயா?''

''பின்னே? யாராவது அழைத்து வந்தால் வரப் போகக் காராகவே இருக்கும். நானாக வந்தால் பஸ்ஸில் தானாகப் போக வேண்டியதுதானே?''

நாங்கள் பேசிக் கொண்டிருக்கையில் இளம் இசைக் கலைஞர் ஒருவர் அங்கே வந்து வணக்கம் செலுத்தி அடக்கமாக நின்றார். அவருடைய நலனையும் தொழில்துறை வளத்தையும் பற்றி வினவிய விசுவநாதய்யர், ''உன் குடியிருப்பு எங்கே?'' என்றார்.

''மந்தவெளியில்'' என்றார் இளம் கலைஞர்.

விசுவநாதய்யர் சட்டென்று அவர் பக்கம் திரும்பி, ''அட, பாவமே!'' என்றார்.

''ஏன்?.... என்ன?.....'' என்று திகைப்புடன் கேட்டார் இளைஞர்.

''ஒன்றும் இல்லை; நம் மிடந்தான் கறுகறுப்பு மந்தமாக இருக்கிறதே; குடியிருக்கிற இடமுமா மந்தவெளியாக இருக்க வேண்டும் என்பதுதான்'' என்றார் விசுவநாதய்யர்.

மரியாதையையும் மறந்து சிரித்துவிட்டார் அந்த இளைஞர்.



ஆயிரத்தில் ஒரு வார்த்தை

அரியக்குடி அவர்களிடம் நட்புடைய பிரபு தம் வீட்டுத் திருமணத்தில் அரியக்குடியின் கச்சேரி நிகழ வேண்டும் என்று விரும்பினார். கலைச் சிறப்பை மட்டும் விரும்பி அன்று; நட்பு முறையில் பணச் செலவின்றிக் காரியத்தை முடிக்கலாம் என்றுதான். பிரபுவின் இயல்பை நன்கு அறிந்தவர் ஐயங்கார். அதே தேதியில் அவர் வேறு இடத்தில் கச்சேரி ஒப்புக் கொண்டிருந்தார். விவரம் அறிந்து ஆயாசமுற்ற பிரபு ஐயங்காரைக் கொண்டே வேறு ஒருவரின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய எண்ணினார். ஐயங்கார் ஒவ்வொரு வித்துவானின் பெயராகப் பிரேரேபித்துக் கொண்டே வர, பிரபு மறுத்துக் கொண்டே வந்தார். ஐயங்காருக்கு அலுப்புத் தட்டிவிட்டது. பிரபுவும் நெடுமூச்செறிந்தார்.

''அதிகச் செலவில்லாமல் சிறந்த கச்சேரியை ஏற்பாடு செய்ய வேண்டும். பிரச்னையெல்லாம் பாடகரைப் பற்றித்தான். நல்ல பாடகராகக் கிட்டிவிட்டால் பிடிலுக்கும் மிருதங்கத்துக்கும் யாரையாவது ஏற்பாடு செய்து கொள்ளலாம்!'' என்றார் பிரபு.

ஐயங்கார் உடனே பணிச்சென்று சொன்னார்: ''நீங்கள் சொல்வது ஆயிரத்தில் ஒரு வார்த்தை. வெற்றிலை கிடைத்து விட்டால் பாக்கும் சுண்ணாம்பும் யாரிடமாவது வாங்கிக் கொள்ளலாம்!''


இதுவா சிரமம்?

பாலக்காட்டில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் 1942ல் உதவி நிதிக்கச்சேரிகள் தொடர்ந்து நடைபெற்றன. அரியக்குடியின் கச்சேரியில் பிரமுகர் ஒருவர் அவருக்குப் பாராட்டுரை வழங்கினார். ''அரியக்குடி ராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்து விட்டோம். அவருக்கு மனமார்ந்த நன்றி'' என்றார்.

இதைக் கேட்ட ஐயங்கார் புன்முறுவலுடன் அடுத்த நிமிஷமே பதில் இறுத்தார்:

''.... இது ஆசிரமம். எனக்கு இதுவா சிரமம்? இங்கே வந்து கலந்து கொள்பவருக்கா சிரமம்? எல்லோருக்கும் சாந்தியைத் தரும் 'ஆசிரமத்தில் சிரமம் ஏது?..''

ஒருபுறம் ஆசிரமத்தைச் சார்ந்த துறவிகள்; மற்றொரு புறம் கிருஹஸ்தாசிரமத்தில் உள்ள பிரமுகர்கள்; இன்னொருபுறம் பிரம்மசரிய ஆசிரமத்தில் உள்ள இளைஞர்கள். ராமகிருஷ்ண ஆசிரமத்தோடு மற்ற ஆசிரமங்களையும் சிரமங்களையும் இணைத்த ஐயங்காரின் அவர்களின் விடை அனைவரையும் வியக்கவைத்தது.





மேலிடமும் கீழிடமும்

ரயில் புறப்படச் சில நிமிடங்களே இருந்தன. இரண்டாம் வகுப்புப் பெட்டியில் அமர்ந்திருந்தார் பேராசிரியர் கல்கி. ஒருவர் அவசரமாக வந்து ஏறினார். கீழ் இருக்கையில் படுக்கையை விரித்தார்.

''இப்போது ஒருவர் வருவார். அவரால் மேல் இடத்தில் படுக்க இயலாது. தயவு செய்து நீங்கள் மேல் இடத்துக்குச் சென்றால் நலம்'' என்றார் கல்கி.

அந்த அன்பர் அதற்கு உடன்படவில்லை.

அடுத்த நிமிடத்தில் வயலின் வித்துவான் ராஜமாணிக்கம் பிள்ளை வந்து வண்டியில் ஏறினார். அவரைப் பார்த்த புதிய அன்பர் தம் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு மேல் இடத்துக்குப் போய் விட்டார். கல்கி சிரித்தார். பிள்ளை, ''என்ன?'' என்று வினவினார். ஆசிரியர் கல்கி சொன்னார் :

''கச்சேரிகளில் பக்கவாத்தியம் வாசிக்கிறபோதுதான் உங்களுக்கு மேலிடத்துச் சஞ்சாரம் அரிதாயிருக்கிறதே; இங்கே இந்த அன்பர் வலிய உங்களுக்கு மேலிடம் அளிக்கிறாரே என்று ஒரு கணம் மகிழ்ந்தேன். ஆனால் அவர் உங்களைப் பார்த்ததும் தாமாகவே மனம் உவந்து உங்களைக் கீழேயே விட்டு விட்டு மேலே போய்விட்டார். ஆக, இங்கேயும் உங்களுக்குக் கீழிடத்துச் சஞ்சாரம்தான்!''

பிள்ளை இடிஇடி என்று சிரித்தார்.

அபிமானமும் அன்னவஸ்திரமும்

பட்டணம் சுப்பிரமணிய ஐயர் ஓரிடத்தில் கச்சேரி செய்து கொண்டிருந்தார். தாம் இயற்றிய கீர்த்தனைகளில் ஒன்றான பேகட ராகத்தில் அமைந்த 'அபிமானமென்னடு' என்ற கீர்த்தனையைக் கச்சேரி நடுவே விஸ்தாரமாக ஈடுபாட்டுடன் பாடிக் கொண்டிருந்தார்.

கீர்த்தனம் முடிகிற தறுவாயில் முன்னணியில் இருந்த ரசிகர் ஒருவர், ''ஸ்வரம் பாட வேண்டும்'' என்று சுப்பிரமணிய ஐயரைக் கேட்டுக் கொண்டார்.

''ஸ்வரம் பாட வேண்டுமா? அபிமானத்துக்குப் பாடவா? அன்னவஸ்திரத்துக்குப் பாடவா?'' என்று கேட்டார் ஐயர்.

அவையில் கொல் என்ற சிரிப்பொலி எழுந்தது.

பாடலின் பல்லவி 'அபிமான'; சரணம் 'அன்னவஸ்திர' – இந்தச் சிலேடையே சிரிப்புக்குக் காரணம். சிரிப்பொலி அடங்கு முன் வித்துவான் ஸ்வரம் பாடத் தொடங்கிவிட்டார்.

பாகவத சேஷம்

திரு ஜி. என். பி.யின் மாணவர் பி. எஸ். தியாகராஜனின் அரங்கேற்றம் மயிலை இசைக் கலைஞர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. ரசிகர்கள் அனைவரும் கலைஞர்கள். முசிரி சுப்பிரமணிய ஐயர் தலைமை தாங்கினார். அவர் பேச முன் வந்த போது அவருக்கு மாலையிடப்போனேன். அவர் அந்த மாலையை வாங்கி ஆசீர்வதிப்பதுபோல் தியாகராஜனுக்கு அணிவித்தார். தொடர்ந்து பக்க வாத்தியக் கலைஞர்களுக்கும் தம் கையாலேயே மாலைகளைச் சூட்டினார். மீண்டும் அவருக்கு மாலையிட முன் வந்தேன். கழுத்தை நீட்டாமல் பேசத் தொடங்கினார் :

''.....முப்பது வருஷங்களுக்குமுன் சேஷ பாகவதர் என்று ஒருவர் இருந்தார். அடிக்கடி நல்ல கதா காலக்ஷேபங்கள் புரிவார். பாகவதர்களை உபசரித்து எஞ்சியதை, 'பாகவத சேஷம் சேஷ பாகவதனுக்கு' என்று பிரசாதமாக ஏற்பார். தமக்கென்று தனியாக மாலை மரியாதையை அவர் என்றைக்குமே ஏற்றதில்லை. எவ்வளவு தன்னடக்கம் பாருங்கள். அதுதான் முறை. இன்று அந்த நினைவு வந்தது...... உம்..... இப்போது போடுங்கள் அந்த மாலையை!'' என்று கழுத்தை நீட்டி மாலையை ஏற்றுக் கொண்டார் முசிரி. கலைஞர்கள் கரகோஷமிட்டு ஆரவாரித்தனர்.

—எல்லார்வி



க..




ம..



ப..


பகல் இரவு பாராமல்




ஷார்ப் ரேடியோ உங்கள் வாழ்க்கைக்கு இன்ப மூட்டுகிறது



மாடல் UL-164 (Table Model)
6-டியூப் 4-பாண்ட் ஏசி செட்
பாஸ் & டிரிபில் தொனி கட்டுப்பாடு
ரூ. 375
உற்பத்திவரி ரூ. 40. வரி தனி



மாடல் 5-A 46
6 டியூப் 4-பாண்ட் ஏசி செட்
மாற்றவல்ல தொனி கட்டுப்பாடு
ரூ. 350
உற்பத்திவரி ரூ. 40. வரி தனி



மாடல் BZ - 490 (Portable Set)
9-டிரான்ஸிஸ்டர் 4-பாண்ட்
நுட்பமான ஒலியமைவுகள்
ரூ. 375
உற்பத்திவரி ரூ. 40. வரி தனி

உங்களைத் திடுக்கிட வைக்கும் கிரிக்கெட் விமரிசனமாயினும் சரி, இன்னிசைக் கச்சேரியானாலும் சரி, அல்லது ஆவலூட்டும் செய்திகளானாலும் சரி - எல்லாம் உங்கள் கட்டளைக்கு அடிபணிகிறது - நீங்கள் சக்தி வாய்ந்த ஜங்கார் ரேடியோவை வைத்திருந்தால் - எல்லோரும் எளிதில் வாங்கும் விலையில், சேர்த்தியான தயாரிப்பாக - பவனிவருகிறது.

தரம்மிக்க பொருள்களைத் தயாரிப்பதில் உலகப் புகழ்பெற்ற ஜப்பானிய நாட்டு ஹயகாவா எலக்ட்ரிக் கம்பெனியாரின் தொழில் கூட்டுறவினால் ஷார்ப் ஜங்கார் ரேடியோக்கள் செய்யப்படுகின்றன என்பதைக் கவனியுங்கள்.

SHARP RADIO

அத்தியாயம் 14

உள்ளம் புரிந்தது!



காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.

அன்புமிக்க நண்பருக்கு,

போய் வருகிறேன். புதுதில்லி செல்கிறேன். அங்கு வருமாறு என் தலைவரிடமிருந்து எனக்கு முன்னமேயே அழைப்பு வந்திருந்தது. தலைநகரில் எனக்கு முக்கிய வேலைகள் காத்துக் கிடக்கின்றன. எனினும் நான் இங்கு தொடங்கிய பணியைப் பூர்த்தி செய்து விட்டுக் கிளம்ப நினைத்துத் தாமதித்தேன். ஆனால் இன்று கிளம்ப வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இங்கு என் பணி முடிந்து விட்டதா இல்லையா என்பது என்னைத் தொடர்ந்து புதுதில்லிக்கு நீங்கள் வருகிறீர்களா இல்லையா என்பதைப் பொறுத்திருக்கிறது. வருவதென்று நீங்கள் நிர்மானித்தாலும் அவசரப்பட வேண்டாம். அது ஆபத்தாக முடியும். சில மாதங்களுக்குப் பிறகு புறப்படுங்கள். உங்கள் தொழிலகம் சம்பந்தமாக டில்லியில் பல வேலைகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அங்கு என்னைத் தேட வேண்டாம். வேறு பெயரில் மாற்று உருவில் நான் இருப்பேன். டில்லிக்கு நீங்கள் வந்ததும் உங்களை நானே வந்து காண்கிறேன். உங்களைப் பற்றிய எல்லா விவரங்களும் எனக்கு அன்றாடம் வந்து சேர்ந்து விடும். இருந்தாலும் பழகிய தோஷம், பிரிவு துன்பத்தைத் தான் அளிக்கிறது.

இந்தக் கடிதத்தை உடனே எரித்துச் சாம்பலாக்கி விடுவீர்களல்லவா?

அன்புடன்,

மிருணாளினி

பகிரங்கமாக இப்படிக் கடிதம் எழுதத் துணிந்த மிருணாளினியின் தைரியம், எப்படியும் தன்னிடம் ஒரு மன மாற்றத்தை உண்டாக்கி விடலாம் என்று அவன் கொண்டிருந்த உறுதியான தன்னம்பிக்கை- இவற்றைக் கண்டு வியந்த தங்கப்பன், காலதாமதமாகத் தான் என்றாலும் மீண்டும் அவளைச் சந்திக்கத்தான் போகிறோம் என்பதால் உண்டான மகிழ்ச்சியும் ஒன்று சேரத் திக்குமுக்காடிப் போனான். சற்று நேரத்துக்குப் பின் கீழே போய்க் கடிதத்தை அடுப்பில் போட்டு விட்டுக் குளிக்கச் சென்றான்.

மாடிக்கு அவன் திரும்பி வந்தபோது அங்கே அவனுக்காக மாற்றுடைகளை—ஆபீஸுக்கான உடுப்புகளை—தயாராக எடுத்து வைத்திருந்தாள் செல்லம். கைக்கெட்டும் தூரத்தில்தான் இருந்த எண்ணெய் பாட்டில் சீப்பு முதலானவற்றை அவன் எடுத்துக் கொள்ள விடாமல் தானே முந்திக் கொண்டு எடுத்துத் தந்தாள்.

தங்கப்பனுக்குச் சிரிப்பு வந்தது. ''இது என்ன செல்லம்? உபசாரம் ரொம்பப் பலமாக இருக்கிறதே '' என்றான்.

''ஏதோ அற்ப சந்தோஷம்'' என்றாள் அவள். ''மறுபடியும் இந்தச் சந்தர்ப்பம் எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது?'' என்றவாறே சென்னையிலிருந்து தான் கொண்டு வந்திருந்த வாசனைத் திரவியத்தில் இரண்டு சொட்டை விரல்களில் விட்டுக் கொண்டு இளம் மஞ்சள் நிறத்தில் அவன் அணிந்திருந்த சட்டை மீது—பாந்த மார்பில்—தடவினாள். ''நீங்கள் தொழிலகத்திலேயிருந்து திரும்புவதற்குள் நான் பஸ் ஏறிக் கோயமுத்தூர் போயிருப்பேன். சாயந்திரம் ஆறுமணிக்கு ரயில்.''

தங்கப்பன் துணுக்குற்றான். நேற்று மாலை சென்னைக்குப் போய்விடு என்று அவளைத் துரத்தியவன் அவனேதான் என்றாலும் நிஜமாகவே செல்லத்தைப் பிரியப் போகிறோம் இப்போது என்கிற ஒரு யதார்த்த நிலை



அவனை ஏதோ உலுக்கி எடுத்தது. செல்லம் கண்ணீர் விட்டு அழவில்லை. 'போய் வருகிறேன் அத்தான்!' என்று சோக மயமான குரலில் விம்மியபடி கூறவில்லை. அப்படி அவள் செய்திருந்தால் அவன் மனம் ஒருவேளை கெட்டிப்பட்டிருக்குமோ, என்னவோ? இப்போது வருத்தத்தை அவள் உள்ளுக்குள் தேக்கி வைத்துக் கொண்டு உணர்ச்சியற்ற குரலில் சாதாரணமாகப் பேசியது அவனை நெகிழ வைத்து விட்டது. எதனாலோ மிருணாளினி அங்கு இல்லாத சூழ்நிலையில், முதல் நாள் செல்லத்தினிடம் அவன் கொண்ட கோபம் மாறி அனுதாபமே இப்போது மிருந்தது.

"இதுவரையில் நான் உங்களுக்குப் பரிசுப் பொருள் என்று எதையுமே அளித்ததில்லை, அத்தான்!" என்றாள் செல்லம். "'என்னையே உங்களுக்கு அன்புப் பரிசாக அளித்துவிட்ட பின் என்னை நினைவூட்ட உங்களுக்கு வேறு எதையேனும் எதற்காகக் கொடுக்க வேண்டும்?' என்று ரொம்பப் பெருமைப்பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் இப்போது எனக்குக் கர்வம் அடங்கிவிட்டது. என் நினைவாக இந்தச் செண்டு பாட்டிலை இங்கே வைத்து விட்டுப் போகிறேன், அத்தான்!" சின்னஞ் சிறு சீசாவை மேஜையின் மீது வைத்துவிட்டுத் திரும்பினாள் செல்லம், கீழே செல்வதற்காக.

"செல்லம் !" என்று கனிவுடன் அழைத்தான் தங்கப்பன். "செல்லம்! உனக்கு என் மீது ரொம்பக் கோபமில்லையா?" என்றவன் தானாகவே தொடர்ந்து, "என்ன அசட்டுக் கேள்வி, கோபமில்லாமல் எப்படி இருக்கும்?" என்றும் தன்னைத் தானே கேட்டுக் கொள்பவன்போல் வினவினான்.

செல்லம் நிதானித்து, அவனை, மிகச் சிறிதளவே எட்டிப் பார்த்த சோகப் புன்னகையுடன் ஏறிட்டு நோக்கினாள். "எனக்கொன்றும் கோபமில்லை, அத்தான்!" என்றாள் இலேசாகத் தலையை அசைத்தவாறு.

"நேற்று சற்று உரக்கப் பேசிவிட்டேன். அது கோபத்தின் விளைவாக இல்லை. வருத்தம் தான். அத்தான் இப்படிக் கொடுத்த வாக்கைக்கூட மறந்தவராகிவிட்டாரே என்பதால் வருத்தம். அதுகூட இருக்காதா ஒருத்திக்கு?"

'வாக்குறுதியா? என்ன வாக்குறுதி?' என்று கேட்கத் தொடங்கிய தங்கப்பன் சட்டென்று தன் நாவை அடக்கிக் கொண்டான். அப்படிக் கேட்டால், தான் கொடுத்த வாக்குறுதியை உண்மையாகவே மறந்து விட்டதாக ஒப்புக் கொண்டதாக அல்லவா ஆகிவிடும்?

அவன் மௌனம் சாதிக்க அவளே தொடர்ந்து பேசினாள்: "இதே அறையில் என்னிடம் நீங்கள் எத்தனை அன்பாகப் பேசினீர்கள்? பட்டம் பெற்று வந்த புதுசில் 'நம் கல்யாணம் நீ நினைப்பதைக் காட்டிலும் சீக்கிரம் நடக்கும் செல்லம்!' என்று நீங்கள் வாய் நிறையக் கூறி என் உள்ளம் குளிரச் செய்தீங்க. நான்தானே அப்போது, 'அவசரப்பட வேண்டாம் அத்தான்; உங்கள் லட்சியங்கள் நிறைவேறும் வரையில் நான் காத்திருக்கத் தயார்' என்று சொன்னேன். 'அவசரப்பட்டுக் கல்யாணம் செய்து கொண்ட பிறகு, இன்னும் கொஞ்ச நாட்கள் தாமதித்திருக்கலாமோ என்ற எண்ணம் ஏற்படப் பிற்பாடு இடம் வைத்துக் கொள்ளக் கூடாது' என்றேன். இப்படி உங்க மனசுக்கு ஏற்றாற்போல் நான் நடந்து கொண்டதும் நீங்க எவ்வளவு சந்தோஷப்பட்டீங்க?

"அத்தான்! தொழிலகம் தொடங்கணும் என்றீங்க; அது இன்றைக்கு நடக்குது. நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்தும் வருது. தேர்தலில் போட்டியிடணும் என்றீங்க, அதுவும் ஆயிற்று. காலம் செல்லச் செல்ல நீங்க புதுசு புதுசா லட்சியங்களை உருவாக்கிக்கிட்டே போக அவையெல்லாம் முடிகிற வரையில் நம் கல்யாணமும் காத்திருப்பது என்றால் மரணப் படுக்கையிலே தான் நாம் ஒன்றுசேர்ந்து குடும்பம் நடத்த வேண்டியிருக்கும்!"

விரக்தியுடன் அவள் இப்படிக் கூறியதற்கு என்ன மறுமொழி அளிப்பது என்று தங்கப்பனுக்கு உண்மையிலேயே விளங்கவில்லை. !அவளுடைய தர்க்கத்திலுள்ள நியாயத்தை அவன் மனம் அலசிப் பார்த்து ஏற்றுக் கொண்டது. ஆனால் அவள் குறையை நிவர்த்தி செய்ய உடனடியாக முன்வர அவனால் முடியவில்லை. அவளுக்கு எந்தவிதமாக ஆறுதல் கூறலாம் என்று புரியவுமில்லை.



ஏதோ மகத்தான குற்றம் புரிந்து விட்டு அதற்காக வெட்கப் படுபவன் போல் வேறு புறம்

திரும்பிக் கொண்டான். "செல்லம்! என் மனம் குழம்பிக் கிடக்கிறது. இன்னும் கொஞ்ச நாட்கள் எனக்கு அவகாசம் கொடு" என்று கெஞ்சுவதுபோல் கேட்டான்.

"அத்தான்! உங்கள் மனத்தைக் குழப்புகிற அந்த விஷயம்தான் என்ன? தெளிவாகச் சொல்லக்கூடாதா? நீங்கள் உஷாவிடம் கொண்டிருக்கும் அன்புதானே உங்கள் கலக்கத்துக்குக் காரணம்? அதைப் பற்றியும் அன்றே உங்களை நான் கேட்டேன். ஊட்டியில் அவளை நீங்கள் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தது எனக்குக் கலவரத்தை உண்டுபண்ணியது. அப்போது நீங்கள் என்ன சொன்னீர்கள்? நினைவிருக்கிறதா? எனக்கு அசட்டுப் பட்டம் கட்டினீர்கள்! 'அசடே! எனக்கு அந்த மாதிரியான 'அல்ட்ரா மாடர்ன்' சமாசாரமெல்லாம் கட்டி வராது; தொலைவிலிருந்து பார்த்து ரசிக்கத்தான் லாயக்கு. அப்படியே அவளை நான் கல்யாணம் செய்து கொள்ள நினைத்தாலும் உஷாவே என்னைப் பரிகாசம் செய்து அனுப்பி விடுவாள். ஏதோ சிறு பிள்ளையாக இருந்தபோது பழகிய தோஷம் எங்கேயாவது அவளைப் பார்த்தால் இரண்டு வார்த்தைகள் பேசச் சொல்கிறது' என்றீர்கள். அந்த நிலைதானே அத்தான், இன்றும் நீடிக்கிறது? மாறுதல் இல்லையே?"

தங்கப்பன் இதைக் கேட்டுவிட்டுச் சற்று நேரம் அடி உதட்டைக் கடித்தபடி சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு சட்டென்று செல்லம் இருந்த திசையில் திரும்பிப் பார்த்து. "இத்தனை தூரம் பேச்சு வளர்ந்த பிறகு முழுமையாக நாம் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விடுவதே நல்லது, செல்லம். இதோ பார், அவள் முன்னெப்போதையும்விட அதிகமாகவே ராங்கிக்காரியாகவும் கோபக்காரியாகவும் விட்டெறிந்து பேசுபவளாயும் இன்றும் விளங்குகிறாள். ஆனால் உஷாவை நீ நோக்கும் விதத்துக்கும் நான் அவளை அணுகும் முறைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது."

தங்கப்பன் அங்கிருந்த நாற்காலியின் ஒரு கரத்தின் மேல் தன் உடல் சுமையை இறக்கிச் செல்லத்தையும் உட்கார்ந்து கொள்ளுமாறு சொன்னான். தரையில் அமர்ந்த அவள், அவன் காலணிகள் இன்னும் முடிக்கப்படாமல் இருப்பது கண்டு அவற்றை இழுத்து முடித்தாள். தன் சேலையின் முந்தானையால் அந்தக் காலணிகளைத் தூசு போகத் துடைக்கும் பாக்கியம் பெற்றதற்காகத் தன்னைத் தானே வாழ்த்திக் கொண்டு பெருமிதம் கொள்பவள் போல் சில கணங்களுக்கு மெய்ம்மறந்து கண்களை மூடியிருந்தாள். பிறகு அத்தானின் கால்களை இடக்கரத்தால் சுற்றி வளைத்து அணைத்தபடி வலக்கரத்தால் தன் மடி தாங்கியிருந்த ஒரு பாதத்தின் 'ஷூ'வை மெல்லத் துடைத்தாள்.

அவள் இவ்விதம் தனக்குச் சிசுருஷை செய்கிறாள் என்கிற உணர்வே இல்லாமல் தங்கப்பன் பேசிக் கொண்டிருந்தான்.

"செல்லம்! நான் சின்னப் பையனாக இருந்த போது உஷாவின் அத்தை உஷாவை என்னுடன் விளையாடக் கூடாதென்று தடுத்தாள். 'கள்ளுக் கடைக்காரன் மகன், ஊரைக் கெடுத்த பாவியின் பிள்ளை' என்று என்னை ஏசினார்கள். நான் மனமுடைந்து போனேன். அப்போது எனக்கு ஆறுதல் கூறினது மாருதி. அவர் குரல் இன்றும் என் காதுகளில் ஒலிக்கிறது: 'யார் கண்டது? நாளைக்குத் தீனதயாளுவே என் மகளைக் கல்யாணம் கட்டிக்கன்னு உன்னை வந்து கேட்கிற அளவுக்கு நீ பெரிய மனுஷனாயிடலாம்' என்று இப்படி அவர் ஏதோ பேச்சுவாக்கில் சொல்லியிருக்கலாம். ஆனால் சிறுவனான என் மனத்தில் அந்தச் சொற்கள் பசுமரத்தாணி போல் பதிஞ்சு போயிடுச்சு. அன்றையிலேயிருந்து எனக்கு ஒரே சிந்தனை—நான் உயரணும், உஷாவும் தீனதயாளுவும் என்னை மதித்து மரியாதை செலுத்தும் அளவுக்கு உயரணும். என்னுடன் கல்யாண சம்பந்தம் செய்து கொள்வதைத் தங்களுக்குப் பெருமை என்று அவர்கள் நினைத்து என்னைத் தேடி வரணும்! இந்த நினைப்பை என்னால் அகற்றவே முடியவில்லை. இது ஒரு வேளை உனக்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோணலாம்; உண்மையைக் கேட்டாய். விண்டு சொல்லிவிட்டேன்....

"ஆனால் செல்லம்! நான் ஒரு தப்புக் கணக்குப் போட்டு விட்டேன். முழுமூச்சுடன் உழைத்து நான் வாழ்க்கையில் உயர்ந்த அதே சமயம் அவர்களும் மேலே மேலே உயர்ந்துகிட்டே போய் இன்று மத்திய சர்க்காரிலே மந்திரி பதவி வகிக்கிறார் தீனதயாளு. பதவியிலே மட்டும்தான் உயர்வு. பண்பிலே கீழேதான் இறங்கிக்கிட்டு வருகிறாங்க. இருந்தாலும் இதையெல்லாம் எண்ணி என் மனம் திருப்தியடையமாட்டேனென்கிறது. என்றைக்காவது உஷாவைவிட ஒரு படி மேலே நிற்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் துடிக்கிறது!"

கண்ணீர்முத்துக்கள் திரண்டெழச் செல்லம் அத்தானைப் பார்த்தாள். "நிச்சயம் நீங்க இதிலே வெற்றி பெறுவீங்க அத்தான்! எனக்கு அதில் சந்தேகமேயில்லை. ஆனால்..."

"ஆனால் என்ன செல்லம்?"

"உஷாவைக் குறித்து உங்களுடைய வைராக்கியம் எனக்குப் புரிகிறது. ஆனால், 'அவளை நீங்கள் விரும்புகிறீர்களா' என்ற என் கேள்விக்குப் பதில் இல்லையே அத்தான். அவர்கள் கல்யாண சம்பந்தம் செய்து கொள்ள முன்வருகிறதாக இருந்தாலும் நீங்கள் உஷாவிடம் ஆசை வைச்சிருக்கிங்களா என்பது வேறு விஷயமல்லவா?"

"செல்லம்! இதற்கு என்னால் உறுதியாகப் பதில் தர முடியாது. ஏனென்றால் எனக்கே இதுதான் சரியாகப் புரியவில்லை. சிறுவனாயிருந்தபோது ஏற்பட்ட அந்த அநுபவங்களுக்குப் பிறகு எனக்கு வயதாக ஆக, உஷாவை நான் வெறுக்க ஆரம்பித்தேன். அவளுடைய ஆடம்பரம், ஆணவம், அதிகாரம், தளுக்கு மினுக்கு, நடை உடை பாவனை எதுவுமே எனக்குப் பிடிக்கவில்லை. பெண்மைக்குரிய எழிலுருவம் ஒன்றைத் தவிர இதர லட்சணங்கள் எதுவுமே அவளிடம் இல்லாத போது அவளைப் பெண்

என்றே என்னால் மதிக்க முடியவில்லை. ஒரு நாள் மாருதி ஸார்தான் நான் இப்படி வெறுப்புப் பாராட்டுவது தவறு என்று எனக்கு எடுத்துச் சொன்னார். மனிதப் பிறவிகளை அவர்கள் அவர்கள் வளர்க்கப்படும் விதம், சந்தர்ப்பச் சூழ்நிலைகள் போன்ற பல விஷயங்கள் பண்படுத்துகின்றன; அல்லது கெடுத்துக் குட்டிச்சுவராக்குகின்றன என்பதை விளக்கினார். உஷாவின் வாழ்வில், அவளுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையில் உள்ள பல குறைகளையும் கெடுதல்களையும் விவரித்தார். அனுதாபத்துக்குரியவள் உஷா என்பதை எனக்கு உணர்த்தினார். அப்போது முதல் உஷாவை நான் புதிய கோணத்திலிருந்து பார்க்க ஆரம்பித்தேன். என் மனத்திலிருந்து வெறுப்பு இருந்த இடம் தெரியாமல் எங்கோ ஓடி மறைந்து போய்விட்டது. அவளுக்காகப் பரிதாபப்பட்டேன்.''

''அனுதாபம் வேறு; காதல் வேறு அத்தான்!'' என்றாள் செல்லம் புன்னகையுடன். புதிய நம்பிக்கை தளிர்விட ஆரம்பித்திருந்தது அவளிடம்.

''அது எனக்குத் தெரிந்துதான் இருக்கிறது செல்லம். பல சந்தர்ப்பங்களில் உஷாவிடம் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவள் கோபத்துடன் சீறும்போது, ஆங்காரத்துடன் பொருமும் போது, அவளுக்கு நல்ல வார்த்தை சொல்லித் திருத்த முயலுவேன் நான். அப்போது என் இதயத்தில் அவளுக்காக அன்பு சுரந்திருக்கிறது. என் நெஞ்சம் நெகிழ்ந்திருக்கிறது. பாசப் பரிவுடன் அவளை நோக்குவேன் நான். ஆனால் வேறுசில தருணங்களில் அவள் காரியார்த்தமாகத் தன் கவர்ச்சிமிக்க அழகைப் பயன்படுத்தி என்னை நிலைகுலைய வைக்கவும் முயன்றிருக்கிறாள். அப்போதெல்லாம், 'சீ! இவளும் ஒரு பெண்ணா' என்று என் மனம் வெகுண்டு எழும்; நத்தை தன் கூண்டுக்குள் சுருங்குவது போல் அவளிடம் நான் கொண்டிருக்கும் அன்பும் எனக்குள்ளேயே சுருண்டு பதுங்கிக் கொள்ளும்.

''ஆனால் செல்லம்! சற்று முன்னால் நான் குறிப்பிட்டேனே, அது போல என்றைக்காவது ஒரு நாள் உஷாவைவிட நான்மதிப்பில் உயர்ந்து நிற்க, அப்போது அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ளுமாறு நீதயாளு மனப்பூர்வமாக என்னைக் கேட்டுக் கொண்டால் அந்தச் சமயத்தில் நான் என்ன செய்வேன்? என்ன பதிலளிப்பேன்? இதைத்தான் நான் யோசித்து யோசித்துக் குழம்புகிறேன். என்னால் விடை காண முடியவில்லை...... உனக்கு என் நிலை புரிகிறதா செல்லம்?''

''புரிந்து கொள்ள முயலுகிறேன் அத்தான்'' என்றாள் அவள், கண்ணீரைத் தன் எழிலார்ந்த நீண்ட விரல்களால் துடைத்து விட்டுக் கொண்டே. ''புரிந்து கொள்வதுடன் உங்களுடைய இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண என்னாலான உதவியையும் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால் நான் இந்த விஷயத்தில் உங்களுக்கு என்ன உதவியைச் செய்துவிட முடியும்?''

''முடியும் செல்லம்! நீ எனக்கு உதவ முடியும்! எப்படி என்று சொல்லவா?''

''சொல்லுங்கள் அத்தான்!'' என்றாள் அவள் ஆர்வத்துடன்.

''உன் காதலில் நீ உறுதியாக இருப்பதன் மூலம் நீ எனக்கு உதவலாம்! உன் காதல் எனக்கு என் அலுவல்களில் எந்த அளவுக்குப் பக்கபலமாக இருக்கிறது என்பது உனக்குத் தெரியாது! அதை விளக்கிச் சொல்லவும் எனக்குத் தெரியாது! ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தூய்மையான முழுமையான காதலுக்குத் தெய்வீக சக்திகள் உண்டு. உன் காதல் அத்தகையதாக இருந்தால் உஷாவைக் குறித்து அல்லல்படுகிற என் மனசுக்கு அமைதி தேடித் தர அதனால் முடியும். உண்மை ஒளி என் ஆன்மாவில் படரவும், சத்தியத்தை நான் அங்கே உணரவும் வழி செய்யக்கூடிய ஆற்றல் அதற்கு இருக்கவேண்டும்!''

இந்த வார்த்தைகளைக் கேட்ட செல்லம் அப்படியே தங்கப்பனின் மடியில் தன் சிரத்தைக் கவிழ்த்து விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். கூடவே, ''நான் அழுவதாக நினைக்காதீர்கள் அத்தான்!'' என்று கூறிச் சிரித்தாள். ''சென்னைக்கு நான் சந்தோஷமாகத்தான் ரயில் ஏறப் போகிறேன்'' என்று சொல்லியபடியே அவன் கால்களைக் கண்ணீரால் நனைத்தாள். (தொடரும்)








1. சதஸில் கலந்து கொண்டபிறகு சென்னையிலிருந்து விடை பெறுகிறார் ஆசாரிய சுவாமிகள். 2., 3. கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதனுக்குக் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் மணிவிழா கொண்டாடி மகிழ்ந்தது; சால்வை போர்த்திப் பாராட்டியது. 4. சங்கத்தின் ஆதரவில் பாரதி விழா, கல்கி







திருவை நாள் ஆகியவையும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. 5. இந்த வருஷம் மியூஸிக் அகாடமியின் தலைவர் ஸ்ரீ சீனிவாசய்யரை டாக்டர் வே. ராகவன் சென்னை மந்திரி ஜோதி அம்மாளுக்கு அறிமுகப்படுத்துகிறார். 6. பம்பாய் பாரதீய சங்கீதக் கலைக் கழகத்தின் ஆதரவில் நடக்கும் பன்னிரண்டாவது ஆண்டு சங்கீதக் கலை விழாவை டிசம்பர் 1ந் தேதி மகாராஷ்டிர கவர்னர் டாக்டர் செரியன் தொடங்கி வைத்தார். தேசியப் பாதுகாப்பு நிதிக்கு ஐயாயிரம் ரூபாய் இந்தச் சபையினர் வழங்கினர்.

இந்தப் பக்கத்தில்: ராஜாஜியின் பிறந்தநாளையொட்டி சென்னை கோகலே மண்டபத்தில் சென்ற 18ந் தேதி ஒரு மாபெரும் கூட்டம் விழாக் கோலத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொள்ள ஆசாரிய கிருபளானி தில்லியிலிருந்து வந்திருந்தார். க. சந்தானம் தலைமை வகித்தார். ராஜாஜியின் கட்டுரைத் தொகுப்பு ஸத்யமேவ ஜயதேயின் மூன்றாவது புத்தகம் அன்று வெளியிடப்பட்டது. ஆசாரிய ரங்கா, ம. பொ. சி., நெடுஞ்செழியன், ஸமத், வி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய பல பிரமுகர்கள் ராஜாஜியின் மகத்தான சேவைகளைப் பாராட்டிப் பேசினார்கள்.



ராஜாஜி பிறந்த தின விழா







அத்தியாயம் ஐம்பத்திமூன்று

நச்சி நஞ்சானான்!

தம்பையா வேதாவைப் பற்றிக் கேட்டதும் கன்னியம்மாளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதைச் சமாளித்தவளாய், ''எல்லாரும் சௌக்யமாத்தான் இருக்காங்க அண்ணாத்தே!.... கொஞ்சம் இரு; இந்த மாடுகளைக் கட்டிப் போட்டுட்டு அப்புறமா வர்றேன்'' என்றவாறு அங்கிருந்து நழுவிச் செல்ல முற்பட்டாள்.

''அட, கய்தே! நான் கூப்பிடறேன், நீ பாட்டுக்குப் போய்க்கிட்டே இருக்கிறியே? இப்படி வாம்மே, ஒரு விஷயம் பேசணும்!'' என்று நிமிர்ந்து உட்கார்ந்தான் தம்பையா.

'ஐயோ, இப்ப நான் இன்னா பண்ணுவேன்? இந்த மொரட்டு மனுசனுக்கு எப்படி ஜவாப் சொல்லுவேன்' என்று தவிப்புடன் முணுமுணுத்த கன்னியம்மாள் தயங்கித் தயங்கி வந்து, ''எனக்கு நிறைய வேலை இருக்குது சீக்கிரமா சொல்லு, அண்ணாத்தே!'' என்றாள்.

தம்பையா தன் ஜேபியிலிருந்து சிறு காகிதப் பொட்டலம் ஒன்றை எடுத்துப்

ஜீவகீதம்

ஜெகசிற்பியன்




பிரித்துத் திண்ணை மேல் வைத்தான். அதில் அழகான ஒரு ஜோடி தங்கக் கம்மல் பளபளத்துக் கொண்டிருந்தன. ''இந்தாம்மே, இதை எடுத்துக்கிட்டுப் போய் மார்வாடிக் கடையிலே வைச்சு இதுக்கு எவ்வளவு பணம் கிடைக்குதோ வாங்கியாந்து கொடு! இப்ப எனக்குச் செலவுக்கு வேணும்!''

''ஏது அண்ணாத்தே, இந்தக் கம்மலு?'' என்று வியப்புடன் கண்களை மலர்த்திக் கேட்டாள் கன்னியம்மாள்.

''ஏதா? என் பெரிய அண்ணியாருது!'' என்று கூறிக் கடகட வென்று நகைத்த தம்பையா, ''குளிக்கப் போவும் போது கழட்டி வைச்சுட்டுப் போனாங்க; ஸ்லிப்பிக்கிட்டு வந்துட்டேன்!'' என்று சொல்லி மீண்டும் சிரிப்பை அடக்கமாட்டாமல் சிரித்தான்.

''அட, பாவி மனுசா!'' என்று கையைத் தட்டி மோவாயில் வைத்துக் கொண்ட கன்னியம்மாள், ''அப்ப நீ உன் அண்ணாத்தைமார்கள்கிட்டே சொல்லிக்கினு வரலையா?'' என்று வினவினாள்.

''எதுக்குச் சொல்லிக்கிட்டு வரணும்?... சாப்பாடு, சவரட்சணை, வீடு, கார் ரேடியோ, தோட்டம் எல்லாம் நல்லாத்தான் இருந்துச்சு. ஆனாலும் என்னால் அங்கே இருக்க முடியலே. அந்த வட்டாரத்திலே இருக்கிறவங்களெல்லாம் என்னமோ பூனைகள்மாதிரி நடந்துக்கிறாங்க. யார்கிட்டேயும் கலகலப்பாப் பேசறதில்லே; சிரிக்கிறது இல்லே. அவனவன் காரியத்திலேயே கண்ணாயிருக்கிறான். பேப்பர் படிக்கிறது, காப்பி குடிக்கிறது, ஆபீசுக்குப் போறது, வரும்போது கறிகாய் வாங்கியாறது, ரேடியோ கேட்கிறது, அப்புறம் கதவைச் சாத்திக்கிட்டுத் தூங்கறது — இதுகள்தான் அவன்களுடைய இனப்படி காரியங்கள். அதோ பாரு, அந்தக் குழாய்கிட்டே இன்னா மாதிரி ரோஷமான சண்டை நடக்குது! இதோ, இங்கே பாரு, தெருப் புழுதியிலே பசங்க கோலி ஆடிக்கிட்டு இன்னா குஷியா பீடி குடிக்கிறானுங்க! இதையெல்லாம் அங்கே பார்க்க முடியுமா? அது எனக்குப் படா பேஜாராப் போச்சு. அதனால் யார்கிட்டேயும் சொல்லிக்காம ஓடியாந்துட்டேன். வரும் போது சும்மா வரலாமா? அப்படி வந்துட்டா நம்பளைப்



பத்தி இன்னு மதிப்பு?'' என்று கூறித் தலையை ஒரு சுழற்றுச் சுழற்றிச் சிரித்த தம்பையா, ''சரி; சீக்கிரமா இதை எடுத்துக்கிட்டுப் போய் அடமானம் வைச்சுட்டு வா !'' என்று கூறினான்.

ஏதோ யோசித்த கன்னியம்மாள் தலையைச் சொறிந்து கொண்டு, ''எனக்கு இதெல்லாம் பழக்கமில்லையே, அண்ணாத்தே! பித்தளைச் சாமான்களை அடமானம் வைச்சுத்தான் பயக்கம்!.... அதுவுமில்லாம இண்ணைக்கு வெள்ளிக்கிழமையாச்சே, மார்வாடிக் கடையெல்லாம் சாத்திக் கிடக்கும்!'' என்று தயங்கி இழுத்தாள்.

தம்பையா இதைக் கேட்டுப் பாதி உத்சாகம் குறைந்தவனாய், ''அப்படியா? சரி; இதுக்கு நான் வேற வழி பண்ணிக்கிறேன்'' என்றவன் சட்டென்று நிமிர்ந்து, ''நீ வீட்டுக்குப் போனதும் வேதாவை இங்கே அனுப்பி வைம்மே! குழந்தைப் பொண்ணைப் பார்த்து ரொம்ப நாளாயிடுச்சு!'' என்றான்.

இது காதில் விழாதவள்போல் மாடுகளை அதட்டி ஓட்டிக் கொண்டு அங்கிருந்து விரைந்து நடந்த கன்னியம்மாள் தன் வீட்டில் நுழைந்ததுமே, அங்கு முழங்கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கட்டைச் சுவரோரம் உட்கார்ந்திருந்த நச்சியைப் பார்த்து, ''ஏண்டா, பையா! அந்த ஆளைப் போய் விசாரிச்சயா? இன்னு சொல்றாரு ?'' என்று ஆவலுடன் கேட்டாள். மூன்று நாட்களுக்குப் பின் நேற்றிரவு வீட்டுக்கு வந்த நச்சி, வேதா காணாமற்போன விவரம் அறிந்து துடிதுடித்தவனாய்த் தன் தாயைப் பலவாறு ஏசிப் பேசிவிட்டு விடியற்காலையில் எழுந்து மருதமுத்துவைப் பார்க்கப் போனவன் இதோ திரும்பி வந்திருக்கிறான்.

சற்று நேரம் எதுவுமே பேசாமல் தலை குனிந்து கொண்டிருந்த நச்சி விருட்டென்று எழுந்து அவளைச் சுட்டெரித்து விடுவது போல் வெறித்துப் பார்த்துவிட்டு, ''எல்லாம் கேட்டேன். அவன் இண்ணைக்குக் காலம்பறதான் எங்கோ வெளியூரில் நடந்த ஒரு மாநாட்டில் பேசப்போயிட்டு வந்தானாம். அவனுக்கு இதைப் பத்தி ஒண்ணுமே தெரியாதுன்னு சொல்றான்'' என்றான் கடுகடுத்த குரலில்.

''அப்பமன்னு இன்னடா அருத்தம் ? அவர்தானே டீச்சர் வேலை வாங்கித் தரேன்னு காரை அனுப்பி அந்தப் பொண்ணைக் கூட்டியாறச் சொன்னாரு?'' என்று இடுப்பின் மேல் கையை வைத்துக் கொண்டு அழுத்தந் திருத்தமாகக் கேட்டாள் கன்னியம்மாள்.

''அதை அவன் இல்லேன்னு சொல்லலே. ஆனால் அன்னைக்கே வீட்டுக்குப் போன்னு திருப்பி அனுப்பிச்சுட்டானாம்.''

''வேலை இன்னா ஆச்சு?''

''தேர்வு நடத்தற ஆபீஸர் வரலேயாம். அதனாலே மக்காநாள் வான்னு சொன்னாங்களாம்....''

''போவும் போது கார்லே கூட்டிக்கினு போனவரு அனுப்பற போது ஏன் நடக்க வைச்சு அனுப்பினாராம்?''

''அதையும் கேட்டேன். அதுக்கு அவன், 'ஏரோப்பிளேன்லே ஏத்தி அனுப்பி வைக்கணுமா'ன்னு கிண்டல் பண்றான்.''

''இன்னா இது, அக்குறும்பா இருக்குதே!''

''அது மட்டுமில்லேம்மா! 'உன் தங்கச்சி எவனை இழுத்துக்கிட்டு எங்கே ஓடினாளோ! இங்கே என்னை வந்து கேட்டால் என்னடா அர்த்தம்? போய்ப் போலீஸிலே ரிப்போர்ட் பண்ணு' அப்படீன்னு சொல்றான். அதுக்கு மேலே நான் அவன்கிட்ட இன்னா பேச முடியும் ?''

குழம்பித் தவித்த கன்னியம்மாள், ''எதுக்கும் அந்த மருதமுத்து சொல்றாப்பலே டாணாவுக்குப் போய்த்தான் ரிப்போர்ட் பண்ணிப் பாரேன்டா, பையா!'' என்றாள் இரகசியக் குரலில்.

பயங்கரமாக அவளை விழித்துப் பார்த்த நச்சி, ''என்னைக் கேட்காம அந்தப் பொண்ணை எவனோ வந்து கூப்பிட்டான்னு அனுப்பினதுமில்லாம எனக்கே இப்ப யோசனை சொல்லிக் கொடுக்கறயா? முதல்லே உன்னை வெட்டிக் கூறு போட்டுவிட்டு அப்புறம்தான் போலீசுக்குப் போவப்போறேன்!'' என்றவன் பற்களைக் கடித்துக் கொண்டு அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்த்தான்.

குலை நடுங்கிப் போன கன்னியம்மாள், ''ஐயோ, இந்தப் பாவி மவன் என் மேலே பழி போடுறானே!.... அங்கே அந்தப் பயில்வான் வேறே, 'பொண்ணைப் பார்க்கணும்னு, அனுப்பி வை'ன்னு சொல்றான்! நான் இன்னா பண்ணுவேன்?'', என்று ஒப்பாரிக் குரலில் அலறிக் கூவிக் கொண்டே புறக்கடைப் பக்கம் ஓடியவள், மாடுகளுக்கு வைக்கோல் பிடுங்கிப் போட்டுவிட்டுச் சிறிது நேரம் கழித்துத் திரும்பி வந்து பார்த்த போது, நச்சி அங்கிருந்து போய்விட்டிருந்ததை அறிந்து கொண்டதும் கொஞ்சம் நிம்மதியாக மூச்சு விட்டாள்.

அன்றிரவு ஏழு மணி இருக்கும். ஆச்சரியப்படும் விதமாக பெங்களூர் எக்ஸ்பிரஸ் ரயில் சரியான நேரத்துக்கு சென்ட்ரலை வந்து அடைந்தது. வண்டியை விட்டு இறங்கிய ஜனங்கள் வெகு சுறுசுறுப்பாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

தன் போர்ட்டர் சகாக்களுடன் ஸ்டேஷன் வராந்தாவில் நின்று பேசிக் கொண்டிருந்த நச்சி, சட்டென்று பின்னால் நகர்ந்து, ''இருங்கடா, வர்றேன்'' என்று சொல்லி விட்டுச் சடாரென ஓடி ஒரு தூணின் மறைவில் ஒளிந்தான். பிறகு ஜனக் கூட்டத்திடையே புகுந்து இருட்டில் மறைந்து மறைந்து யாரையோ பின்தொடர்வதுபோல நடந்தான். அந்த 'யாரோ' வேறு யாருமல்ல; சபேசனும் வேதாவும்தான் !

பெங்களூர் வண்டியிலிருந்து அப்போதுதான் இறங்கி வெளியே வந்த அவ்விருவரும் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தனர்.

''உன்னை நுங்கம்பாக்கத்துக்குப் பஸ் ஏற்றி விட்டு நான் போகிறேன்.''

''நீங்கள்?.....''

''அது பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.''

அடுத்தகணம் —

''டாய்! நில்லுடா அங்கே!''

வெல வெலத்துப் போன சபேசன் சட்டென்று நின்று திரும்பினான்.

''ஏன்டா, சோமாறி! எல்லாம் நீ நடத்தின நாடகம்தானா இது?'' என்று முரட்டுக் காளைபோல் உறுமியவாறு பாய்ந்து வந்த நச்சி, இடது கையால் சபேசனின் சட்டையைச் சேர்த்துப் பிடித்து இழுத்துக் கொண்டு வலது கையை வேகமாகச் சுழற்றி ஓங்கினான்.

''அண்ணா!''

நச்சியே அதிர்ச்சியடைந்து, சபேசனை அடிக்க ஓங்கிய கையைத் தளர்த்தி விட்டுப் பின்னால் நகர்ந்தான் என்றால், வேதாவின் அந்த ஆவேச அதட்டல் குரல் எத்தனை உச்ச கட்டத்துக்குப் போயிருக்கும்?

''நான் சொல்வதைக் கேள், அண்ணா! உனக்கு யாரையாவது அடித்துக் கொல்ல வேண்டுமென்று ஆத்திரம் இருந்தால் அதற்கு இதோ, நான் இருக்கிறேன்! அவர் மேல் கை வைக்காதே!''— வேதாதான் இவ்வாறு மீண்டும் முழங்கினாள்.

சபேசனை அப்பால் தள்ளிவிட்டு அதே வேகத்தில் வேதா பக்கம் திரும்பிய நச்சி, ''இப்ப நீ இன்னாம்மே சொல்றே?'' என்று கடுகடுப்புடன் கேட்டவாறு தன் சட்டைக் கையைச் சுருட்டி மடித்தான்.

''அப்படிக் கேள், நடந்ததைச் சொல்றேன். அப்புறம் நீ யாரை எது வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளலாம்.'' — வேதாவின் சீற்றமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து, துயரம் தொண்டையை அடைக்கவே அவள் விம்மிக் குமுறி அழ ஆரம்பித்து விட்டாள்.

சீறிப் பாய்ந்து வரும் நாகம் மகுடி நாதம் கேட்டால் எப்படித் திசை கெட்டுத் தடுமாறித் தலைதூக்குமோ, அது போல் வேதாவின் கண்களில் கண்ணீரைக் கண்ட மாத்திரத்தில் ஒரேயடியாகத் தொய்ந்து துவண்டு போன நச்சி, ''அடங்க, இல்லி! இன்னாடாது சினிமாவாயிருக்குது!'' என்று தன் கைகளை அலட்சியமாகத் தட்டி விட்டுக் கொண்டு அப்பால் சென்றான்.

வாயில் முந்தானையை வைத்து அடைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுத வேதா சட்டென்று நிமிர்ந்து, ''நீங்கள் போங்கள்! இங்கிருந்து போய் விடுங்கள்!'' என்று சபேசனைப் பார்த்துக் கூவினாள்.

திகைப்பும் திகிலுமாகப் பிரமை பிடித்தவன்போல் நின்றுகொண்டிருந்த சபேசன்



''உங்கம்மாவுக்கு ஆஸ்துமா அதிகமாய் விட்டது போலிருக்கு பாவம்! என்னோடு சண்டை போடுவதற்குள் மேல்மூச்சு: கீழ் மூச்சு இரைக்க ரொம்ப அவதிப்படறாங்க!''

மௌனமாகத் திரும்பித் தலைகுனிந்தபடியே நடந்தான். அவன் மனம் சொல்லொணாத வேதனையால் பஞ்சு பஞ்சாக நைந்து பிய்ந்து சிந்திக்கும் ஆற்றலையே சிதறடித்துவிட்டது.

மனம் உடலோடு உறவு கொள்ளாமல் அறுந்து நின்றாலும் உடலுக்கென்று தனியாக ஏதோ ஓர் உள்ளுணர்வு இருக்கும் போலும். மனத்தின் உறவு இருந்தால் அது அந்தச் சமயம் உடலை என்ன செய்யத் தூண்டுமோ அதை அவ்வுறவற்ற நிலையில் அது எப்படியோ உணர்ந்து சரியாகவே செய்து விடுகிறது. அப்படித்தான் இப்போது சபேசனின் மன உறவுத் தூண்டுதல் இல்லாமலே அவனை நடத்திக் கொண்டு போய் அந்த ஐலண்ட் மைதானத்து மன்றோ சிலைக்கு எதிரே யிருந்த டீக்கடையண்டை நிறுத்தி விட்டன அவனுடைய கால்கள்.

''எந்தா, சபேசன்! எப்படி இருக்கிறே?''

அப்போதுதான் கனவிலிருந்து உலுப்பி எழுப்பப்பட்டவன் போல் திருதிருவெனச் சுற்றுமுற்றும் பார்த்து விழித்த சபேசன், தான் வந்திருக்கும் பழைய இடத்தை உணர்ந்து கொண்டு அவசரமாகத் தலை நிமிர்ந்தான். காலியான சிகரெட் பாக்கெட்டைக் கிழித்து அதன் வெள்ளையான உட்பகுதியில் அன்றைய வரவு செலவுக் கணக்கை எழுதிக் கொண்டிருந்த மாதவன் நாயர் அவனைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தான். ஏதோ தன் சொந்த ஊருக்குப் போய் வந்தவன்போல் வெகு உற்சாகமாகவும் வாளிப்பாகவும் இருந்தான். அவனுடைய தலைதான் மொட்டை யடிக்கப்பட்டிருந்தது. மூன்று மாதம் சிறைக்குப் போய்விட்டு வந்ததன் ஒரே சின்னம் அது!

வேதாவை பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு அன்றிரவை எங்கே படுத்துக் கழிக்கலாம் என்று ஏற்கனவே திட்டமிட்டிருந்தானோ, அதே இடத்தில் அவனையறியாமலே வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டு உள்ளூற வியந்தவனும் நாயரைப் பார்த்து, ''வணக்கம், அண்ணே!'' என்றான் இளநகையுடன் சபேசன்.

அந்த டீக்கடை திறந்திருப்பது பற்றி அவனுக்கு ஒரு வகையில் சந்தோஷம்தான். மன்றோ சிலைக்கு அடியிலே பயமில்லாமல் படுத்துத் தூங்கி எழுந்திருக்கலாம். ஆனால் நாயர் பழையபடி தன் 'சரக்கு வியாபார'த்தை, ஆரம்பித்து விட்டிருந்தானானால் போலீஸ் கேஸ் வந்து அவனும் சங்கடத்தில் சிக்கிக்கொள்ள நேர்ந்தால் என்ன செய்வது? 'இன்று ஒருநாள்தானே? பார்த்துக்கொள்ளலாம்' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான் அவன்.

''எங்கேப்பா உன் தோஸ்து நச்சி? அவனை இன்னும் நான் பார்க்கவேயில்லையே!'' என்று கேட்டான் நாயர்.

இதற்குப் பதில் சொல்லத் தோன்றாமல் சிரித்த சபேசன், ''வரவில்லையா?....வருவான்!'' என்று முனகினான்.

''இந்தா, இதைக் கொஞ்சம் கூட்டிப் பார்த்துச் சொல்லு! டீ, நீ ஏதாவது சாப்பிடறயா?''

''வேண்டாம், நாயர்'' என்ற சபேசன் கணக்குச் சீட்டை வாங்கிக் கொண்டு பெஞ்சில் வந்து உட்கார்ந்தான்.

''இப்போ எங்கே குடியிருக்கே?''

''இனிமேல்தான் பார்க்க வேண்டும், நாயர்!''


''ஓ...'' என்று இழுத்துச் சிரித்த நாயர், ''மூணு மாசத்துக்கு மேல் மதறாஸில் இருக்க இடம் இல்லாமல் காலம் ஓட்டி விட்டாயா? கெட்டிக்காரன்தான். இனிமேலும் கூடி எதுக்கு இடம் தேடணும்? இந்தப் பட்டணம் முழுக்க உனக்குச் சொந்தம்தான்'' என்றான் கேலியாக.

மூன்று மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் சென்னைக்குத் தான் வந்திருக்கும் தகவலை அவனிடம் சொல்லிக் கொண்டிருக்க விருப்பமில்லை சபேசனுக்கு. காரணம், ஊருக்குப் போன விஷயத்தைச் சொன்னால் அங்கிருந்து திரும்பி வர நேர்ந்த விவரங்களையும் சொல்லியாக வேண்டும். இந்த அநாவசியப் பேச்செல்லாம் எதற்கு? ஆகவே, அவன் மௌனமாக இருந்து விட்டுப் பின், ''இன்று ஒரு நாள் மட்டும் இங்கே படுத்துக்கொள்ளுகிறேன் நாயர்! சீக்கிரமாகவே எங்கேயாவது வாடகைக்கு இடம் பார்த்துக்கொள்ளலாம் என்றிருக்கிறேன்'' என்றான் பரிதாபமாக.

''எனக்கு ஆட்சேபனை இல்லை. அந்த மன்றோ துரையைக் கூடவா நான் விலைக்கு வாங்கியிருக்கிறேன்? அவன் உன் மாதிரி வருகிறவர்களுக்குக் காவல் போடத்தான் ராத்திரியும் பகலுமாய்க் குதிரையின் மேல் உட்கார்ந்துகிட்டு இருக்கிறான். ஆனால் ஒண்ணு. நீ அங்கே படுக்கிறதானால் கொஞ்சம் முன்னாடியே போய்ப் படுத்துக்க. ரெண்டு மூணு நாளா அந்தச் சாமந்திப்பூ சிங்காரி வந்து அவ்விடம் டிகாணா போடறாள். ராத்திரியெல்லாம் ஒரே அமர்க்களம் நடக்குது!'' என்றான் நாயர் குறும்பாக நகைத்துக் கொண்டே.

(தொடரும்)


"ஒரு
அழகு வாய்ந்த வஸ்து
எக்காலத்திலும்
ஆனந்தம் தரும்."
ஹகோபா
எம்பராய்டரி வேலைப்பாடு
அமைந்த துணிகள்
பான்லி கார்ப்பரேஷன் லிமிடெட்
16, அபோல்லோ தெரு, பம்பாய்-1



காட்சி 27

[சபேசன் வீட்டில் ஒரு பெரிய ஹால் சபேசன் அவசரமாக மாடிப்படியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருக்கிறார். பின்னால் மாலதியும் பேசிக் கொண்டே வருகிறாள்.]

மால: நீங்க என்ன பிரஸண்ட் பண்றதா இருந்தீங்க, சொல்ல மாட்டீங்களா ?

சபே: நான் சொல்ல மாட்டேன். நீ ஏன் நான் இல்லாத சமயத்துலே நாகராஜன் கொடுத்த கவரைப் பிரிச்சுப் பார்த்தே?

மால: நான்தான் சொன்னேனே! அந்தத் தியாகராஜன்..... ரொம்பத் தொந்தரவு செய்ததுனாலேதான் அப்படிச் செய்தேன்....

சபே: அவன் சொல்றதைக் கேக்கலாமா? அரைப் பைத்தியம். சித்தப் பிரமை கேஸ் !

மால: அவர் பேசறதை யெல்லாம் கேட்டா, அவர் அரைப் பைத்தியமா, இல்லே அயோக்கிய ராஸ்கலான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு.

சபே: இதுலே என்னசந்தேகம் வாழுறது?... இரண்டுத்துலே ஒண்ணு...... ஆல்ரைட், எனக்கு 'டைம்' ஆறது......

மால: எங்கே இவ்வளவு அவசரமாப் போறீங்க ?

சபே: நாதன் கம்பெனி ஏலத்துக்குப் போய் அந்தப் பெட்டியை ஏலம் போடாமல் தடுக்கணும்.

மால: நீங்க சொன்னதை நினைச்சுப் பார்த்தாலே எனக்கு வேடிக்கையாயிருக்கு. ஏலக்குக் கொடுக்கிறதுக்காக வெச்சிருந்த பரிசை, எதுக்காக அந்தப் பெட்டியி னுள்ளே போட்டீங்க ?

சபே: என்ன செய்யறது? அந்த மடையன் சுரேஷ் வந்துவிட்டான். அவன் கண்ணிலே அந்தப் பிரஸண்ட் பட்டிருந்தா, என்னே இலேசுலே விடுவானு அவன்? பிராணனே வாங்கிடுவான்...... அவனுக்குக் கொடுக்க எனக்கு மனசு இல்லே. அதனாலேதான் கபால்னு அந்தப் பரிசை உள்ளே போட்டுட்டேன். இந்த ஏலக் கம்பெனி நாதன், அந்தச் சமயம் பார்த்து வந்திருக்கு—பெட்டியைத் தூக்கிக்கிட்டுப் போயிடுத்து. போய் அதை ஏலம் போடாமல் நிறுத்தணும்.

மால: அது என்ன பரிசு சொல்ல மாட்டீங்களா?

சபே: நான் கொடுக்கிறபோது பார்த்துக்க...... ஆமாம்..... நாகராஜன் கவரிலே வெறும் பேப்பர்தான் இருந்ததுன்னு சொன்னியே, அதுக்கு அர்த்தம் கண்டுபிடிச்சியா ?

மால: எவ்வளவோ யோசிச்சுப் பார்த்தேன். எனக்குப் புரியலே இல்லே. ஆனா ஒண்ணு நிச்சயம்.

சபே: என்ன?

மால: அவர் ஏதோ பெரிய ஐடியாவிலே தான் இந்த மாதிரி வெறும் பேப்பரைக் கொடுத்துட்டுப் போயிருக்கார்.

சபே: சரி...... சரி..... டைம் ஆறது நான் ஏலத்துக்குப் போறேன்..... இல்லேன்னு அந்தப் பெட்டி ஏலத்துக்குப் போயிடும் !

காட்சி 28

(நாதன் அண்டு கம்பெனியில் ஏலம் நடத்தப் படும் கூடம்.

(கூட்டம் நெரிந்துத் தள்ளுகிறது. ஒரு பெரிய மேடை: அதில் நாதன் அமர்ந்திருக்கிறார். மேடைக்குக் கீழே வெகு சமீபமாகச் சுரேஷும் நாகராஜனும் நின்று கொண்டிருக்கிறார்கள். பக்கத்தில் நிர்மலா நிற்கிறாள். கூட்டத்தின் உள்ளே புகுவதற்கு வழி அறியாமல் சபேசன் கடைசியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார். அவர் அருகே ஒரு வேலையாள் நிற்கிறான்.)

சுரே: ரொம்ப தாங்க்ஸ், நிர்மலா. உன்னாலேதான் நாங்க சுலபமா முன்னாலே வர முடிஞ்சுது......

நிர்: இட் ஈஸ். ஆல்ரைட். ஆமாம், உனக்கு இன்னு ஏலத்துமேலே இன்ட்ரஸ்ட்?

சுரே: அதோ அந்தப் பெட்டி.... எப்படி யாவது அதை வாங்கிடணும்.... அதுக் காகத்தான்......

நிர்: அய்ய ! துருப் பிடிச்ச பெட்டி !

சுரே: அது உள்ளேதான் என் நெஞ்சின் உயிரே இருக்குது......

நாக : டேய்..... டேய்..... அந்தப் பெட்டிதான்டா அடுத்தது. ஏலம் போடறவன் அதைக் கையிலே எடுத்துட்டான்.


(கூட்டத்தின் கடைசியில்)

சபே: அய்யய்யோ! அந்தப் பெட்டியை ஏலம் போடறானே! என்னய்யா இது கும்பல்...... (உரக்க) நாதன்! நாதன்!.... அந்தப் பெட்டியை ஏலம் போடாதே !... (அவர்கள் காதில் விழாமல் இருப்பதைப் பார்த்து): போடறானே! ஏலம் போடறானே!

வேலையாள் : அந்தப் பெட்டி போனால் போவட்டுமே, ஸார் !

சபே: போடா, முட்டாள் !.... அது எப்படியாவது நம்ம கைக்குத்தான் வரணும். நாமே அதை ஏலத்துலே எடுக்க வேண்டியதுதான்.

வேலை: நம்ம பெட்டியை நாமே வாங்கறதா?



சபே: வேறே வழி இல்லே..... இரு. இரு.. ஆரம்பிச்சுட்டான்.....

(மேடை அருகே)

நாக: டேய், கரேஷ்..... அதோ ஆரம்பிக்கிறான். எவ்வளவு தூரம் மேலே போனாலும் விடாதே.....

கரே: கவலைப்படாதேடா.... நரும் பிடிச்ச பெட்டி..... அதை எவன்டா வாங்குவான்..... அஞ்சு, பத்துக்குப் போகும். அவ்வளவுதான்...... நமக்குத்தான் அது..... கவலைப்படாதே.

ஏலம் போடுபவர் (உரக்க): ஒரு சின்ன இரும்புப் பெட்டி...... இரண்டு ரூபா!....

கரே: நான் எடுத்துக்கறேன்....

சபே (கோடியிலிருந்து கையைத் தூக்கி): மூணு ரூபா !

ஏலம்: மூணு ரூபா !

கரே: நாலு ரூபா !

சபே: அஞ்சு!

கரே: ஆறு !

நாக: என்னடா இது. அஞ்சு ஆறுன்னு சொல்லிக்கிட்டிருக்கே. சுத்த கஞ்சன்...... (உரக்க) பத்து ரூபா !

ஏலம் (திகைத்து): பத்து ரூபா !

சபே: இருபது !

கரே: பின்னாலே யார்ரா அவன்?..... மேலே ஏத்திக்கிட்டே போறான்..... இவங்க ஆளாலே இருப்பானு ?

ஏலம்: இருபது...... ஒரு தரம்!

நாக: இருபத்தஞ்சு !

வேலை (சபேசனிடம்): ஸார்.... முன்னாலே அவங்க ஆளையே நிறுத்தி வைச்சுக்கிட்டுச் சும்மா விலையை ஏத்திக்கிட்டே போறாங்க. நீங்க விட்டுடுங்க....

ஏலம்: இருபத்தஞ்சு..... ஒரு தரம்....

சபே: முப்பது.

கரே: முப்பத்தஞ்சு....
சபே: அம்பது !
நாக (கரேஷிடம்): மேலே கேள்டா....
கரே: பணத்துக்குத் தகராறுடா....

ஏலம்: அம்பது ஒரு தரம்...... இரண்டு தரம்..... அம்பது.....

நாக: அறுபது......

கரே: டேய், வேணும்..... என் சம்பளத்திலே கால் பங்குடா அது!

சபே: எண்பது!....

(இந்தச் சமயத்தில் சபேசன் கும்பலில் தடுமாறி விழுகிறார். எழுந்து உருக்குலைந்து நிற்கிறார்.)

சபே (வேலையாளிடம்): டேய்.... அது எவ்வளவு மேலே போனாலும் விடாதே... கேட்டுக்கிட்டே இரு..... நான் வெளியிலே காரிலே இருக்கேன். கும்பல் தாங்கலே. எப்படியாவது, என்ன விலே கொடுத்தாவது பெட்டியை வாங்கிக்கிட்டு வந்துடு...

(போகிறார்)

ஏலம்: எண்பது...... ஒரு தரம்.....
நாக: தொண்ணூறு !
கரே: அய்யய்யோ !....
வேலே: நூறு ரூபா !.....

நாக: நூத்திப் பத்து!..... நூத்தி இருபது! நூத்தி முப்பது !.....



நாதன் (திகைத்திருந்தவர் கரேஷைப் பார்த்துப் புன்முறுவலும் பூக்கிறார். ஏலம் போடுபவனே நிறுத்தித் தாமே பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு): நூத்தி முப்பது!

நாக: நூத்தி நாற்பது !

கரே: அய்யய்யோ ! என்னடா இது அக்கிரமம்..... நீதானேடா நூத்திமுப்பது சொன்னே. அதுக்கு மேலே நீயே கேக்கிறியே. அவன் பின்னலேயிருந்து கத்தினப்புறம் நீ மேலே கத்துடா......

நாக: உங்கிட்ட எவ்வளவு பணம் இருக்கு?

கரே: நூத்தி எழுபத்திரண்டு ரூபா....

நாக: சரி..... அதுவரைக்கும் விடற இல்லே......

நாத: நூற்றுநாற்பது.... ஒரு தரம்....
வேலே : நூத்தி அம்பது !
நாத: நூத்தி அம்பது......
நாக: நூத்தி எழுபத்திரண்டு !

வேலே: என்னடா இது பேஜாரு!...... போல்....... சும்மா நிறுத்துப்பா ! இரு நூத்தி அம்பது! என்னு சொல்றே!... இரு நூத்தி அம்பது !

நாத: இருநூற்றி அம்பது. ஒரு தரம்... இரண்டு தரம்.... இருநூற்றி அம்பது....

நாக: கரேஷ்..... இப்ப என்னடா செய்யறது.....?

கரே: இதுக்கு மேலே கேட்டா.... நீ என்னே அடமானம் வெச்சுட்டுத்தான் பெட்டியை எடுத்துக்கிட்டுப் போகணும்.

நாத: இருநூற்றி அம்பது.... மூணுதரம்! உம்..... (பக்கத்திலிருப்பவரிடம்) அதோ கடையிலே நிற்கிற ஆள்...... அவனே உள்ளே கூப்பிட்டுப் பணத்தைக் கலெக்ட் பண்ணிக்கிட்டு இதைக் கொடுத்தனுப்பிடு... மத்ததை நீயே கவனிச்சுக்க.... எனக்குக் கொஞ்சம் வேலே இருக்கு.....

(மேடையை விட்டு இறங்கிசுரேஷைச் சைகை செய்து அழைக்கிறார். சுரேஷ், நாகு, நிர்மலா மூவரும் அவரைப் பின் தொடர்ந்து செல்கின்றனர்.)

நாதன் (கூட்டத்தை விட்டு ஒதுங்கி, ஒரு மூலேயில்): தம்பி, உன் பேர் சுரேஷ் இல்லே...... வெரி குட்..... ரொம்ப கெட்டிக்காரத்தனமாகவிலேயைஏத்தி விட்டே.....

கரே: நான் நிஜமா.....


நாத: நான் உன்னே நிர்மலாவோடபார்த்திருக்கேனே ...... வெரி குட்...வெரி குட்.. நான் உன்னோட அப்புறம் பேசணும். ஒண்ணுமில்லே ஓட்டைப் பெட்டி. அதுக்குஇருநூத்தி அம்பது ரூபா வாங்கிக் கொடுத்துட்டியே...!

கரே: ஸார்....!

நாத: நான் உன்னே அப்புறம் பார்க்கிறேன்..... அங்கே போய் வேலையைக் கவனிக்கணும்..... வாம்மா நிர்மலா!

(நிர்மலாவுடன் அவர் போய் விடுகிறார்.)

சபாஷ், ஆர்வம்!



"குஸ்திச் சண்டையில் உங்களுக்கு எவ்வளவு நாட்களாக ஆர்வம்?"

"எதற்காகக் கேட்கிறீர்கள்?"

"உங்களுக்கும் இந்த விளையாட்டுக்கும் வெகுதூரம் ஆயிற்றே!"

"அதென்ன அப்படிச் சொல்லி விட்டீர்கள்? நான் பல் டாக்டர்: பொய்ப் பல் கட்டுகிறேன் என்று தெரிந்தும் இப்படிக் கேட்கலாமா?"

நாக (சுரேஷை): ஏண்டா ராஸ்கல்..... நிர்மலா அப்பனுக்கு லாபம் வரதுக்காகச் சும்மா விலையை ஏத்தி விட்டுட்டுக் கடைசியிலே வாங்காம வந்துட்டே, இல்லே?

சுரே: அப்படியில்லேடா.... அவர்தான் அப்படி நினைச்சுக்கிட்டிருக்கார்.

நாக: இனிமேலும் என்னை ஏமாத்த முடியாது சுரேஷ்..... ஏலத்துலே விலையை ஏத்திவிட்டு நிர்மலா அப்பாகிட்டே நல்ல பேர் சம்பாதிச்சுக்கிட்டே..... மாலதிகிட்ட நான்தான் நாகராஜன்னு நிரூபிக்க எந்தக் கடிதாச அவளிடமோ, அதைப் பெட்டிக்குள்ளே போட்டுத் தொலைச்சுட்டே! இப்ப திருப்திதானே?

சுரே: நாகு..... என்னை நம்புடா.....

நாக: இனிமேல் உன் முகத்துலேகூட முழிக்க மாட்டேன். என்னைச் சாகடிச்சு, சித்தப் பிரமை பிடிக்க வெச்சு, என் காதலை இருநூத்தி அம்பது ரூபாய்க்கு ஏலத்துலேயும் விட்டுட்டியேடா படுபாவி!

(நிர்மலா வருகிறாள்.)

நிர்: சுரேஷ்! நீ ஒரு ஜீனியஸ்! எங்கப்பாவை நைஸா கைக்குள் போட்டுக்கிட்டே. அவர் உன்பத்தியேதான் பேஸ்றார்!....... இனிமே நம்ம மேரேஜ் ரொம்ப ஈஸி!.....

சுரே: நிர்மலா.....

நிர்: சுரேஷ்.... அந்தப் பெட்டியை இருநூத்தி அம்பது ரூபிஸுக்கு யார் எடுத்தது தெரியுமா?..... சபேசன்......!

சுரே (திகைத்து): நிஜமாவா?

நிர்: யெஸ்.... இப்பத்தானே பார்த்துட்டு வரேன்...... நம் பெட்டியைத் தாமே விலைக்கு வாங்கியிருக்கு! ஸெமி ஜோக்!

சுரே: நீ சொல்றதை நம்ப முடியலியே, நிர்மல்!

நிர்: பெரிய ஆள் நீ! ஒண்ணுமே தெரியாத மாதிரி ஆக்ட் பண்றியே! அவர் வருவார்னு தெரிஞ்சு, முன்னாலே நின்னுக்கிட்டு விலையை ஏத்திக்கிட்டே போனியே! எங்கப்பாவுக்கு உன் மேலே ஒரே குஷி!... கங்க்ராஜுலேஷன்ஸ் ..... டா....டா....!..

(போய் விடுகிறாள்)

சுரே: நாகு!

நாக: கங்க்ராஜுலேஷன்ஸ்..... நீ இப்படிப்பட்ட அயோக்கிய ராஸ்கல்னு நான் நினைக்கலே. அந்தக் கடிதாச சபேசன் கையிலே போய், நம்ப திட்டம் அம்பலமாகி நான் மாட்டிக்கிட்டு முழிக்கணும்னு, பிளான் பண்ணி நீ வேலை செய்திருக்கே..... உனக்கு நான் என்னடா கெடுதல் செய்தேன்...?

சுரே: நாகு.... எப்படியாவது என் திட்டப்படி உன் கையிலே இன்னும் பத்து நாள்லே பத்தாயிரம் வரலேன்னு, என்னைச் செருப்பாலே அடி. வாங்கிக்கறேன். மாலதிகிட்டே நீதான் நாகராஜன்னு நிரூபிக்கவும் நானே ஏற்பாடு பண்றேன்.

நாக: இனிமே உன்னுடைய எந்தத் திட்டத்துக்கும் என்னாலே ஒத்துக்க முடியாது. சபேசன் கடுதாசியைப் படிக்கிறதுக்கு முன்னாலே நானே போய் எல்லாத்தையும் ஒத்துக்கறேன்.....

சுரே: டேய் வேண்டாண்டா.... அப்போ என்ன நடக்கும் தெரியுமா?

நாக: எனக்குப் பத்தாயிரம் பணம் கிடைக்கப் போறதில்லே. அவ்வளவுதானே? ஆனா நான் சாகலேன்னு மாலதி தெரிஞ்சுப்பா. எனக்கு அது போதும். கல்யாணத்தை எதிர்பார்த்துக் காதலையே கோட்டை விடறதை விட, இது எவ்வளவோ மேல்!

சுரே (ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவனாக): ஆல்ரைட்! உன் இஷ்டப்படி செஞ்சுக்க.... நீ இனிமே என் ரூம்லே தங்க வேண்டியதில்லே... நேரே இப்பவே என் ரூமுக்குப் போய் உன் துணி, மணியெல்லாம் மூட்டை கட்டிக்கிட்டு நீ புறப்படலாம்.

நாக: அயோக்கிய ராஸ்கல்! நீ கெஞ்சிக் கேட்டாக்கூட உன் ரூம்லே நான் தங்கமாட்டேண்டா. பம்பாய்த் தெருவிலே பிச்சை எடுத்தாலும் எடுப்பேன் – உன்னை அண்டிப் பிழைக்க மாட்டேன்.

சுரே: சே! பேசாதே! வெட்கங்கெட்டவன். கெட் அவுட்னு சொன்னப்புறம் தானேடா வெளியிலே போறே..... வந்து உன் துணிமணி பெட்டி படுக்கையெல்லாம் எடுத்துக்கிட்டுப் போய் அழு!

(சுரேஷ் நாகராஜனை இழுத்துச் செல்கிறான்.)

(தொடரும்)

வட்ட மேஜை

★ புனிதப் பணி

★ ஆரம்ப சாதனை!

★ ஆஸ்கார் பரிசு!

கல்கி ராணுவ மலரை வெளியிட்டதற்காக எந்த விதத்தில் தங்களுக்கு நன்றி செலுத்துவது என்றே இந்திய ராணுவத்தினராகிய எங்களுக்குத் தெரியவில்லை. இந்தியா–பாகிஸ்தான் எல்லையில், உங்களையெல்லாம் விட்டுப் பிரிந்து வெகுதூரத்தில் நம் தாய் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம் நாங்கள். இங்குள்ள தமிழர்கள் அனைவரும் ஒருவர் மாற்றி ஒருவராக ராணுவ மலரைப் பகிர்ந்து கொண்டு ஆழ்ந்து படித்தோம்.

ராணுவத்தின் பல்வேறு அம்சங்களையும் அழகாக இணைத்துத் தந்த தங்களுடைய நன்முயற்சியைப் போற்றிப் பாராட்டுகிறோம். இவற்றையெல்லாம் படித்து விட்டு நம் இளைஞர்கள் தாய்நாட்டைக் காக்கும் புனிதப் பணியில் மேலும் உற்சாகத்துடன் பங்கு பற்ற முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

களம்

6–12–65 கே. சந்திரசேகரன்

உணவு விஷயத்தில் நாட்டிலுள்ள பயங்கரமான நெருக்கடி நிலைமை பற்றி மந்திரிகளும் கவர்னர்களும் நாள் தவறாமல் புலம்புகிறார்கள்.

இந்நிலையில்தான் இந்திய உணவுக் கார்ப்பரேஷனின் திருவனந்தபுரம் ரீஜனல் ஆபீஸ் விளம்பரம் ஒன்று பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. 23–11–65 தேதியிட்ட அவ்வறிக்கையில் கேரளத்தில் உள்ள உணவுக் கார்ப்பரேஷன் கிடங்குகளில் குவிந்திருக்கும் 'சேதமான, தரக் குறைவான' உணவு தானியங்களை விற்பனை செய்ய வர்த்தகர்களிடமிருந்தும், மற்றோரிடமிருந்தும் டெண்டர்கள் கோரப்பட்டிருந்தன. இந்தக் கிடங்குகளிலுள்ள உணவு தானியங்களை மனிதர்கள் பயன்படுத்தக் கூடாது. இது ஒரு நிபந்தனை! கோழிப்பண்ணை, மாட்டுப் பண்ணை, நெசவுப் பசை, எரு ஆகிய தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

திருவனந்தபுரம் ரீஜனல் ஆபீஸிலிருந்து இந்த டெண்டருக்கான விண்ணப்பத்தாளை வரவழைத்துப் பார்த்தபோது அதிர்ச்சி ஏற்பட்டது. என்ன அக்கிரமம்! எத்தனை வியர்த்தம்! திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழை, கொச்சி, திருச்சூர், கள்ளிக்கோட்டை, கண்ணனூர் ஆகிய இடங்களிலுள்ள அரசாங்கக் கிடங்குகளில் மொத்தம் 3337 அரிசி மூட்டைகள் பாழ்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த எடை 231 டன்கள்.

இந்த அரிசி மூட்டைகள் தமிழ்நாடு, ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசம், ஆந்திரா, பர்மா, தாய்லாந்து, அமெரிக்கா ஆகியவிடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பச்சை-புழுங்கல் அரிசி மூட்டைகளாகும். கோழிகளுக்கும், ஆடு மாடுகளுக்கும், எருவுக்கும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்று அட்டவணையும் ரகவாரியாகத் தந்துள்ளார், உணவுக் கார்ப்பரேஷனின் திருவனந்தபுரம் ரீஜனல் மானேஜர் அந்த விண்ணப்பத் தாளுடன்.

வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி ஒரு வேளை உணவையும் ஒழித்துக் கட்டுவதனால் மிச்சப்படுவது யாருக்குப் பயன்படுகிறது? நூறுபேர்கள் செய்து வந்த உணவு தானிய வர்த்தகத்தை ஐந்து பேர்கள் தவறு செய்தார்கள் என்பதற்காக அத்தனை பேர்களையும் உதறித் தள்ளி ஜனநாயக சோஷலிசத்தைச் செயல்படுத்த முனைந்திருக்கும் காங்கிரஸ் அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இன்று அரிசி எருவுக்குப் பயன்படுத்தப்படுகிறது. 3337 மூட்டை அரிசி!

மூன்றே மாத அரசாங்க வர்த்தகத்தில் அதிகாரிகளின் ஆரம்ப சாதனை!

காங்கிரஸ் ஆட்சியாளர்கள் நிர்வாகக் காரியங்களை மட்டுமே கவனித்துக்கொண்டு, உணவு விஷயத்தை முன்போல் வர்த்தகர்களிடமே விடுவதுதான் நேர்மையான முறை என்பதையும், நாட்டின் பொருளாதாரத்துக்கும், சுபிட்சத்துக்கும் வர்த்தகர்கள்தான் ஆணிவேர் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கொல்லம்,

9–12–65 எஸ். கிருஷ்ணராஜ்

"மை பெயர் லேடி" படத்துக்கான விமர்சனம் மிகத் தரமாக அமைந்திருக்கிறது. இத்தகைய விமரிசனத்துடன் படத்தின் சிறப்பான சில அம்சங்களைத் தனியாகக் குறிப்பிட்டு நம் படாதிபதிகள் கவனத்திற்குக் கொண்டு வருவது தமிழ்ப் பட உலகுக்குச் சிறிது பயனுடையதாயிருக்கும்.

விமரிசனத்தில் ஒரு சிறு தவறு இருக்கிறது. ரெக்ஸ் ஹாரிஸனுக்கு இதற்கு முன் ஆஸ்கார் பரிசுகள் கிடைத்ததில்லை. "மை பெயர் லேடி" தான் சிறந்த நடிகர்களுக்கான ஆஸ்காரை அவருக்கு முதன் முதலாகப் பெற்றுத் தந்தது. இந்தப் பரிசு விஷயத்தில் இன்னொரு வேடிக்கையான அம்சமும் உண்டு. இக்கதை நாடக மேடையில் நடிக்கப்பட்டபோது கதாநாயகியாக நடித்துப் பெரும் புகழ் பெற்ற ஜூலி ஆண்ட்ரூஸ் தான் படத்திலும் நடிப்பார் என்று யாவரும் எதிர்பார்த்தனர். அந்த அதிர்ஷ்டம் ஆட்ரி ஹெப்பர்னுக்கே கிடைத்தது. ஆனால் சிறந்த நடிகைக்கான ஆஸ்கார் பரிசை ஆட்ரி ஹெப்பர்னிடமிருந்து தட்டிக்கொண்டு போய் விட்டாள் ஜூலி ஆண்ட்ரூஸ் – 'மேரி பாப்பின்ஸ்' என்ற டிஸ்னியின் படத்தில் சிறப்பாக நடித்ததற்காக!

நாகர்கோயில்,

5–11–65 எம். சிவசுப்பிரமணியன்

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10






வெள்ளை டெட் பவுடரினால் மட்டும்தான் உங்கள் வெள்ளைத் துணிகளை பளிச்சிடும் வெண்மையுடனும் வண்ண நிறத் துணிகளை துப்புரவாகவும் வெளுக்க முடியும். நவீன டெட் ஒன்றுதான் துணிகள் பாழாகாமல் சலவை செய்ய உதவுகிறது.

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ் லிட் பம்பாய்

Shilpi SOM 20 Tam

TERED NO. M. 4392
red as a Newspaper in Ceylon

மென்மை நயம் • தண்மை நயம் • இனிமை நயம்



பனாமா

இழுக்க இழுக்க
இன்பம் இறுதிவரை

கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட்.
பம்பாய்-56
பாரதத்தில் இத்தகைய
தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது